REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Established 19 Feb. 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

PATHUKAVALAN

மலர் 124
இதழ் 20, 21
1999.12.15 – 30
கிறிஸ்மஸ் சிறப்பிதழ்
விலை 10 ரூபா

# 1999 நத்தார் 2000 யூபிலி ஆண்டு

# சிறப்பு மலர்

JUBILEE
CHRIST YESTERDAY TODAY FOREVER
A. D. 2000

IUBILAEUM A.D. 2000

## ஆயரின் யூபிலி வாழ்த்து

1999 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவில் யூபிலி ஆண்டு மலருகின்ற வேளையில் எம் மண்ணில் நடக்கின்ற முடிவற்ற போரும் இராணுவ நடவடிக்கையும் அதன் இடையில் திணிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலும் மக்களுடைய வாழ்வைப் பெரிதும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. பயமும் நிம்மதியற்ற நிலையும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க நிலையும் எம் மக்களை இவ்வேளையில் குழப்பியுள்ளது வருத்தத்திற்குரியதாகும்.

இந்தக் குழப்பமான சூழ்நிலையிலும் உலகெங்கிலும் இவ் விழாவினைக் கொண்டாடுகின்ற அனைவரோடும் இணைந்து ஆண்டவர் இயேசுவின் இரண்டாயிரமாவது பிறப்பு விழாவைக் கொண்டாட நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இயேசு கிறிஸ்து உலகின் ஒரே இரட்சகர். எம்மை எல்லாவித நோய்களிலிருந்தும் குணப்படுத்தவும், எல்லாவித பிரிவினைகளிலிருந்தும் ஒன்றிணைக்கவும், யுத்த மேகங்கள் அகன்று அமைதியையும் சமாதானத்தையும் தரவும் நீதியின் அரசராக எம்மிடையே பிறக்கின்றார்.

கிறிஸ்து பிறப்பு விழா அன்பையும், பகிர்தலையும், சகோதர உணர்வையும், அயலவர் மட்டில் கரிசனையையும், அல்லல்படுகின்றவர்கள் மட்டில் உதவியையும் கொடுக்க எமக்கு எப்போதும் அழைப்பு விடுக்கின்ற விழாவாகும்.

தமிழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற எல்லா விதமான துன்பங்கள், துயரங்கள் மத்தியில் யூபிலி விழா நாயகனுடைய வருகை முழு மனித விடுதலையையும் முழுமையான சுதந்திரத்தையும் வருகின்ற மிலேனிய ஆண்டு முழுவதும் இறையருளையும் ஆசியையும் அள்ளி வழங்கும் வருகையாக இருக்க நெஞ்சம் நிறைய வாழ்த்துகின்றோம்.

✠ யாழ் ஆயர்
தோமஸ் சவுந்தரநாயகம்





**இயேசு கிறிஸ்து உலகின் ஒரே இரட்சகர்
புதிய வாழ்வின் அப்பம்.**

**யூபிலி ஆண்டை வீடுகளில் ஒளியேற்றி ஆரம்பியுங்கள்**

யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள்
யாழ் மறைமாவட்ட மக்களுக்கு அழைப்பு

(இறுதிப்பக்கத்தில் காணலாம்)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிசெம்பர் 24 நத்தார் திருவிழிப்பின்போது யூபிலி ஆண்டு ஆரம்பமாகின்றது

திருச்சபையின் மாபெரும் யூபிலி ஆண்டு 2000 நத்தார் திருவிழிப்பு நாளாகிய டிசம்பர் 24ம் திகதி ஆரம்பமாகும். புனிதமான இத்தினத்திலே திருச்சபையானது மூன்றாவது மிலேனியத்தின் வாயிலில் பிரவேசிக்கின்றது. இந்த யூபிலி விழா ரோமாபுரியிலும், புனித பூமியிலும், தலத் திருச்சபைகளிலும் ஏக காலத்தில் கொண்டாடப்படும்.

யூபிலி ஆண்டை ஆரம்பிக்குமுகமாக திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் ரோமாபுரியிலுள்ள புனித பேதுருவானவர் பேராலயத்தின் திருக்கதவை வெள்ளிச் சுத்தியல் கொண்டு மும்முறை தட்டுவார். அப்போது கதவு திறக்கப்பட அவ்வழியே ஆலயத்துட் பிரவேசிப்பார். இதுவே புனித ஆண்டை ஆரம்பிக்கும் திருச்சடங்காகும்.

கிறிஸ்துவின் மனித அவதாரத்தின் 2000வது ஆண்டை நினைவுகூரும் இந்த நத்தார் திருநாளானது யூபிலி ஆண்டின் புதுப்பொலிவுடன் ஆரம்பித்து வைக்கும். அன்று ஆரம்பிக்கும் புனித ஆண்டு 2001வது ஆண்டு ஜனவரி 6ம் திகதி திருக்காட்சி விழாவுடன் முடிவடையும்.

## யூபிலி ஆண்டை வரவேற்கும் முகமாக டிசம்பர் 24ம் திகதி இரவு வீடுகளில் ஒளி ஏற்றுங்கள்

கிறிஸ்துவின் மனித அவதாரத்தின் 2000வது ஆண்டாகிய மாபெரும் யூபிலி ஆண்டின் ஆரம்பத்தைக் குறிக்க டிசெம்பர் 24ம் திகதி வீடுகளில் விளக்கேற்றி அதனைச் சிறப்பிக்குமாறும், அவ்வேளையில் சமாதானத்துக்காக செபிக்குமாறும் யாழ். மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. A.C. கிறிஸ்தோபர் அடிகள் கேட்டுள்ளார்.

இதனை யாழ். பேராலயப் பங்கில் செயற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் யாழ். மறைக் கோட்டத்திலுள்ள ஆலயங்களின் பங்குத் தந்தையர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக காவலனுக்கு கருத்துத் தெரிவித்தார்.

## பாதுகாவலன் ஒளிவிழா

சாதாரண செய்திகளை அசாதாரணமாக அறிக்கையிடுவதிலேயே பத்திரிகையாளரின் திறமை தங்கியுள்ளது. பாதுகாவலன் ஒளி விழாவில் பிரதம விருந்தினர் - கிறிஸ்தோபர் அடிகளார்.

பாதுகாவலன் நிருபர்கள் அச்சகப் பணியாளர்களுக்கான கிறிஸ்மஸ் ஒளி விழாவிற்கு 12-12-99 ஞாயிறு தினம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கிறிஸ்தோபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும்போது பாதுகாவலன் செய்தியாளர்கள் செய்தி மோப்பம் கொண்டவர்களாய் செய்திகளைத் தேடிப்போக வேண்டும். அன்றாட நிகழ்வுகளையும் ஆன்மீக விடயங்களையும் தருகின்ற வேளையில் நீங்கள் சமாதானத்தின் தூதுவர்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது என்றார்.

## பொதுநிலையினர் பங்களிப்பு திருச்சபைக்கு இன்றியமையாதது

யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு கடந்த 11ம் திகதி யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடத்திய எழுச்சிக் கருத்தரங்கின்போது ஆணைக்குழுத் தலைவர் அருட்திரு R. H. சகாயநாயகம் அடிகள் பொதுநிலையினர் திருச்சபையில் சகல உரிமைகளையும் கடமைகளையும் கொண்டுள்ளனர் என்றும் அவர்களின் பங்களிப்பு யாழ் திருச்சபைக்கு மிகவும் இன்றியமையாதது என்றும் அவர்கள் உறக்க நிலையிலிருந்து விழித்து புத்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்றார்.

## மனித நேயம் மிக்க கிறிஸ்தவ சேவையாளன் - சேர் சிற்றம்பலம் கார்டினரின் நூற்றாண்டு விழாவில் குரு முதல்வர் ஜே. பி. இ. செல்வராஜா அடிகள்

மாபெரும் தொழிலதிபரும் பரோபகாரியுமான சேர் சிற்றம்பலர் கார்டினரின் நூற்றாண்டுவிழா ஞாபகார்த்த திருப்பலி வைத்தியசாலையிலுள்ள ஆரோக்கிய மாதா ஆலயத்தில் நிறைவேற்றப்பட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அச்சுவேலியின் மைந்தனாகிய இவர் 06-01-99 இல் பிறந்தார். சட்டப்படிப்பு கற்றிருந்தபோதும் அத்துறையில் பிரவேசிக்க விரும்பாது, சிலோன் தியேட்டர்ஸ் நிறுவனத்தை ஏற்படுத்தி தொழிலதிபரானார். பின்னர் இவர் 15க்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு உரிமையாளராகி சர்வதேசப் புகழ் பெற்ற தொழிலதிபரானார்.

ஆனால் அவருக்கு நிலைத்த புகழ் கிடைத்தது அவரது அறச்செயல்களுக்காகவே. மனித நேயம் மிக்க இவர் தமது செல்வங்களை ஏழை எளியவர்களுக்கு தாராளமாக வழங்கினார். திருச்சபைக்கும் சமூகத்துக்கும் அவர் ஆற்றிய பணிகள் எண்ணற்றவை. அச்சுவேலியிலுள்ள புனித திரேசா பாடசாலை, வைத்தியசாலை, ஆலய கோபுரங்கள், விளையாட்டு மைதானம் இவையனைத்தும் தாம் பிறந்த அச்சுவேலி மண்ணுக்கு அவர் செய்த அன்பளிப்புகளே. பாடசாலையை நிறுவியது மட்டுமல்லாமல் அதில் பணிபுரிய கார்மேல் சபைக் கன்னியரை அழைத்து வருவதிலும் அவர் பெருமுயற்சி எடுத்தார்.

இவை தவிர தேலகட்டி செபமாலைதாசர் சபையினருக்காக அன்பகம், அமலிவனம் ஆகியவற்றையும் அமைத்துக் கொடுத்தார். வளலாயில் குருக்களின் ஓய்வுகால இல்லம் ஒன்றையும் கொழும்பில் ஒரு விடுதியையும் அளித்தார். புனித பத்திரிசியார் கல்லூரியில் வகுப்பறைகளையும் கட்டிக் கொடுத்தார்.

இவர் திருச்சபைக்குச் செய்த பணிகளுக்காக, புனித சில்வெஸ்டர் செவாலியர் பட்டமும், புனித கிரகோரியார் செவாலியர் பட்டமும் திருத்தந்தையால் இவருக்கு வழங்கப்பட்டன. சமூக, தேசிய, சர்வதேச ரீதியில் ஆற்றிய பணிகளுக்காக பிரிட்டிஷ் அரசினால் "சேர்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## தீவக மறையாசிரியர்களுக்கு மீள்பயிற்சி வகுப்புக்கள்

தீவக மறையாசிரியருக்கான அடிப்படை விசுவாச சத்தியம் பற்றிய விளக்கப் பாசறையொன்று கரம்பொன் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் டிசம்பர் 5 - 7ம் திகதிகளில் நடைபெற்றது. இப் பாசறையில் நாரந்தனை, ஊர்காவற்றுறை, கரம்பொன், நெடுந்தீவு பங்குகளைச் சேர்ந்த 63 மறையாசிரியர்கள் பங்குபற்றினர்.

அருட்தந்தையர்கள் மொண்போட், மௌலிஸ், சனிஸ்ரன், ஜூட் நிக்சன், யேசுதாசன், அருட்சகோதரர் நிக்சன், மறையாசிரியர் ஜெயசீலன், அருட்சகோதரி மரியகொறற்றி ஆகியோர் பாசறையை நெறிப்படுத்தினர்.

இறுதி நாளன்று அனைவரும் சாட்டி மாதா கோயிலுக்கு யாத்திரையாகச் சென்று அங்கு யாழ் மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. A. C கிறிஸ்தோப்பர் அடிகளால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

முதல்வரவர்கள் தமது திருவுரையில் "நீங்கள் ஆயனைப் போல நல்ல மேய்ப்பர்களாக நலிவுற்றோரை உறுதிப்படுத்தி துன்பத்தில் ஆழ்ந்திருப்போருக்கு ஆறுதலளித்து கடவுளை மாட்சிமைப்படுத்துங்கள்" என்று கூறினார்.

மேலும் அவர் மறையாசிரியர்கள் ஒன்றுபட்டு செயல்படுதல் அவர்களது முன்னேற்றத்துக்கு அதிக வாய்ப்பினை அளிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## மக்கள் நூற்றாண்டாக திகழச் செய்க

"அடுத்த நூற்றாண்டை மக்கள் நூற்றாண்டாக திகழச் செய்ய அனைவரும் பாடுபட வேண்டும்" என்று தென்னாபிரிக்க அரசியல் தலைவரான நெல்சன் மண்டேலா கேப்டவுனில் நடைபெற்ற உலக மதங்களின் மன்றத்தில் கூறினார்.

"இந்நூற்றாண்டு போதிய அழிவுகளையும், அநீதிகளையும், சச்சரவுகளையும் மற்றும் துன்பங்களையும் சந்தித்து விட்டது. இந்நூற்றாண்டு முடிவடையும் இவ்வேளையில் நாம் மனித முன்னேற்றத்துக்கு உழைப்பதற்கு சபதம் பூண வேண்டும். உலகில் சர்வாதிகாரத்துக்கும், அடக்குமுறைக்கும் எதிராகப் போராடி அவற்றை ஒழிப்பது சாதாரண மக்களேயன்றி அரசர்களும், இராணுவ ஜெனரல்களுமல்ல" என்று அவர் மேலும் கூறினார்.

106 வருடங்களில் மூன்றாம் முறையாக கூடியிருக்கும் உலக மதங்களின் மன்றம் புதிய மிலேனியத்தில் உலகின் ஒழுக்கம் அமைதிக்காக குரல் கொடுப்பதையே இக் கூட்டத்தின் நோக்கமாகக் கொண்டுள்ளது. இக் கூட்டத்தின் போது மண்டேலாவின் மனிதாபிமானத்திற்காக ஜூலியற் ஹெரலிஸ்டர் விருதும், அவரது அகிம்சைப் போராட்டத்திற்காக மகாத்மா காந்தி - மாட்டின் லூதர் கிங் விருதும் வழங்கப்பட்டன.

## மடுத் திருத்தலம் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு மன்னார் மறைமாவட்டக் குருக்கள் கண்டனம்

### மடுவை சமாதான பிரதேசம் ஆக்குமாறு வேண்டுகோள்

மடுத் திருப்பதி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலைக் கண்டித்து மன்னார் மறைமாவட்டக் குருக்கள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் மறைமாவட்டக் குருக்களாகிய நாம், 1999 நவம்பர் 20ஆம் திகதியன்று மடுத் தேவாலயத்தின் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டு பெண்கள், சிறுவர் உட்பட 31 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதையும், 64 பேர் படுகாயம் அடைந்ததையும் குறித்து ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைந்துள்ளோம்.

இத்திருத்தலத்தில் தஞ்சமடைந்திருந்த 3500 அப்பாவிப் பொதுமக்களில் சிலரே இத் தாக்குதலுக்குட்பட்டவராவர். இந்த வன்முறையும், ஆலயம் மாசுபடுத்தப்படுதலும் இத்திருத்தலத்தின் 450 வருட கால வரலாற்றில் கேள்விப்படாத தொன்றாகும். மடுத் திருத்தலமானது கடந்த நான்கு நூற்றாண்டுகளாக நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் மக்கள் யாத்திரை மேற்கொள்ளும் புனித தலமாக விளங்கி வந்ததுடன், கத்தோலிக்கர் மட்டுமல்லாது பிறமத பக்தர்களினதும் மதிப்பையும், வணக்கத்தையும் பெற்றுள்ளது. யாத்திரீகரது தேவைகள் ஆலய நிர்வாகத்தினரால் கவனிக்கப்பட்டன. மேலும் கடந்த 15 வருடகால போராட்டம், கலவரங்களின்போது ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு இது பாதுகாப்பான புகலிடமாக இருந்து வந்துள்ளது.

இந்த வன்செயலையும், அவசங்கையையும் கண்டனம் செய்யும் அதே வேளையில் எமது ஆயர் இதற்குமுன் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் விடுத்த வேண்டுகோளை நாம் மிகவும் வலியுறுத்துகிறோம். மடுத் தேவாலயத்தையும் அது அமைந்துள்ள இடத்தையும் ஒரு யுத்த சூனியப் பிரதேசமாக்கி இந்தத் தலத்தின் புனிதத்தன்மையை மதித்துப் பேணவும், ஏற்கனவே திருச்சபை அதிகாரிகளால் எல்லை குறிக்கப்பட்ட ஆலயச் சுற்றாடலில் மோதல்களைத் தவிர்த்துக்கொள்ளவும், அதனை இராணுவ நடவடிக்கைகளுக்காகவோ, அரசியல் இலாபத்துக்கோ பயன்படுத்தாதிருக்கவும், பக்தர்கள் எவ்வித அச்சமோ தடையோ இன்றி அமைதியாகத் தமது யாத்திரையை மேற்கொள்ள வழிசெய்யவும் வேண்டுமென்ற ஆயரின் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

எமது இந்தக் கோரிக்கையானது போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இரு சாராரினதும், சம்பந்தப்பட்ட அனைவரினதும் உடனடிக் கவனத்தை பெறுமென மனதார நம்புகிறோம்.

## 2000ம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் தமிழ் இளைஞர்

2000ம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் சாதனை பதியப்பட்ட இலங்கைத் தமிழ் இளைஞர் அருளானந்தம் சுரேஷ் ஜோக்கிம் தனது 31 வயதுக்குள் ஏழு அகில உலக கின்னஸ் சாதனைகளைப் படைத்திருக்கும் இவர் புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர். தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார்.

சுரேஷ் தமது பன்னிரண்டாவது வயதில் சாதனை வீரர் பரீத் நசீர் என்பவருடன் வவுனியா திறந்த வெளியரங்கில் 30 மணிநேரம் நடனமாடி பின் நிறுத்திக் கொண்டார். அன்று முதல் தாமும் சாதனை படைக்க வேண்டும் என்ற ஆவல் அவர் மனதில் குடிகொண்டது. உலக சாதனைகள் பலவற்றில் அவர் துணிவுடன் பிரவேசித்து வெற்றி கண்டுள்ளார். 1997ஆம் ஆண்டு மே மாதம் விகாரமகாதேவி பூங்காவில் இவர் தொடர்ந்து 76 மணித்தியாலம் 40 நிமிடம் ஒற்றைக் காலில் நின்று ஏற்படுத்திய சாதனையே கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மறைமாவட்ட யூபிலி ஆணைக்குழு

யாழ் மறைமாவட்ட யூபிலி ஆணைக்குழுக் கூட்டம் அண்மையில் ஆயர் இல்லத்தில் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், இதுவரை மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் பற்றியும் இனி மேற்கொள்ளப்பட வேண்டிய நிகழ்வுகள் பற்றியும் ஆராயப்பட்டது.

ஆணைக்குழுத் தலைவர் அருள்திரு ஜே. நிக்கிலஸ் அவர்கள், இதுவரை 9 பங்குகளில் மகாஞானெடுக்கம், பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் யூபிலிக் கண்காட்சி, "புதுயுகப் பூக்கள்" ஒலிப்பதிவு நாடா வெளியிடல், யூபிலி இசை நிகழ்ச்சி ஆகியன நடைபெற்றதாக தெரிவித்தார்.

ஆணைக்குழுவில் புதிய அங்கத்தவர்களாக அருள்திரு ஜெபரட்ணம், அருள்திரு ஆனந்தகுமார் ஆகிய இருவரும் இணைக்கப்பட்டனர்

யூபிலி ஆண்டிற்கென வகுக்கப்பட்ட திட்டங்களுள் சில,

1. கட்டுரை, வினாவிடை, நாடகம், கவிதை ஒவியப் போட்டிகள் நடாத்துதல்.
2. யாத்திரையையும் நற்கருணைப் பக்தியையும் ஊக்குவித்தல்.
3. இளவாலை மறைக்கோட்டத்தில் மகாஞானெடுக்கம் நடாத்துதல்.
4. யூபிலி பற்றிய வெளியீடுகள் மேற்கொள்ளல்.

இவை ஆணைக்குழு அங்கத்தவர்களால் செயற்படுத்தப்படும்.

## தாழையடிப் பங்கில் அன்னை திரேசா சபையைச் சேர்ந்த அருட்கன்னியர்

பங்குத்தந்தை அருள் திரு யோ. பிரான்ஸிஸ் அவர்களின் அழைப்பின் பேரில் அன்னை திரேசாவின் சபையைச் சேர்ந்த கன்னியர் மூவர் தாழையடிப் பங்கு மக்களை தரிசித்தனர். அங்குள்ள விதவைகள், அநாதைகள், நோயாளர், கைவிடப்பட்டோர் பலரையும் சந்தித்து அவர்களின் துயரங்களைக் கேட்டறிந்து ஆறுதல் கூறியதுடன் விசுவாசத்தைத் தளர விடாது நம்பிக்கையோடு இருக்கும்படியும் கூறி தைரியமளித்தனர்.

யா/தாழையடி கனிஷ்ட வித்தியாலயத்திற்குச் சென்று அதிபர், ஆசிரியர்களுடனும், மாணவருடனும் உரையாடினர். வறிய நிலையிலுள்ள மாணவருக்கு உதவிகள் செய்வதாகவும் வாக்களித்தனர். கன்னியர்களின் இந்த ஒரு நாள் விஜயம் மக்களினதும் சிறார்களினதும் மனதில் பசுமையாக நிலைகொண்டுள்ளது.

தாழையடி நிருபர்


**எதிர்பாருங்கள்!**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி தனிநாயகம் தமிழ் மன்றத்தினரின்,

**'பனி அரும்புகள்'**


## கத்தோலிக்க பத்திரிகையாளர்களுக்கு திருத்தந்தை அழைப்பு

### எதிர்மறையான காரியங்களுக்கு அளவுமீறிய முக்கியத்துவம் அளிக்கவேண்டாம்

உலகில் நிகழும் நன்மையானவற்றைப் பொருட்படுத்தாமல் விடுவதன் மூலம் பத்திரிகையாளர்கள் உண்மையைத் திரித்துக் கூறக்கூடும் என, திருத்தந்தை கத்தோலிக்க பத்திரிகையாளருக்கு அளித்த ஒரு செய்தியில் கூறுகின்றார்.

நிகழ்ச்சிகளைச் சரிவரக் கூறுவது மட்டும் உண்மையாகாது என்று கூறிய அவர், இன்றைய சமுதாயம் அநேக இடங்களில் நன்மையில் நாட்டமுள்ளது. ஆனால், இந்த நன்மைத்தனம் பத்திரிகைகளிலோ, வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளிலோ காட்டப்படுவதில்லை. உலக நிகழ்ச்சிகளை மக்கள் சரிவர விளங்கிக்கொள்வதற்கு துணைபுரிவதை விட பரபரப்பூட்டும் செய்திகளுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

எதிர்மறையான காரியங்களுக்கு அளவுமீறிய முக்கியத்துவம் அளிக்காது நேர்மை, சமாதான வாழ்வு, குடும்பம் போன்ற கருத்துக்களுக்கு அழுத்தம் கொடுப்பது ஒரு புதிய மனிதப் பாண்பு வளர்வதற்குத் துணைபுரியும் என்று மேலும் தெரிவித்தார்.

இன்றைய நவீன தொடர்பு சாதனங்களின் மூலம் பெருந்தொகையானோருக்கு செய்திகள் பரப்பப்படுவதால் இவற்றினை எவ்வாறு கையாள வேண்டுமென்று மக்களுக்கு விளக்கப்பட வேண்டும். அரசுகளும், தொடர்பு சாதனங்களும், பெற்றோரும், பாடசாலைகளும் இதற்குத் துணைபுரிய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## புனித சின்னப்பருக்கு அடுத்தபடியாக நற்செய்திப் பணிபுரிந்தவர் புனித சவேரியார்

### -அருட்தந்தை சனிஸ்ரன்

திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயப் பெருவிழாவில் மறையுரையாற்றிய அருள்தந்தை செ. ஜோ. சனிஸ்ரன் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அவர் தமது மறையுரையில், ஆசிய நாடுகளில் நற்செய்திப் பணிபுரிந்த புனித சவேரியார் தனது வாழ்வின் சாட்சியத்தால் இறைவனுக்கு உகந்தவராக வாழ்ந்தது போல் அவரைப் பாதுகாவலராகக் கொண்டுள்ள நாமும் எமது வாழ்வில் சான்றுபகர்ந்து வாழவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

திருநாள் திருப்பலியை அருள்தந்தை மைக்கல்சாமி (அ.ம.தி) அவர்கள் நிறைவேற்றினார். சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில் பெருந்தொகையான இந்து மக்களும் அயற்பங்கு மக்களும் கலந்துகொண்டனர். இறுதியாக திருச்சுருப பவனியுடனும் பங்குத்தந்தை அருட்திரு பிரான்சிஸ் டானியல்(அ.ம.தி) அவர்களின் ஆசீருடனும் பெருவிழா இனிதே நிறைவு பெற்றது.

யோ. மாலினி
(திருநெல்வேலி)

## ஐ.நா. செயலர் கோபி அனானுக்கு மகஜர்

### இலங்கையின் வடகிழக்கு வாழ் தமிழரின் இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வைப் பெறுவதற்கு அழுத்தம் கொடுங்கள்

மேற்படி வேண்டுகோளை கத்தோலிக்க மறைமாவட்ட மக்கள் சார்பில் நீதிசமாதான ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் செயலர் கோபி அனான் அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது. மடுப்பதி மீதான தாக்குதலைக் கண்டித்து யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நிகழ்த்தப்பட்ட இறைவேண்டல் ஒன்றுகூடலின் பின்னரே மேற்படி மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

அதில், மேதகு செயலாளரான தாங்கள் ஐக்கிய நாடுகளின் தலைவர் என்ற தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி இத்தகைய அத்துமீறல்கள் இனியொருபோதும் திரும்ப நடவாதிருக்கவும், இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் போரை உடனடியாக நிறுத்தி இரு சாராரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதான பேச்சுவார்த்தைக்கு அழைக்கும்படி வேண்டுகின்றோம். இதனால் சொல்லொணாத் துன்பங்கள், இழப்புக்களுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் மக்களின் இனப்பிரச்சனைக்குரிய தீர்வை பெறுவதற்கு பேச்சுவார்த்தையைத் தொடங்கவும் அழுத்தம் கொடுக்க வேண்டுமென நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம்.

மடுப்பதியின் பரிபாலகரும் மன்னார் ஆயரும் மடுப்பிரதேசத்தை அமைதிப் பிரதேசமாக மதித்து விலகியிருக்கும்படி விடுத்திருந்த எண்ணற்ற கோரிக்கைகளையும் அலட்சியம் செய்து இலங்கையின் பாதுகாப்புப் படையினர் மடுப்பிரதேசத்தினுள் பல மாதங்களுக்கு முன்னரே அத்துமீறிப் பிரவேசித்துள்ளனர். இந்தச் செயல் பெரும் மனித அழிவிற்கு இட்டுச்சென்றுள்ளது. இதேபோன்று வேறுபல கத்தோலிக்க ஆலயங்களும் இந்துக் கோயில்களும் தாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தங்கள் மேன்மையான அதிகாரத்தை உபயோகித்து இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண உதவுங்கள்

### யாழ் மறைமாவட்ட இறைமக்கள் திருத்தந்தைக்கு மகஜர்

மடுப்பதி மீதான தாக்குதலைக் கண்டித்து யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடாத்தப்பட்ட இறைவேண்டல் நிகழ்வின்பின் மகஜரொன்று ரோமாபுரியிலுள்ள பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதிலே, கீழே ஒப்பமிட்டிருக்கும் யாழ்ப்பாண மறைமாவட்ட பொதுநிலையினராகிய நாம் எங்கள் பரிசுத்த தந்தையாகிய தங்களுக்கு எங்களால் மிகவும் நேசித்துப் போற்றப்படும் ஆலயமாகிய மடுப்பதிக்கு 20.11.99அன்று நடந்த கொடூரமான, அநியாயமான எறிகணைத் தாக்குதலால் அப்பாவிப் பொதுமக்கள் 42பேர் பலியாகி 54பேர் காயமடைந்ததை தங்கள் தயவான கவனத்திற்கு கொண்டுவருகிறோம். 450 வருடகால சிற்றாலயம் சிதறுண்டுபோன செய்தி கேட்டதும் நாங்கள் தாங்கமுடியாத மனவேதனையும் துயரமும் பேரதிர்ச்சியும் அடைந்தமையை தங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் இறுதிப் பகுதியில், யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்கராகிய நாம் இத்தகைய மனிதப் படுகொலையினை மேலும் பொறுத்துக் கொள்ள முடியாது. எனவே அதியுயர் மேன்மைக்குரிய, புனித தந்தையாகிய தாங்கள் இத்தகைய செயல்கள் இனியோருபோதும் நடவாதிருக்க தங்கள் மேன்மையான் அதிகாரத்தை உபயோகிக்கவும், இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாகப் போரை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சனைக்குத்தீர்வுகாண ஆவனசெய்ய வேண்டுமெனவும் வேண்டிநிற்கிறோம், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயுதங்களைக் கைவிட்டு சமாதான வழிக்குத் திரும்புங்கள்

### மடு சம்பவம் பற்றி கவலை தெரிவித்து செபிக்கும்போது இலங்கையில் போரில் ஈடுபட்டுள்ளோருக்கு பாப்பரசர் அழைப்பு

நவம்பர் 28ஆம் திகதி புனித இராயப்பர் சதுக்கத்தில் கூடியிருந்த பெருந்தொகையூான மக்களோடு மூவேளை செபத்தைச் செபித்த பின்னர் இலங்கையிலுள்ள கத்தோலிக்க சகோதரர்களுக்காக செபிக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். மடுமாதாவின் ஆலயம் கடுமையான குண்டுத் தாக்குதலுக்கு உட்பட்டு அங்கு தஞ்சமடைந்திருந்த அநேக பொதுமக்கள் மரணமடைந்துள்ளனர். கத்தோலிக்கர் மட்டுமல்லாது மற்ற மதத்தவராலும் போற்றப்படும் இப்புனித மிகு ஆலயம் அவசங்கைப்படுத்தப்பட்டு ஒரு கொலைக்களமாக மாற்றப்பட்டுள்ளது. இறந்தோருக்காக மனம் வருந்தி காயமுற்றோருக்கு துணைபுரியும் ஆயர்கள், குருக்கள் பொதுநிலையினருடன் நானும் ஒன்றித்திருக்கிறேன் என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எனது அன்பிற்குரிய இலங்கை மக்களை பரிசுத்த தாயிடம் ஒப்படைத்து போரில் ஈடுபட்டுள்ளோர் சமாதான வழிக்குத் திரும்ப அவர்களுக்கு துணிவைக் கொடுத்தருள வேண்டுமென்று இறைவனிடம் மன்றாடுகின்றேன்.

16 ஆண்டுகளாக போரில் ஈடுபட்டிருக்கும் அனைவரையும் ஆயுதங்களைக் கைவிட்டு சமாதான வழிக்குத் திரும்புமாறு வலியுறுத்திய் பாப்பரசர் சமாதானத்தை நிச்சயமாக ஆயுத பலத்தால் அடைய முடியாதென உறுதிகூறுகிறேன், என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்கின்ற யூபிலியில் புது வழிகள் தாருமையா !

ஆயர்கள் அகமகிழ ஆவினங்கள் புகழ்பாட
வெண்மதியம் பனிதூவ வெள்ளைமலர் இசைபாட
விண்ணோர்கள் பண்பாட மண்ணோர்கள் மலர்தூவ
மண்மீது வாருமையா! மகிழ்வதனை தாருமையா!

இரத்தவெறி மறைந்துவிட இனத்துவேசம் கலைந்துவிட
சுத்தமனம் வந்துவிட சுகிர்தம் தழைத்தோங்க
சுந்தரனே சூரியனே சின்னப் பாலகனே
எம்மண்டை வந்திடுவாய் எம்பாவம் போக்கிடுவாய்

வெடிச்சத்தம் மறைந்துவிட வெறியெலாம் நீங்கி விட
வெண்மை உள்ளங்கள் எம்மிடையே தோன்றி விட
இன்பத்திருவிருந்தே இனித்திடும் தேன் சுனையே
எம் நெஞ்சில் பிறந்திடுவாய் எம் சிந்தை தெளிய வைப்பாய்

விண்ணோர்கள் மகிழ்வெய்த மண்ணோர்கள் ஆர்ப்பரிக்க
பூக்கும் இந்த யூபிலியில் பூமியில் ஒளி சேர
பிறக்கின்ற பாலகனே பூமியின் காவலனே
புத்தொளியே வாருமையா புதுவழிகள் தாருமையா

யே.ம. யோசப் மேரி

## அழைப்புக்கள்

மகிழ்ச்சி தரும் செய்தியாம்
மன்னன் யேசு பிறந்துள்ளார்
ஆடு மேய்க்கும் இடையர்கள்
அன்று கேட்ட செய்தியாம்

பாலன் உருவில் பரமனாம்
பாரில் எங்கோ பிறந்துள்ளார்
தேடி அலைந்தார் அரசர்கள்
சேதி அறிந்தோர் இடையரே

ஓடிச் சென்றார் கூட்டமாய்
மாடி வீட்டில் அவரில்லை
தேடிச் சென்றார் நேசமாய்
மரியின் மைந்தன் யேசுவை

மாரி மழை குளிரிலே
மாடடையும் குடிலிலே
இடையர் கண்டார் இறைவனை
மரியின் மடியில் மைந்தனாய்

- யோசப் சர்மிளா -

## அருள்தரும் ஆண்டில் அன்பு வெள்ளம் பாய்கிறது

உதிர்ந்து விட்ட உறவுகள்
ஊமையாகி நிற்கையிலே
உடைந்து விட்ட உள்ளத்துடன்
மீண்டுமொரு பிறப்பு விழா!
இறைமகன் இயேசுவின்
யூபிலி ஆண்டினை
அன்புடன் வரவேற்க
உள்ளம் ஆதங்கப்படுகிறது.
ஆனாலும் முடியவில்லை
ஆயிரம் நிலைவலைகள்
இழப்புக்கள் இடம் பெயர்வுகள்
உள்ளத்தின் ஆழத்தை
ஊடுருவி நிற்கிறது.
முழுமனித விடுதலையை
வேண்டிநின்ற இறையவன்முன்
அரைமனிதராகி நாம்
அலங்கோலப் படுகையில்
மீண்டுமொரு பிறப்பு விழா!
இறையவனை வாழ்த்திநிற்க
புது ஆண்டை வரவேற்க
சிறு கொட்டில் போட்டு
சிறப்பாகச் செய்திட
மனம் மறுத்து நிற்கிறது
மரத்து விட்ட மனங்களுடன்
வழக்கமான பாணிதனில்
Happy Christmas என
உதடுகள் சொல்கிறது
பச்சிளம் பாலகனின்
பிஞ்சு முகம் மலர்கிறது
உதடுகள் சிரித்து
இதயம் பேசுகிறது.
பாலகனின் குரலொலியில்
கண்கள் பனிக்கிறது
இதயம் கசிகிறது
நசுக்கப்பட்ட இதயங்கள்
உடைந்து விட்ட உறவுகள்
பிரிந்துபோன தேசங்கள்
மரத்து விட்ட மனிதங்கள்
சிதைந்து விட்ட விழுமியங்கள்
புதுப்பொலிவு பெறுகிறது
இறையவனின் இன்பஒளி
பாரெல்லாம் ஒளிர்கிறது
அருள்தரும் ஆண்டில்
அன்புவெள்ளம் பாய்கிறது

யோ. மாலினி
திருநெல்வேலி

## தெய்வம் தரிசனம்

துவலயத்தை மீட்டிடவே
குடிசையிலே தவழ்ந்தவனே
குன்றில் இட்ட தீபமென
பிறர்க்கு ஒளி கொடுத்தவனே
குணக்குன்றே இயேசு நாதா
துவலயத்தைக் காத்திடய்யா

மனிதத்தை மறந்து வாழும்
மாந்தரை நாம் காண்கின்றோம்
மண்ணினையே இழந்து எம்
மனு உயிர்கள் கொடுக்கின்றோம்
மட்டற்ற ஆசையினால்
மாற்றான் பொருள் எடுக்கின்றோம்
மனுவுயிர்கள் மண்ணினிலே
மிதிபடுவதனையே அறிகின்றோம்

மேரி இமாக்குளேற்
அச்சுவேலி

## அர்த்தமுள்ள யூபிலி மலரட்டும்

அழு குரல் ஓயட்டும்
அகதி நிலை ஒளியட்டும்
அருள் ஆண்டில் அன்புமகன் யேசு
அவனியிலே அவதரிக்க
அக்களிப்பும் அகமகிழ்வும் நிலைக்கட்டும்

அன்பியங்கள் வளரட்டும்
அயலான் துன்பியலில் பங்குகொள்வோம்
அறப்பணி புரிந்திடுவோம்
அன்பன்கிறிஸ்து அடிச்சுவட்டினைப்
பின்பற்றிடுவோம்

அருள் மொழி உரைத்திடுவோம்
அன்புகொண்டு வாழ்ந்திடுவோம்
அமைதி நிலை பேணிடுவோம்
அர்த்தமுள்ள யூபிலியை கொண்டாடுவோம்

எஸ். பேபி
குடாரப்பு

## விரைந்து வரும் யூபிலியில் மலர்ந்து வரும் இயேசு

வயிற்றுப்பசி போக்க வழியின்றி வாடும்
எம் வன்னி வாழ் சோதரரின் அவல நிலை நீங்கி
இரட்சிப்பை தருவதற்கு
விரைந்து வரும் யூபிலியில்
தவழ்ந்து வரும் கிறிஸ்து

எம் தாய் மண்ணின் அவலங்க்ள் நீங்காது
ஏக்கங்களோடும் மனத்தாக்கங்களோடும்
வாழும் எமக்கு ஆண்டவர் ஆட்சி செய்யும்
ஆண்டினை அறிவிக்க விரைந்து வரும் யூபிலியில்
மலர்ந்து வரும் கிறிஸ்து

ம. மரியபுஸ்பம்
குழந்தை யேசு ஆலயம்
பொலிகண்டி

## சமாதானத் தொன்றல் எம் உள்ளத்திலும், நாட்டிலும் வீசட்டும்

எட்டுத்திக்கிலும் அழுகுரல்கள்
ஏறிகணைத் தாக்கலின் கொடூரங்கள்
எலும்புக்கூடுகளின் தோற்றங்கள்
கைதாகும் அவலங்கள்

அடுத்தநாள் அடுப்பெரிக்க
அரிசிக்காய் எம் சேர்தரர் தவித்திட்டபோதும்
அதைக் கண்டும் காணாமல்
அன்னதானமாய் ஆலயத்தில் அள்ளி வழங்குகிறாயே
எப்படி ஐயா உள்ளத்தில் அமைதி கிடைக்கும்

உடன்பிறந்தார் தவிக்க
உல்லாசமாய் சினிமாப்படம் பார்த்து - அதுவும்
நீலப்படத்தில் மூழ்கி ஆபாசத்தில் மிதக்கின்றாயே
எப்படி ஐயா உள்ளத்தில் அமைதி கிடைக்கும்

புதியதொரு நூற்றாண்டில் மீண்டும் ஒருமுறை
அமைதியின் தூதனாய் பிறக்கின்ற பாலகனே
அமைதியற்றிருக்கும் உள்ளங்களுக்கு அமைதி தந்து - எம்
நாட்டிலும் சமாதானத் தென்றல் வீசிடச் செய்

மே. மே. யஸ்மின்
இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது உலகம் படைக்கப் புறப்பட்டு வருக



புதிய உலகம் படைத்திடுவோம் - அங்கு
சமாதான விதையை விதைத்திடுவோம்
வன்முறைக் களைகளை அகற்றிடுவோம்
நல்மனித உள்ளங்களை அறுவடையாக்கி
புதிய சமூகத்தை கட்டியெழுப்பிடுவோம்
புறப்பட்டு வருக உடனே
புதிய உலகம் யாம் படைப்போம்

சாதிமத பேதமற்ற
சமதர்ம உலகாகப் படைத்திடுவோம்
பஞ்சம் பசியற்ற

பசுமை உலகாகப் படைத்திடுவோம்
இன வாதமற்ற
இனிய உலகாகப் படைத்திடுவோம்
அழிவு நிலையற்ற
அமைதி உலகாகப் படைத்திடுவோம்
புறப்பட்டு வருக உடனே
புதிய உலகம் யாம் படைப்போம்

அணுவாயுதப் போட்டிகளால்

அல்லல்படுகின்றோம் யாம்
இயற்கையின் சீற்றமதால்
இன்னல்படுகின்றோம் யாம்
கொடுங்கோலரின் ஆட்சிமுறையால்
கொடுமைப்படுகின்றோம் யாம்
புறப்பட்டு வருக உடனே
புதிய உலகம் யாம் படைப்போம்

யுத்தமென்ற தாண்டவத்தால்
யுகத்தில் மடிந்த மானிடரைப் பார்
என் பிள்ளை எங்கேயென
ஏங்கிடும் அன்னையவளைப் பார்
அவயவங்களை இழந்து
அல்லல் படுவோரைப் பார்
கொடூரம் நிறைந்த உலகத்தின்
கொடுமைகள் தான் இவைகள்
புறப்பட்டு வா உடனே
புதிய உலகம் யாம் படைப்போம்

இவ் வையகமெல்லாம் மனித
இடுகாடாய் மாறிவிட்டது
அகிம்சை என்ற பதம்
ஆயுத பதமாய் மாறிவிட்டது
அணைக்கும் கரங்களெல்லாம்
அக்கிரம கரங்களாய் மாறிவிட்டது
இவையனைத்தும் இந்த
இழி உலகத்தின் தொடர்கதை
புறப்பட்டு வருக உடனே
புதிய உலகம் யாம் படைப்போம்

துன்புறுவோரைப் பார்த்து
தூசிக்கும் உலகிது
குண்டுபோட்டு மனித குலத்தை
குதறிக் கொல்லும் உலகிது
அகதியாய் வந்தோரை
அழித்தொழிக்கும் உலகிது
இந்த அவலம் நிறைந்த உலகம்
இனியும் தொடர வேண்டுமா ?
புறப்பட்டு வா உடனே
புதிய உலகம் யாம் படைப்போம்

க. அருள்நேசன்
குருநகர்

# வெறித்துப்போன தேசத்திலே



வேறொன்றும் வேண்டாம்
நீ மட்டும் இங்கு வந்திடு
நிறம் மாறிப்போன எம் நிலங்களிலே
நிம்மதி பிறக்கும்

இருபது ஆண்டுகளாய்
நாம் இறைத்த இரத்தம்
போதாதென்றா இன்னும் கேட்கிறது
இந்த நிலம்

இறைவனே இருளில் இருந்து கொண்டே
இரத்தம் சிந்துகின்றோம்
பாலகனே உன் பார்வையை
ஒருமுறை இங்கு திருப்பிவிடு
பந்தாகி வந்து வெடிக்கும் ஷெல்கள் கூட
உன் பாதங்களில் வீழ்ந்து
பளிச்சென்று மின்னி இருள்போக்கும்

பாலகனே எம் குலக் குழந்தைகளை
வெட்டிச் சரிக்கும்
ஏரோதுகளைக் கட்டிப் போட
படை கொண்டு வராதே - உன்
பாசக் கயிறுகளே போதும்

உன்போன்ற எம் குழந்தைகள்
இப்போது இங்கில்லை
இருப்பது நீ மட்டும் தான்
இங்கிருக்கும் ஏரோதுகளை எண்ணிப் பயந்து
எம் தேசத்தில் பிறக்காது விடாது

வெள்ளிகள் பூக்கும் வான
தேசத்தை விட
வெறித்துப்போன
பெரியதொரு தேசம் இங்குண்டு
தொழுவங்கள் தான் இங்கில்லை
உனக்கு தொட்டில் கட்ட
மன்னவனே
மடிகள் உண்டு
உன்னைத் தாலாட்ட

ம. வி. தயாகரன்

வேதனைத் தீயில் மாண்டு கருகி
எலும்போடு மட்டும் எழுந்து நடந்து
எறிகணை மழையில் நனைந்து தோய்ந்து
மடு அன்னையின் மடியில்
ஆறிப் படுத்த அந்தச் சாமத்திலே
அக்கினித் தணல்களை
அள்ளி எறிந்தது ஏன்?

ம. வி. தயா

# ஆண்டொன்று வேண்டுமிங்கு



அழுது அழுது கண்களும்
ஓய்ந்து விட்டன
ஆறுதலைத் தேடிய கால்களும்
சோர்ந்து விட்டன
எங்கு போவோம் என்று
இனிச் சொல்ல இயலாது
நிலையற்ற உலகில் நமக்கொரு
நாடுகேட்டு
இழந்தது எண்ணில் அடங்காது
ஐயா
ஏழ்மை, விரக்தி, வேதனை, பிரிவு
இவைதானா
எம் வாழ்வின் விழுதுகள்
இறைவா
இவையெல்லாம் இனி வேண்டாம்
இல்லையே துன்பமென்ற ஆண்டொன்று
வேண்டுமிங்கு

இ. ஜெனீத்ரா
[illegible]

# புனித ஆண்டு புலரட்டும்



புனித ஆண்டு பிறந்தது
புனித வாழ்வும் மலர்ந்தது
புண்பட்ட நெஞ்சமும்
பூரிப்பு அடைந்தது

அருள் ஆண்டொன்று - ஆகையினால்
அகத்தினில் ஒளி உதித்தது
மனத்தின் மாசுகள் களைந்து
மன்னிக்கும் நிலை உருவானது

முரசொலிகள் முழக்கமிட
முதல்வன்யேசு பெத்தலேகேமில் - பிறந்தார்
பாவ இருள் போக்க வந்த மகனை
பணிந்து வணங்குவோம்

அருள் தரும் வருடத்தில்
அமைதி எங்கும் எதிரொலிக்க
சமாதானம் எம்மில் நிலைபெற
... புனித ஆண்டு புலரட்டும்

சி. கிறேஸ்
குடாரப்பு

# அமைதிப் புறாவாக வந்து பிறப்பாயோ

மார்கழிக் குளிரில் கொட்டும் பனியில்
மாதவா நீ அவதரித்தாய்
மானிடம் மனிதநேயம்
அன்பில் செழித்தோங்க பரம்பொருளே
நீ ஒரு முறை எம் ஈழத்தில்
அமைதிப் புறாவாய் வந்து பிறப்பாயோ
பாரினில் வந்த பரமனே
பாவியர் எம்மவர் வன்னியில் அலறும்
சத்தம் வான்வரை எட்டுதையா
எண்ணிடும் போதிலே உள்ளத்தில்
உதிரம் கொட்டுதையா
ஏழை மகனாக வந்த கோமகனே
இறந்தவர், வழியில் காணாது தொலைந்தவர்,
உறவை எல்லாம் பிரிந்தவர்
புதைகுழியில் மறைந்தவர் என்று
நீளும் பட்டியலை மாற்றி
ஏளனமாகும் எம் வாழ்வை மாற்றிட
மீண்டும் ஒரு முறை எம் உள்ளத்தில்
அமைதிப் புறாவாக வந்து பிறப்பாயோ
குழந்தை யேசுவே

ம. வினோ
இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி : 10 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர் : 11 | எம் வாழ்வின் வழி யேசு |

அன்புக் கண்மணிகளே!

அன்புக் குழந்தை யேசுவின் ஆசிகள் என்றும் உம்முள் நிறைவதாக.

இம்மலரைக் கையில் எடுத்ததும் உங்கள் ஆக்கங்களைத் தேடுகிறீர்களா?

உங்கள் ஆக்கங்களை பலமணிநேரம் செலவழித்து தெரிவுசெய்து பிரசுரித்துள்ளேன்.

ஆக்கங்கள் வராதவர்கள் மனம் தளரவேண்டாம். தொடர்ந்து எழுதுங்கள்.

இன்று விழாவென்றால் தேவையற்ற ஆடம்பரச் செலவுகள் ஒவ்வொரு குடும்பத்தின் பொருளாதாரத்தைத் தாக்கிவிடுகின்றன. இதனால் விழாவின் இலக்குத் தவறிவிடுகின்றது.

கண்மணிகளே! உங்கள் பெற்றோரின் மனம் நோகாமல் இவ்விழாவினை மனமகிழ்வுடன் கொண்டாட முயற்சியுங்கள். அதேவேளை உங்கள் உள்ளத்தில் பொய்மையும் பொறாமையும் குடிகொள்ளாதிருக்க பாலன் காட்டிய நெறிமுறையினைப் பின்பற்றுங்கள். இறையேசு இறை தந்தையின் சித்தம் அறிந்து அதன்படி வாழ்ந்தவர். பெற்றோருக்குப் பணிந்து வாழ்ந்தவர். ஏழ்மையில் மனநிறைவு கண்டவர். எளிமையில் மாந்தர் மனதை வென்றவர். எனவே ஆண்டவர் அருள்தரும் ஆண்டிலே ஆன்மபலம் பெற்று அறிவுத்திறன் கொண்டு நிறைமனதுடன் வாழ உங்களை வாழ்த்தும்,

'அன்பின்
*அன்புவிழி*

## புதியதொரு தென்றல்
-அ. ம. அனி

"வரவிருக்கும் 2000ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கும் நீங்கள், பாலயேசுவின் பிறப்பைக் கொண்டாடவிருக்கும் நீங்கள் குழந்தை யேசுவுக்கு மிகவும் விருப்பமான நற்செயல் ஒன்றைப் புதிதாகச் செய்து புத்தாண்டில் பாடசாலைக்கு வரும்போது எனக்குச் சொல்ல வேண்டும். செய்வீர்களா?" என ஆசிரியர் சுமதி கேட்டார்.

"செய்வோம்! செய்வோம்!" என தரம் ஏழு மாணவர் ஒரே குரலில் ஒலித்தனர். இது கேட்டு ஆசிரியர் சுமதி புன்னகைத்தார்.

இன்று பாடசாலை மூன்றாம் தவணை விடுமுறை ஆரம்பம். பாடசாலை முடிவடைந்தமைக்கான மணி ஒலித்தது. தரம் ஏழு மாணவர் தமது ஆசிரியர் கூறியதை தம் சிறிய மனதில் இருத்தி என்ன செய்யலாம் என்று நண்பர்களுடன் கதைத்தபடியே சென்றனர். மதுவின் மனதிலோ ஆசிரியரின் வார்த்தைகள் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. மதுமிதாவின் செல்லப் பெயர் மது. இவள் பெரும் செல்வந்தரின் ஏக புதல்வி. பணக்கார வீட்டுப் பிள்ளைகள்போல் மது கர்வம் பிடித்தவளாக இருக்கவில்லை. இரக்ககுணம் படைத்த மது ஏழைகளை அதிகம் நேசித்தாள்.

மதுவின் அப்பா மகளை அழைத்துச் செல்ல காரில் வந்தார். மது காரில் ஏறும்பொழுது தன் தோழிகளுக்குக் கைகாட்டி தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள். கார் புறப்பட்டது.

மது காரில் மௌனமாக இருந்தாள். வீடு வந்ததும் தந்தை "என்ன மகள் மௌனமாக இருக்கிறீர்?" என்று கேட்டபோது மது, ஆசிரியர் கூறியதை தந்தையிடம் கூறினாள். தந்தை தலையாட்டிவிட்டு அவசரமாகச் சென்றுவிட்டார்.

மது வீட்டில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் களைகட்டியது. மது, அப்பா, அம்மாவுடன் காரில் புத்தாடை எடுப்பதற்கு கடைக்குச் சென்றாள். அங்கு தன் வயதுச் சிறுமி அழுக்குடையுடன் பிச்சையெடுப்பதைக் கண்டாள். அவள் உள்ளம் உருகியது. ஆசிரியரின் வார்த்தைகள் அவள் உள்ளத்தில் மின்னலெனப் பளிச்சிட்டது. அவளைத் தன்னுடன் கூட்டிச்செல்ல ஆசைப்பட்டாள். தன் எண்ணத்தைப் பெற்றோரிடம் கூறினாள். முதலில் மறுத்த பெற்றோர் மகளின் பாசத்தால் ஏழைச் சிறுமியையும் தங்களுடன் அழைத்துச் சென்றனர்.

அன்று கிறிஸ்து பிறப்புத் தினம். ஆலயத்தில் திருப்பலிக்கான இரண்டாம் மணி ஒலித்தது. "சாலையோரம் வீழ்ந்து கிடக்கும் ஒரு நாதியில்லா ஏழைக்கு நல்வாழ்வு அளிக்கும் . . ." என்ற பாடல் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. வறுமையால் வடிவிழந்த கலா மதுவின் அன்பால் அழகியானாள். மதுவின் உடன்பிறவா சகோதரியானாள். இருவரும் ஒரே மாதிரி உடையணிந்து பெற்றோருடன் பாலகன் இயேசுவை தரிசிக்கச் சென்றனர்.

பால யேசுவுக்கு பிடித்தமான செயலைச் செய்த மது மன மகிழ்ந்தாள். பூக்கவிருக்கும் புத்தாண்டு அன்புநிறை உள்ளங்களால் புதியதொரு தென்றலில் மலர்ந்து மணம் கமழும் என்பது உறுதி.

## ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்க
-வி. ஜே. ஜெயசங்கீதா

இரண்டாயிரம் யூபிலி ஆண்டில் காலடி வைக்கப்போகும் நாம் அதற்குரிய முன் ஆயத்தங்களை இன்றே செய்யத் தொடங்க வேண்டும். ஆண்டவர் அருள்தரும் புதிய ஆண்டினை தூய மனதுடன் வரவேற்க, எம் பாவங்களைக் களைய அவரிடம் மனம் வருந்தி மன்னிப்புக் கோரவேண்டும். நமக்குள்ள ஏற்றத் தாழ்வுகளை களைந்து ஒன்றுகூடி ஒருமனதாய் செபிக்கவேண்டும்.

ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்க அகமும் புறமும் ஒன்றிணைந்து அவர் அருளை வேண்டவேண்டும்.

இறைவன் நமக்கு அருளும் புதிய ஆண்டினை எம் ஆணவம் அகற்றி அவர் புகழ் பாடிட எம்மை முழுமையாக அவரிடம் அளிக்க வேண்டும். பகிர்வு வாழ்வால் பரமன் தரும் புத்தாண்டினைப் போற்றிடுவோம்.

## பாலகனே நீ கண்வளராய்

ஏழைகள் பாடிட   [illegible]
கோழைகள் தேட
[illegible]
தூயவனாய் உதித்த பாலகனே
சேயர் ஆரும் பாவினைக் கேட்டு
பாலகனே நீ கண் வளராய்



## இயேசு பாதம்
P. கில்டா நிலோஜினி (அ. எ. 333)

*மாசில்லா மரியன்னை மைந்தன்*
*இயேசு பாதம் தொழுவோமே*

*கவலை எல்லாம் தீர்ப்பவரே*
*கண்போல் எம்மைக் காப்பவரே - எம்*
*இனிய நல் துணைவரவர்*
*இன்பம் நல்கும் நண்பரவர்*

## அகரத்தில் யேசு
~சி. ஸ்ரெலாராணி

அன்பின் யேசு
ஆவின் குடிலில் அவதரித்தார்
இறைவழிகாட்ட இவ்வுலகிற்கு வந்தார்
ஈடில்லாப் பாடுகள் எம் மீட்புக்காகப் பட்டார்
உலகை வென்று உயிர்ப்புப் பெற்றார்
ஊரெங்கும் உபதேசம் செய்தார்
எளிமை வாழ்வின் வடிவமானார்
ஏழையர் துன்பம் துடைத்திடத் துணிந்தார்
ஐயம் களைந்து அன்பை விதைத்தார்
ஒற்றுமை தன்னை உணர்த்தி நின்றார்
ஓய்வின்றிப் பணிபல புரிந்தார்
ஔடதமாகி மானிடப் பாவம் தீர்த்தார்



## சமாதானம் பொங்கட்டும்
*அ. ரொனி றூவஸ்*

புத்தாண்டில் !
போர் மேகங்கள் மறையட்டும்
வன்முறைகள் ஒழியட்டும்
ஆயுதங்கள் அழியட்டும்
உயிர்கள் உயர் மதிப்புப் பெறட்டும்
அன்பு மலரட்டும்
சமாதானம் பொங்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வுச் சித்திரம்

# காவலன் கண்மணிகள்

### என்ன கொடுப்பேன்

அ. அமிலா

ஏழ்மைக் கோலம் பூண்டு குழந்தையாகப் பிறந்த சின்ன யேசுவுக்கு நான் என்ன கொடுப்பது?
மலர் மாலையா? சுவைநிறை பழங்களா? பொருள் பண்டங்களா?
ஓ! அவர் விரும்புவது கள்ளம் கபடமற்ற தூய உள்ளத்தையே.
ஆகவே திருப்பாலத்துவ சபையில் அங்கம் வகிக்கும் சிறுவர்களாகிய நாம் பாலனில் அன்புகொண்டு
மறைத்தூதர்களாக மலர்ந்து மணம்வீச எம்மைத் தூய்மைப்படுத்துவோமாக



### இரட்சிப்பின் தலைவர்

சி. நிசாந்

இரட்சிப்பின் தலைவர்!
ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை
முழக்கமிட்டு அறிவிக்க
எம்மிடையே பாலகனாக வந்துவிட்டார்.
எந்நாளும் அவர் புகழை
ஏற்றிப் போற்றிடுவோம்.
அவர் வழி செயல்படுவோம்.

### பாவலன் யேசுவழி

ம. சங்கீதா

பாலகன் யேசு வழிதனிலே
தான தர்மம் செய்திடுவோம்
பாலகன் யேசு மாண்பினிலே
சாதி பேதம் மறந்திடுவோம்

### கிறிஸ்துவின் பிறப்போடு உருவானவை

தொகுப்பு: அ. சுஜீவ் வேர்ஜினி

| | |
|---|---|
| 1. CHRISTMAS | கிறிஸ்து பிறப்பு விழா |
| 2. CHRISTMAS COT | கிறிஸ்து பிறப்பு விழா குடில் |
| 3. CHRISTMAS CARDS | கிறிஸ்து பிறப்பு வாழ்த்துமடல்கள் |
| 4. CHRISTMAS CANDLES | வர்ணம் பூசிய மெழுகுவர்த்திகள் |
| 5. CHRISTMAS TREES | விழாவுக்கு அழகூட்டும் மரம் |
| 6. CHRISTMAS DECORATIONS | விழாவுக்கான அலங்காரச் சாதனங்கள் |
| 7. CHRISTMAS SHOPPING | விழாவுக்காக பொருட்கள் வாங்க கடைக்குச் செல்லல் |
| 8. CHRISTMAS VIZA | விழா கொண்டாடுதல் |
| 9. CHRISTMAS PAPA | கிறிஸ்மஸ் தாத்தா |
| 10. CHRISTMAS ENTERTAINMENT | கிறிஸ்மஸ் களியாட்டம் |
| 11. CHRISTMAS PARTIES | விருந்தும் மதுவும் |
| 12. CHRISTMAS DANCE | விருந்தில் ஆட்டம் |
| 13. HAPPY CHRISTMAS | விழாவன்று கைகொடுத்து வாழ்த்துக் கூறல் |

### கிறிஸ்மஸ் பப்பா

–வாரனம்பாடி

மழை மந்தாரம்,
மாலை 4 மணி இரவு 7மணிபோல் இருளாக இருந்தது.
ஆதவன் தன் இரு பிள்ளைகளையும் அழைத்தார்.
மூத்தவன் தேனுஷன், இளையவள் தேன்மொழி.
இருவரும் ஓடிவந்து
அப்பாவின் இருபக்கத்திலும் அமர்ந்தனர்.
"*குழந்தை யேசு*" என்ற அழகிய அல்பம்
அவர் மடியில் இருந்தது.
அதில் குழந்தை யேசுவின் பல வர்ணப் படங்கள்
வளர்ச்சிப் பருவ முறைப்படி அமைந்திருந்தன.
செபமாலைத் தியானத்தின் மகிழ்ச்சி,
மறை உண்மைகளின் விளக்கப் படங்கள் இருந்தன.
குழந்தை யேசுவை மையப்படுத்தி வந்த கதைகள்,
கவிதைகள், கட்டுரைகள் இருந்தன.
பல நாடுகளிலிருந்து வந்த பலவர்ண
கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள் அந்தந்த நாடுகளின்
பெயர்ப் பட்டியலின் கீழ் அமைந்திருந்தன.
பிள்ளைகள் இருவரும் அவற்றை ஆவலுடன் பார்த்தார்கள்.
அப்பாவைக் கேள்விகளால் திணறடித்தார்கள்.
சன்ரகுலாஸ், கிறிஸ்மஸ் பப்பா இருவருக்குமிடையேயுள்ள
வரலாற்றுப் பின்னணியை விளக்கும்போது,
"ஓ மரியா! ஓ மரியா!" என்ற பாடலுடன் ஒரு சிறுவர் குழு
ஆதவன் இல்லம் வந்தது. விசாலமான முற்றம்.
கிறிஸ்மஸ் பப்பாவின் ஆடலைக்காண,
பிள்ளைகள் ஓடிப் போனார்கள். ஆதவனும்
கிறிஸ்மஸ் பப்பாவின் ஆடலை இரசித்தவண்ணம்
சிறுவர்களுடன் சேர்ந்து தாளம் போட்டார்.
பணம் எடுத்துவர ஆதவன் உள்ளே சென்றார்.
பாட்டு நின்றது. தாளம் நிறுத்தப்பட்டது.
கிறிஸ்மஸ் பப்பாவின் ஆடலும் நின்றது.
தாளம் போட்ட சிறுவன்
கிறிஸ்மஸ் பப்பாவின் காதில் மெல்லமாக,
"டே சுரேஸ்! உங்கட அம்மா வாறாவடா" என்றான்.
ஆதவன் வீட்டின் சமையல் அறைப் பக்கமிருந்து வந்த
சுரேசின் அம்மா மேளம் தட்டிய சிறுவனிடம்
"சுரேஸ் எங்கே" என்று கேட்டுவிட்டு
அங்கு நின்ற சிறுவர்களை ஒரு பார்வை பார்த்தார்.
"அவன் கிறவுண்சில் கிறிக்கட் அடிக்கிறான்" என்றான்.
பணம் கொண்டுவந்த ஆதவன்
அங்கு ஒருவரையும் காணாது,
"அன்ரி கிறிஸ்மஸ் பப்பா எங்கே" என்று
சுரேசின் அம்மாவிடம் கேட்டார்.
தேனுசன், "அப்பா! இந்த குட்டி கிறிஸ்மஸ் பப்பா
எங்களுக்கு ஏன் பரிசுகள் தரவில்லை?" என்றான்.
"இங்க வாற குட்டி கிறிஸ்மஸ் பப்பாக்கள்
பரிசு கொடுக்காயினம் ! காசு வறுகவல்ல வாறவய"
என்று சொன்ன அன்ரி,
"போயும் போயும் படிச்ச நீங்களும் இவங்களுக்குக்
காசு கொடுத்துப் பழுதாக்கிறீங்க" என்று
ஆதவனைப் பார்த்துக் கூறினார்.
ஆதவன், "அன்ரி அவங்க சின்னவங்கதானே. அதுவும்
இந்தக் காலப் பிள்ளைகளுடன் கடும்பிடி சரிவராது.
அவங்களை முதலில் அன்பால் வசீகரித்து,
பின்தான் புத்தி சொல்லவேண்டும்" என்று சமாளித்தார்.

**நம்முள் ஒவ்வொருவரும் தம்மைக் குறித்தே கடவுளுக்குக் கணக்குக் கொடுப்பர்.**
உரோ 14:12

### விழித்தெழு மானிடனே

கெ. வைமன்ராஜ்

மலரும் மிலேனியத்தில் – மதிகெட்டு
போலி வாழ்வில் மாழாது
நித்திய வாழ்வை நோக்கி
நிமிர்ந்த நடைபோட்டு
சத்திய வேந்தனின் – சரித்திரத்திற்கு
சான்று பகர்ந்திடவே சமத்துவ நெறியினிலே
விழித்தெழு மானிடனே! விடியலைத் தேடிடு!

சினிமாச் சிங்காரிப்பில் சிக்கி – ஞான
சீவியத்தின் தடம்புரண்டு நெறிகெட்டிடாது
இடர்வரினும் துயர்வரினும் – எம்
இரட்சகரின் வழிநடந்து
யூபிலி ஆண்டிலே புதுப்பிறப்பு அடைந்திடவும்
ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை
அகிலமெங்கும் முழங்கிட
அன்பியம் ஓங்கிட
விழித்தெழு மானிடனே! விடியலைத் தேடிடு.

### பல நூற்றாண்டின் பாலகனே

பெ. இ. அமலநாயகம்

பல நூற்றாண்டின் பாலகனே – அருள்தரும்
ஆண்டில் நுழைகின்றோம் பாலகனே
கிறிஸ்துவுக்கு முன்னென்றும் பாலகனே
கிறிஸ்துவுக்கு பின்னென்றும் பாலகனே
புது வரலாறு உம்மால் உருவானது பாலகனே
ஈர்பத்து வருடங்கள் பாலகனே
மானிடம் உம்மால் மகிழ்ந்தது பாலகனே
எம் மனங்களில் நீர் பிறக்கவேண்டும் பாலகனே
புத்தாண்டில் புத்துணர்வு பாலகனே
புத்துயிர் பெறவேண்டும் பாலகனே
நீதியுடன் நிலையான சமாதானம் பாலகனே
பிறந்திடச் செய்யும் பாலகனே

### ஓர் தேடல்

வறுமையிலும் வாழத்தெரிந்தவனாக
வையத்துள் அன்புள்ளவனாக
பதவியில் பணிவுள்ளவனாக
உணர்வுகளை மதிப்பவனாக
உரிமைகளைக் காப்பவனாக
அமைதியின் தூதனாக
அநீதியில் குரல்கொடுப்பவனாக
மனிதமுள்ள புதுமனிதனை
சந்திக்க விரும்புகிறேன்
ஆண்டவனின் அருளான
யூபிலியின் பயனாக.

யோ. றூபி கா(நவாலி)

### ஔடதமாய் வரவேற்போம்

அருளினைத் தருகின்ற
ஆண்டினை அன்புடனே
இப்புவிக்கு எந்நாளும்
ஈந்திடும் இரட்சகரை
உத்தம் தலைவரை
ஊழியச் செம்மலை
எளிமை உருவெடுத்து
ஏசுவாகப் பிறந்திங்கு
ஐயம் அகலவைக்கும்
ஒளியாக வழியாக வந்த
ஓசான்னா நாயகனை
ஔடதமாய் வரவேற்போம்.

சீ. நஜாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்மஸ் நாள்



கத்தோலிக்க மதத்தில் கிறிஸ்மஸ் ஒரு தலை சிறந்த பண்டிகையாகும். திருச்சபையை நிறுவிய கிறிஸ்துவின் பிறந்த நாளுமாகும். இத்தினத்தை முதன் முதலில் எகிப்தியர்கள் கி.பி. 200 இல் கொண்டாட ஆரம்பித்தனர். அதற்கு முன் அவர் உயிர்த்த விழாவையே முக்கியமாகக்கருதி கொண்டாடினர். ஆகையால் கிறிஸ்து பிறப்பின் சரியான காலத்தைக் கண்டறிவது கடினமாயிற்று. வேதநூல் வல்லுனர்களின் கருத்துப்படி மே மாதம் 20ம் நாள், ஆகஸ்ட் மாதம் 28ம் நாள், ஏப்ரல் மாதம் 20ம் நாள் எனப் பலவாறு கிறிஸ்துவின் பிறப்பு நாளை மக்கள் கருதினர். எகிப்தியர்கள் கி.பி. 327ல் முதன் முறையாக டிசெம்பர் 25ம் நாள் கொண்டாடினர். கிறிஸ்துவின் பிறப்பை ஜனவரி 6ம் திகதி சைப்பிரஸ் மக்கள் கொண்டாடினர். இதனைப் பின்பற்றி கொன்ஸ்தாந்திநோபிள், கிரேக்க பிரிவினையாளர், ரஷ்ய மக்கள் முதலியவர்கள் கிறிஸ்து பிறப்பை ஜனவரி 6ம் திகதியே இன்றும் கொண்டாடி வருகின்றனர். கி.பி. 354ம் ஆண்டு உரோமை மக்கள் டிசெம்பர் 25ம் திகதி கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடினர். இதற்குக் காரணம் மேனாட்டு மக்கள் கதிரவனை குளிர்நாட்களில் டிசெம்பர் 25ம் நாள் தான் காண முடிந்தது. ஆதலால் இந்த நாள் கதிரவன் பிறப்பு விழாவாக உரோமையில் அநேககரால் கொண்டாடப் பட்டது. ஞான சூரியனும், உலகிருள் போக்கும் ஒளியுமாகிய கிறிஸ்துவின் பிறப்பை அதே திகதியில் கொண்டாடுவது பொருத்தமென்று கருதினர் போலும்! "சூரியன் பிறந்த அதே நாளில் தான் கிறிஸ்து நாதரும் பிறந்திருக்க வேண்டும்" என்ற புனித சிப்பிரியன் கூற்றும் இங்கு நோக்கத்தக்கது. கி.பி. 529ல் பேரரசன் ஜச் சோனியர் இந்நாளை அரச விடுமுறை நாளாக அறிவித்தார்.



## கிறிஸ்மஸ் மரம்

மேல்நாடுகளில் டிசெம்பர் மாதத்தில் பனியின் காரணமாக மரத்தின் இலைகளெல்லாம் உதிர்ந்து வெறுமையாகக் காட்சியளிக்கும் ஆனால் நித்திய பச்சை (Ever green) என்னும் மரம் மட்டும் இதற்கு விதிவிலக்கு.

கிறிஸ்தவர்கள் சிங்காரத் தோட்டத்தின் நடுவிலிருந்த பழ மரத்தை நினைவில் கொண்டு இம் மரத்தை அப்பிள் கனிளாலும் மற்றும் பொருட்களினாலும் அலங்கரித்தனர். டிசெம்பர் 25ம் திகதி நம் முதல் பெற்றோரை நினைவுபடுத்த 1605ம் ஆண்டு ஸ்ட்ராஸ் பர்க்கில் (Strasbourg) கொண்டாடப்பட்ட ஒன்றுதான் கிறிஸ்மஸ் மர விழா (X'mas tree).

பிற்காலத்தில் அம்மரம் கிறிஸ்தவர்கள் வீட்டில் வைத்து வளர்ப்பார்கள். கிறிஸ்மஸ் தினங்களில் இம் மரத்தை வர்ண மின்குமிழ்களாலும், சோடனைகளாலும், பலூன்களாலும் அலங்கரித்து வைத்திருப்பார்கள். இக்கிறிஸ்மஸ் மரம் 18ம் நூற்றாண்டில் இங்கிலாந்திற்கும் 19ம் நூற்றாண்டில் அமெரிக்காவிற்கும் பரவியது.

## கிறிஸ்மஸ் வாழ்த்துமடல்




பண்டிகையன்று கிறிஸ்தவ மக்கள் உற்றார் உறவினர்களையும், குருக்களையும் வாழ்த்தி வணங்கும் பண்பைக் காணலாம். வெளியூர்களில் இருக்கும் நண்பர்களுக்கும், உறவினர்களக்கும் தங்கள் ஆசிச் செய்திகளை கிறிஸ்மஸ் கார்டு (Card) மூலம் தெரிவித்துக் கொள்வதுண்டு. மிஸ்டர் யோசவ் கீண்டால் என்பவரால் இந்த வழக்கம் முதன் முதலில் மேல் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் "ஸார் ஹென்றி கோல்" என்னும் பிரபு 1843ல் ஓவியர் ஹர்சிலி மூலம் வரைவித்து அதை அச்சிட்டு எல்லோருக்கும் அனுப்பினார். இப்படம் இப்போதும் விக்டோறியா அல்பர்ட் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதைப் பின்பற்றியே தான் பண்டிகை வாழ்த்து மடல்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.

மேலும் கிறிஸ்மஸ் கார்டுகளில் சிகப்புநிற பழத்துடன் சேர்ந்த இலையின் (ஹாலி) படம் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அந்த இலைகளில் கூர்மையான அரும்புகள் காணப்படும். அவைகள் இயேசுவின் தலையில் வைத்த முள்முடியையும், செந்நிறப் பழங்கள் தலையிலிருந்து வழிந்த இரத்தத்தையும் நினைவுப்படுத்துகின்றன. சிகப்பு தியாகத்திற்கும், முள் தொல்லைகளுக்கும் அறிகுறியாகும்.




## கிறிஸ்மஸ் தாத்தா

(Christmas father)

அமெரிக்கப் பேராசிரியர் "கிளமென்ஸிமூர்" என்பவரின் கற்பனைணில் உதயமானவரே கிறிஸ்மஸ் தாத்தா ஆவார். சாண்டாகிளாஸ் என்பது அவரது பெயர். சென்ட் நீக்கிலஸ் என்ற பெயர் காலப் போக்கில் மருவி சாண்டகிளாஸ் என்று வந்ததாகக் கருதப்படுகின்றது. சென் நீக்கிலஸ் ஆயராக இருந்தவர். பஞ்சு போன்ற செந்நிற உடையும், சிகப்புக் குல்லாவும் அணிந்து வெள்ளை மீசை, தாடியுடன் வயோதிபத் தோற்றமளித்தவர். ஒரு பை நிறைய சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், இனிப்புப் பண்டங்கள் வைத்து தோளில் போட்டுக்கொண்டு ஸ்லெட்ஜ் என்ற சக்கரம் இல்லாத பனிக்கட்டி வண்டியில் இருந்து ரெயிண்டியர் என்ற வடதுருவ மான்களால் இழுக்கப்பட்டு ஒவ்வொரு வீட்டிற்கும் நடு இரவில் வந்து சிறுவர்கள் வேண்டும் பொருட்களை அவர்கள் தூங்கும்போது பக்கத்தில் வைத்துவிட்டு செல்வார் என்பது சிறுவர்களின் நம்பிக்கை. ஆகையால் சிறுவர்கள் பண்டிகையன்று நித்திரைக்குச் செல்ல முன் கடவுளிடம் 'சாண்டகிளாஸ்' தங்களுக்கு விருப்பமான பண்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்று ஜெபித்து ஒரு பையை தலைப்பக்கத்தில் வைத்துவிட்டுத் தூங்குவார்கள். குழந்தையின் வேண்டுகோளை ஒளிந்திருந்து கேட்கும் பெற்றோர்கள் அவர்கள் தூங்கும்போது விளையாட்டுப் பொருட்களையும், இனிப்புப் பண்டங்களையும் பையினுள் வைத்துவிடுவார்கள். மறுநாள் குழந்தைகள் தாங்கள் கடவுளிடம் கேட்ட பொருட்களை அவர் சாண்டாகிளாஸ் மூலம் தந்துவிட்டார் என்று மகிழ்ந்து அவருக்கு நன்றி செலுத்துவார்கள்.

## கிறிஸ்மஸ் திருப்பலி



உரோம் நகர "பைசான்டைன்" அதிகாரிகள் டிசெம்பர் 25ம் திகதி அரண்மனை ஆலயத்தில் புனித அனஸ்தாசியார் திருநாளைக் கொண்டாடி வந்தனர். கி.பி. 4ம் நூற்றாண்டில் பாப்பரசர் அவர்களுக்கு மகிழ்ச்சி கொடுக்கும் பொருட்டு புனித இராயப்பர் பேராலயத்தில் கிறிஸ்மஸ் திருப்பலி நிறைவேற்ற அனுமதித்தனர். சில வருடங்கள் கழித்து அந்த ஆலயத்தில் கொண்டாடும் கிறிஸ்மஸ் திருப்பலிக்கு கிறிஸ்மஸ் திருவழிபாட்டு வாசகம், திருப்பலிச் செபம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர்.

பெத்லகேமில் இரவு கிறிஸ்மஸ் வழிபாடு நடத்துவது போன்று உரோமையிலும் இரவு கிறிஸ்மஸ் திருப்பலி ஆரம்பிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது. சார்லஸ் அரசராக இருக்கும்போது உரோமை வழிபாட்டு முறையை எங்கும் பரப்பினர். அதன் விளைவாக் கிறிஸ்மஸ் திருப்பலி எங்கும் நிறை வேற்றப்பட்டது.

மேலும் கிறிஸ்து பிறப்பு விழாவில் முதன் முதலில் மறையுரையாற்றியவர் நபிடியாவிலுள்ள மிலேவ் என்ற ஊரைச் சேர்ந்த "ஒப்டாடஸ்" என்பவர் ஆவார்.

தொகுப்பு - C. C. கொலிந்திரன்
நல்லூர்



## கிறிஸ்மஸ் வால் நட்சத்திரம்

கிறிஸ்மஸ் குடிலில் வைக்கப்பட்டிருக்கும் வால் நட்சத்திரத்தைப் பற்றி புனித விவிலிய நூலில் கூறப்பட்டிருக்கும் கதை சுவையானதாகும். கிறிஸ்து பூலோகத்தில் பிறந்ததை ஆகாயத்தில் தோன்றிய வால் நட்சத்திரத்தின் மூலம் வான சாஸ்திரிகள் தெரிந்து கொண்டார்கள் என்றும் மூன்று அரசர்கள் அந்த வால் நட்சத்திரத்தை பின்தொடர்ந்து சென்று அது பெத்லகேமில் மலையடிவாரத்திலுள்ள மாட்டுக் கொட்டிலின் மேல் நிற்க அவர்கள் அங்கு சென்று பார்த்தபோது உலக இரட்சகர் பிறந்திருப்பதைக் கண்டார்கள் என்று கூறப்படுகிறது. எனவே ஆகாயத்தில் உதித்த விண்மீன் இயேசு பாலகன் பிறந்த இடத்தைக் காண துணை செய்ததின் அறிகுறியாக கிறிஸ்தவ நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் இல்லங்களில் பண்டிகையன்று வால் நட்சத்திரம் போன்ற உருவத்தில் கூடுகட்டி அதனுள் தீபம் ஏற்றி வீடுகளில் தொங்கவிட்டு அலங்கரிப்பார்கள். இரவில் கிறிஸ்மஸ் கீதம் (Carol) பாடிக்கொண்டு ஊர்வலமாக செல்கின்றவர்களுக்கு கிறிஸ்தவ வீடுகளை அடை யாளம் கண்டுகொள்ள ஏதுவாக இருந்தது.



## கிறிஸ்மஸ் விழா

நாம் பல திருவிழாக்களைக் கொண்டாடுகின்றோம். ஆயினும் கிறிஸ்மஸ் பெருவிழா கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூறுவதாக அமைகின்றது. கிறிஸ்மஸ் என்னும் சொல்லானது கிறைஸ்ற் (Christ) + மாஸ் (Mass) என்ற வார்த்தையிலிருந்தே, அதாவது கிறிஸ்துவின் திருப்பலி என்ற சொல்லில் இருந்தே கிறிஸ்மஸ் (Christmas) என்ற வார்த்தை பிறந்தது.

மேலும் "நாத்தாலே" என்றால் பிறப்பின் நினைவுவிழா என்று பொருள்படும். 4ம் நூற்றாண்டில் அரச அவையில் இவ்வார்த்தை அரசன் மகுடமணிந்து அரியணை ஏறும் மகிழ்ச்சி மிக்க நாளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இச் சொல்லிலிருந்து நத்தார் என்னும் சொல் தோன்றியிருக்கலாம் என நம்பப் படுகின்றது.



## கிறிஸ்மஸ் பாடல்

காத்தரைப் புகழ்ந்து பாடப்பட்ட பாடல்களின் கொத்து என்று இதற்குப் பெயர். பாலன் பிறந்த நற்செய்தியை தேவ தூதர்கள் ஆகாயத்தில் காட்சியளித்து இடையர்களுக்குத் தெரிவித்ததுமல்லாமல் "உன்னதத்திலிருக்கும் தெய்வத்திற்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனிதர் மேல் பிரியமும் உண்டாவதாக." என்று பாடினார்கள் அதையொட்டியே கிறிஸ்து பிறந்த தினத்தன்று தெய்வபாலனுக்கு தாலாட்டுப் பாடும் வழக்கம் பிறந்திருக்கின்றது.

முதல் கிறிஸ்து பிறப்பு பாடல். புனித பிரான்சிஸ் அசிசியாரால் இத்தாலிய மொழியில் இயற்றப்பட்டது. 1818ம் ஆண்டு ஆஸ்திரியாவில் உள்ள ஒபெர்ண்டோல் கிராமத்தின் பங்குத்தந்தை அருட்திரு யோசவ் மோர் என்பவரால் பாடப்பட்ட "அமைதி இரா தூய இரா" (Silent night Holy night) என்ற பாடலே காலப்போக்கில் சிறப்புப்பெற்ற கிறிஸ்மஸ் பாடலாக அமைந்தது.

## கிறிஸ்மஸ் குடில்



முதன் முதலாக குடில் தோன்றியது பெத்லகேமில்தான். இளந்திருச்சபை கிறிஸ்து பிறந்த இடமான குகை, மாட்டுத்தொழுவம் போன்ற இடத்தை மறக்காமல் பிறருக்கு அதைப்பற்றி எடுத்துக்கூறி வந்தது. பேரரசன் "கொன்ஸ்டன்ரைனின்" தாயான புனித எலன் அத்ன்மீது ஒரு ஆலயத்தைக் கட்டினார். களிமண்ணால் ஆன மாட்டுத்தொழுவத்தை தங்கத்தால் செய்தனர் என்று கூறப்படுகின்றது. 1223ம் ஆண்டு கிரேசியா என்னும் இடத்தில் புனித பிரான்சிஸ் அசிசி மாட்டுத்தொழுவம் ஒன்றைச் செய்து அதில் வைக்கோலை நிரப்பினர். பாப்பரசர் உத்திரவுடன் அங்கு ஒரு பீடத்தை வைத்தார். ஒரு குரு அங்கு திருப்பலி நிறைவேற்றினார். திருத் தொண்டராயிருந்த புனித பிரான்சிஸ் அசிசி நற்செய்தி வாசகம் படித்து மறையுரை ஆற்றினார். அவரின் மறையுரை அத்திருப்பலியில் பங்குகொண்ட அனைவருடைய உள்ளத்தையும் தொட்டது. அதன் பிறகு பிரான்சிஸ்கன் சபையார் "குடில்" அடைப்பதை எங்கும் பரப்பினர். தொடக்கத்தில் பெத்லகேமில் உள்ள குகையை நினைவூட்டும் வகையில் குடில் செய்ய ஆரம்பித்தது. ஆயினும் 16ம் நூற்றாண்டுக்கு பின்னரே மக்கள் வீடுகளில் குடில் அமைக்கும் வழக்கம் அதிகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களோடு ஒரு நிமிடம் . . .

இரண்டாயிரமாம் கிறிஸ்து பிறப்புடன் உதயமாகும் மூன்றாவது மிலேனியம் எம் எல்லோருக்கும் 'யூபிலி' ஆகிடவேண்டும். இது முடியுமா? இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள குறுகிய படைப்புக்கள் ஆழ்ந்து அமிழ்ந்து மேற்கொள்ளப்பட்ட இறையியல் தேடல் அல்ல. சாதாரண மனித சிந்தனையின் வெளிப்பாடுகளே இவை.

இயேசுவின் மனித அவதாரத்தின் இரண்டாயிரம் ஆண்டுகள் என்பது ஒருபுறம். மூன்றாவது மிலேனியத்தின் விடியல் என்பது மறுபுறம். அறிவியல் வளர்ச்சி ஒருபுறம். பெருகிடும் அழிவுகள் மறுபுறம். பழக்கப்பட்ட பழக்கங்கள் ஒருபுறம். பழகவேண்டிய அன்பிய வாழ்வின் முறை மறுபுறம். அழிவுகள் வாழ்வின் முடிவன்று.

பீதி கொள்பவர்களும் உள். மனமாற்றத்தினூடாக மகிழ்வின் நிறைவை அனுபவமாக்கிக் கொள்ளலாம் என்று நம்பிக்கையோடு இருப்பவர்களும் உள். விழிப்புடன் இருக்க இறைவார்த்தையூடாக வரும் அழைப்பு, சவால்கள் நிறைந்திருந்தாலும் நம்பிக்கை தருவதாகவும் அமைகின்றது. ஒவ்வொருவரும் தனக்குத்தானே என்ன செய்திடவேண்டும், பிறருக்கு என்ன ஆற்றிட வேண்டும் என்ற கேள்விகளுக்குரிய விடைகளை இந்தக் குறுகிய படைப்புக்களுக்குள் மேற்கொள்ளப்படும் தேடல்கள் வெளிப்படுத்தும். இந்த வெளிப்பாடு யூபிலி 2000 எம் அனைவருக்கும் அருள்தரும் ஆண்டாக விடிந்திட வழிகோலும் என நம்புகிறோம்.

அன்புடன்
அருள்திரு கிருபாகரன்

## இழந்தவர்களுக்கு . . .

அன்பு அறுந்து
அமைதி இழந்தவர்க்கும்
இடம்பெயர்ந்து
உடமை இழந்தவர்க்கும்
நீதி தொலைந்து
உரிமை இழந்தவர்க்கும்
பலம் உடைந்து
வலு இழந்தவர்க்கும்
அடக்குமுறைக்குள்
வார்த்தை இழந்தவர்க்கும்
ஊமை இரவில்
உறவினை இழந்தவர்க்கும்
உறவு அறுந்தே
உணர்வினை இழந்தவர்க்கும்
உணர்வுகள் சிதைந்ததனால்
நாதி இழந்தவர்க்கும்
நானிலம் மீதிலே . . .
அன்பினை வளர்த்து
உள்ளதைப் பகிர்ந்து
வலிமையூட்டி
வார்த்தை அளித்து
உரிமையை வழங்கி
விடுதலை அளிக்கும்
அருள்தரும் ஆண்டினை
முழக்கமிட்டு யாவர்க்கும்
அறிவிக்க அழைக்கின்றார் . . .

-தே. ரவிராஜ்

## சவால்களா? . . . எனக்குமா . . . ?

இன்னும் சொற்ப தினங்களில் மலரப் போகின்ற மூன்றாவது யுகத்தில் கால்பதிக்கும் ஆவலுடன் காத்திருக்கும் எம்மனைவருக்கும் இந்த உலகமும் திருச்சபையும் விடுக்கின்ற சவால்கள் பலப்பல. நாகரீகத்தின் உச்சியிலும் தொழில்நுட்பத்தின் முதிர்ச்சியிலும் மனிதஇனம் அமோக வெற்றியைக் கண்டுவிட்டது. கணணித் தொழில்நுட்பத்தின் வியக்கவைக்கும் வளர்ச்சியை நோக்கும்போது மூன்றாவது யுகத்தின் யதார்த்தத்திற்கு எமது சாதாரண மனித வாழ்வு ஈடுகொடுக்குமா என்ற சந்தேகம் கூட எழுகின்றது. இந்நிலையில் திருச்சபை எம்மனைவருக்கும் விடுக்கின்ற சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியது அதன் உறுப்பினர்களாகிய எம்மனைவரினதும் கடமையாகும்.

புதுமைக்குப் பின் புதுமையைப் படைக்கும் இந்த நவீன உலகில் பல நூறு வருடங்களுக்கு முன்பு மீட்புத் திட்டத்தில் நடந்தேறிய சில நிகழ்வுகளை மீண்டும் நிதர்சனமாக்க திருச்சபை இன்று எமக்கு அழைப்பு விடுக்கின்றது. நாம் பல தடவைகள் கேட்கின்ற யூபிலியைப் பற்றித்தான் இங்கு குறிப்பிடப்படுகின்றது. கிறிஸ்து பிறப்பின் 2000 ஆம் ஆண்டு யூபிலி என்பது காலத்தின் அடிப்படையில் நாம் எதிர்கொள்கின்ற ஒரு புதிய நிகழ்வாக அமைகின்றது. ஆனால் இந்த யூபிலி எமக்குத் தருகின்ற செய்தி, அதன் உட்பொருள், அது எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்ற செயற்பாடுகள் இவையெல்லாம் என்றோ ஒருநாள் மீட்பின் வரலாற்றில் நடந்தேறிய நிகழ்ச்சிகளே.

வேதாகமத்தின் லேவியராகமம் 25ஆம் அதிகாரத்தைச் சற்றுப் புரட்டிப் பார்த்தால், *இறைவனின் கட்டளைப்படி மோயீசனின் வழிநடத்தலின் கீழ் இஸ்ராயேல் மக்கள் கொண்டாடிய யூபிலியைப் பற்றிய செய்தியை நாம் காணலாம். அன்று இறைவன் தம் மக்களுக்கு விடுத்த அதே சவால்கள் இன்று எமக்கும் விடுக்கப்படுகின்றன.*

❶ வருடங்கள் பல கடந்தும் எமது வரட்டுக் கௌரவங்களுக்காக நாம் விட்டுக்கொடுக்க விரும்பாத குடும்பப் பிரச்சனைகள், சகோதரப் பகைமைகள் ஆகியவற்றை மறந்து உண்மையான மன்னிப்பில் ஒரு புதிய உறவினைக் கட்டியெழுப்புவோமா?

❷ ஓர் அடி அகல நிலத்தை விட்டுக்கொடுக்க மனமில்லாத பேராசையால் எமக்குள் உள்ள காணிப்பிரச்சனை, வேலிப் பிரச்சனை மற்றும் கிணற்றுப் பிரச்சனை ஆகியவற்றுக்கெல்லாம் உண்மையான அன்பின் அடிப்படையில் தீர்வு காண்போமா?

❸ நாங்கள் மிக்க செல்வர்களாக இருந்தாலும் வாங்கிய கடனைத் திருப்பித் தர முடியாமல் தவிக்கின்ற ஏழைகளின் கழுத்தை நெரித்து "வாங்கிய கடனை உடனே அடை" என்று சொல்லுகின்ற பணத்தாசை பிடித்த கல்நெஞ்சக்காரராக நாம் தொடர்ந்தும் இருக்கப் போகின்றோமா?

❹ நாட்டில் பிரச்சனை என்றவுடன் பொருட்களை பதுக்கி, பின்னர் கொள்ளை இலாபத்தில் விற்கும் மோசமான வியாபாரிகளாக நாம் தொடர்ந்தும் இருக்கப் போகின்றோமா?

❺ காலத்தின் தேவைக்கேற்ப நாகரிகம் என்ற போர்வையில் எமது ஒழுக்கங்களை சீர்குலைக்கின்ற தான்தோன்றித்தனமான வாழ்க்கையோடு அள்ளுப்பட்டுச் செல்கின்ற இளைஞர் சமூகமாக நாம் இருக்கப் போகின்றோமா?

❻ திருப்பலி, வழிபாடுகளில் பார்வையாளர்களாக மட்டும் வாழ்கின்ற இறையுணர்வற்ற மக்களாகவா நாம் தொடர்ந்தும் இருக்கப் போகின்றோம்.

❼ உழைக்கின்ற பணத்தை தினமும் மூன்று சினிமா பார்ப்பதற்கு செலவு செய்கின்ற சினிமாப் பித்தர்களாகவா நாம் தொடர்ந்தும் இருக்கப் போகின்றோம்.

❽ எமக்குள் ஊறிப்போயிருக்கின்ற சாதிபேதங்கள், பங்குத் தளங்களில் எம் சகோதரர்களைப் புறக்கணித்து நாம் அனுபவிக்க முற்படுகின்ற அற்பச் சலுகைகள், அரச அலுவலகங்களில் நாம் கொடுக்கின்ற, பெறுகின்ற லஞ்சங்கள் இவையனைத்தையும் எம்மிடமிருந்து களைந்து நீதியின் வழியில் சமத்துவம் படைக்க முற்படுவோமா?

❾ இன்னும் எம் சமூகத்தில் காணப்படும் அநீதிகள், தீமைகள் அத்தனைக்கும் எதிராக எம்மால் குரல்கொடுக்க முடியாவிட்டாலும் இவற்றில் நாம் ஈடுபடமாட்டோம் என்று உறுதி எடுப்போமா?

இச் சவால்களையெல்லாம் நாம் துணிவுடன் எதிர்கொள்வோமானால் அதில் கிடைக்கின்ற வெற்றிதான் எமக்கு உண்மையான யூபிலி. இத்தனை சவால்களையும் நாம் எதிர்கொண்டால் யூபிலியைக் கொண்டாட 2000ஆம் ஆண்டை எதிர்பார்த்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இச்சவால்களை எதிர்கொள்பவனுக்கு ஒவ்வொருநாளும் யூபிலியின் உண்மையான மகிழ்ச்சி கிடைக்கின்றது. இறைவனின் அருள்தரும் ஆண்டில் இறையருள் நிரம்பப் பெறவேண்டுமா? - இன்றே இச்சவால்களை எதிர்கொள்வோம்.

அருட்சகோ. அலோசியஸ் - 3ஆம் ஆண்டு இறையியல்



## தெய்வம் மனிதனாக, மனிதனோ . . . !

இரண்டாயிரமாம் ஆண்டின் இறுதியிலும் மூவாயிரமாம் ஆண்டின் தொடக்கத்திலும் வாழ்க்கைப் பதிவை மேற்கொள்கின்ற நாம் பாக்கியவான்கள். இரண்டாயிரமாம் ஆண்டு பல நவீனரக முன்னேற்றங்களுடன் எம்மை இருகரங்கள் நீட்டி வரவேற்கின்றது. இந்தப் புதிய யுகத்தினுள் நாம், மனித அவதாரமான எம் இறைவன் இயேசுவின் அன்பின் சாட்சிகளாய் குடிபுகுவோம்.

இறைவன் மனிதரான வரலாற்று நிகழ்வின் ஈராயிரம் ஆண்டுகள் நிறைவுபெறுகின்றன. அன்று பலஸ்தீன தேசத்தில் இறைவனால் விசேட அழைப்புப் பெற்றுப் பராமரிக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் மீட்பரை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். மனிதனைப் பாவத்தளையிலிருந்து விடுவிக்க அந்த மக்கள் மத்தியில் இயேசு என்னும் மனிதனாக இறைமகன் வந்தார். ஆனால் அவர்கள் தங்கள் பாவ நிலையை அகற்ற மறுத்தார்கள். தங்களது எதிர்பார்ப்புக்கு மாறாக அமைந்த உண்மையின் ஒளியை அணைத்தார்கள். "அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை"(யோவான் 1:11). எனவே, இறைத் திட்டத்தின்படி ஏனைய இனமக்களுக்கு இறையழைப்புக் கிட்டியது.

இறைவனுக்குச் சொந்தமான மக்கள் என்ற அழைப்பை தமிழ் பேசும் மக்களாகிய நாமும் பெற்றுள்ளோம். ஆயினும் எமது நாளாந்தச் செயல்பாடுகளால் அவ்வழைப்புக்குக் களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றோம். எம்மண்ணில் இன்றும் அவர் உதிக்கின்றார். இயேசு என்னும் யூதனாக அல்ல, மாறாக ஏழையாக, எளியவனாக, துன்பப்படுகின்றவனாக, அகதியாக அனைத்தையும் இழந்தவனாக.

*"மனிதா! நீ வாழ்வது மனிதமா அல்லது மிருகமா. நான் உன்னைப் புனித நிலைக்குக் கொணர முயல, நீயோ உனது வாழ்க்கை முறையால் பாதாளத்தை நாடுகின்றாயே!" என இன்று இயேசு மனம்குமுறி அழுகின்றார்.* ஆனால் நாம் சடங்குகளில் மட்டும் கிறிஸ்தவத்தைக் காண்பிக்கின்றோம். பணம், பதவி, பட்டம், சாதி போன்றவற்றை அடிப்படையாக்கி இயேசுவைக் கொல்லத் தேடும் ஏரோதுக்களாகியுள்ளோம். இன்னும் எவ்வகைப் போர்முறைகள் நமக்கு வேண்டியிருக்கின்றன. எத்தனை இடம்பெயர்வுகள் எமக்குத் தேவை. எத்தனை சோதனைச் சாவடிகளை ஆசிக்கின்றோம்.

இயேசுவின் மலைப்பொழிவை (மத். 5:3-12) சற்றுப் புரட்டுவோம். பேறுபெற்ற மக்களாக வாழ முற்படுவோம். மனங்களை மிருதுபடுத்தி எம்மைத் தேடிவரும் இயேசுவை வரவேற்போம். புதுயுகத்தில் புத்துணர்வுடன் அன்புப்பணியில் கிறிஸ்துவின் சாட்சிகளாவோம். பாவ இருளகற்றி அருளொளியேற்றும் யூபிலி ஆண்டில் ஆன்மீகத்திற்கு உயிரூட்டம் கொடுப்போம். எமது வாழ்க்கை மாற கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றுக்குச் செல்வோம். முன்னுதாரண வாழ்வாகிய ஆதிக் கிறிஸ்தவ வாழ்வை (தி.ப. 2:42-47) அன்பிய வாழ்வாக எம் மண்ணில் வாழ்வோம். உலகியல் நீரோட்டத்தில் நாம் அடிபட்டுச் செல்லாமல் இறைவார்த்தையை வாழ்வாக்கி வரம்புகளைக் கட்டுவோம். மனிதனைத் தெய்வமாக்க மனிதனான தெய்வத்தின் திருவுளத்திற்கு எம்மை விட்டுக்கொடுத்து, அன்பிய சமூகமாக மாறுவோம். இறையரசை இப்பிரதேசம் அனுபவிக்க வழிகோலுவோம்.

-அ. பீ. திருமகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இதைச் செய்வது?

சிந்திக்க . . .

அ. குசைநாதன்

அன்றைய விடியலுக்கான எதிர்பார்ப்பு பரபரப்பானது. சிலருக்கு மகிழ்ச்சியும் சிலருக்கு ஏக்கமும் நிறைந்த எதிர்பார்ப்பு. பாயில் படுத்திருந்த மதி 'ஏன் இன்றைய நாள் இப்படி?' என்ற சிந்தனையோடு புரண்டு மறு பக்கம் படுக்கின்றான். 'இன்று நத்தார் பூசை இருக்கின்றது. சாமப்பூசை என்றால் இருக்கிற உடுப்போட போயிற்று வரலாம். இது என்னென்றால் காலையில் அல்லோ பூசை. சுவாமியால் என்ன செய்ய முடியும், ஊரடங்குச் சட்டமும் அமுலில் இருக்கு'.

பாயில் புரண்டவாறே அவனுடைய சிந்தனையை வளர விடுகின்றான். 'இரண்டு இயந்திரப் படகுகளுடன் இருபது ஆட்களைக் கொண்டு தொழில் நடத்திய அப்பா இன்று ஒரு நேரத் தொழிலுக்காய் வரிசையில் நிற்கிறார். அலட்டிக்கொள்ளாத அண்ணா படித்து, வேலைக்கலைய, சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பட்டியலில் முதல் வரிசையில் இருக்கின்றார். தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் தனது வலதுகாலை இழந்த தம்பி. இதன் தாக்கங்களால் வீட்டின் பொருளாதார நிலை பாதிக்கப்பட முப்பது வயது கடந்தும் சீதனப்பிரச்சினையால் தள்ளிப்போடப்பட்டுக் கொண்டிருக்கும் அக்காவின் திருமணம். இவைகள் மத்தியில் எனது படிப்புக்கான செலவு'.

சிந்தனை வயப்பட்டவனின் உணர்ச்சி அலைகள் மனதில் முட்டி மோதுகின்றன. அவன் மனம் எதையோ தேட விளைகின்றது. எப்போதோ கேட்ட இறைவார்த்தைப் பகுதி அவனது எண்ணத்தில் தோன்றி மறைகின்றது.

'ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடப்படவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பியுள்ளார். (லூக், 4: 18–19)

'இந்த வார்த்தை வெளிப்படுத்தும் அர்த்தம் என்ன? என்று அவன் ஆழமாகச் சிந்திக்கிறான். இந்த வார்த்தைக்கும் எனது வாழ்வுக்குமிடையே இடைவெளி அதிகமாய் இருக்கின்றதே அருள்தரும் ஆண்டு, யூபிலி ஆண்டு என்று இந்த நாட்களில் அடிக்கடி சொல்கின்றார்களே, இதன் பொருள் என்ன? எனது வாழ்வோ மகிழ்ச்சிக்குப் பதிலாக சோகமும், இழப்புக்களும் நிறைந்ததாக அல்லவா இருக்கின்றது இதற்கொரு முடிவே இல்லையா? எனக்கொரு விடிவே இல்லையா?' என்று வாய்விட்டு, பெருங்குரலெடுத்துக் கேட்கவேண்டும் போல் தோன்றுகின்றது.

உணர்ச்சி வயப்பட்டவன் ஒருவாறு உறுதியான ஒரு நிலைக்கு வருகின்றான். 'இறைவனின் வார்த்தை உயிர் உள்ளது. அது எப்போதும் என்னை வாழ்விப்பது. என் வாழ்வின் அர்த்தத்தை தந்து கொண்டே இருப்பது. எனவே இதில் எனது பங்கு என்ன?, எனது பணி என்ன? மீட்பின் செய்தி தரும் வார்த்தையை தளராத நம்பிக்கையோடும் உறுதியோடும் எடுத்துச் சொல்ல வேண்டும்! யார் இதைச் செய்வது? நான் ஏன் இதைச் செய்யக் கூடாது? எந்த நிலையில் நான் இருந்தாலும், எவ்வகையான வாழ்வைத் தெரிந்தெடுத்தாலும், அதன் ஊடே எனது பணியைச் செய்யவேண்டும். இன்று அரும்பிய சிந்தனை இறைவன் தரும் உரிய அழைப்பு' என்று எண்ணியவனாக புதிய உத்வேகத்தோடு படுக்கையைவிட்டு எழும்புகின்றான். அப்போது ஆலய மணியின் ஓசை அவன் காதுகளில் இன்பகானமாக ஒலிக்கின்றது.

# அழிவின் காலமா? மகிழ்வின் காலமா?

உலகமானது 2000ஆம் ஆண்டினை நோக்கி வீறுநடை பயின்று கொண்டிருக்கின்றது. மக்களின் மனதிலே பலவகையான எதிர்பார்ப்புக்கள். உலக நடப்புகளிலிருந்து இவர்கள் சிந்திக்கின்றனர். 2000ஆம் ஆண்டு எப்படி அமையப் போகின்றது என்ற ஏக்கமும் அங்கலாய்ப்பும் மக்கள் மனங்களிலே நிலவுகின்றது. இது இப்படி இருக்க, திருச்சபையானது கிறிஸ்து பிறப்பின் 2000ஆம் ஆண்டினை யூபிலி ஆண்டாக எதிர்நோக்கி இருக்கின்றது. இந்த நிகழ்வுகளையெல்லாம் மக்கள் பார்வையிலே நோக்குகின்ற போது ஒரு சிலர், இதனை இறுதிக்காலம் அல்லது அழிவின் காலம் என்றும், வேறுசிலர் இதனை மகிழ்வின் காலம் என்றும் கருதுகின்றனர்.

*மக்களில் சிலர் 2000ஆம் ஆண்டிலே உலகம் அழிந்துவிடும் என்றும், வேதாகமத்திலே கூறிய வார்த்தைகள் நிறைவேறிக்கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது என்றும் கூறுகின்றனர்.* 'நாட்டை எதிர்த்து நாடும், அரசை எதிர்த்து அரசும் எழும். பெரிய நில நடுக்கங்களும் பல இடங்களில் பஞ்சம், கொள்ளை நோயும் ஏற்படும்' (லூக். 21:10–11). 2000ஆம் ஆண்டினை அண்மித்துக் கொண்டிருக்கின்ற உலகமானது, இறுதிக்கால நிகழ்வுகளை அனுபவித்துக்கொண்டிருக்கின்றது. உலகம் அழிந்துகொண்டிருக்கின்றது. இன்று உலகத்திலே பாவம் பெருகிவிட்டது. பாவம்தான் இந்த அழிவுகளுக்குக் காரணம் என்கின்றனர்.

வேறு சிலர் இதனை மகிழ்வின் காலம் என்று கூறுகின்றனர். ஏனென்றால் அகதிகளாக வாழுகின்ற மக்கள் மீண்டும் தங்களுடைய வீடுகளுக்கும், இடங்களுக்கும், நில புலங்களுக்கும் செல்வார்கள் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியிலே காணப்படுகின்றது (லேவி 25:10). ஆனால் மகிழ்வு தானாக வந்துகுவியும் ஒன்றல்ல. பாவம் பெருகிவிட்டதென்பது உண்மை. நம் இறைவன் வாழ்வின் இறைவன். மனமாற்றத்தினூடாக வாழ்வுக்கு அழைக்கின்றார். அழிவுகளிலிருந்து காப்பாற்றப் படவேண்டுமென்றால் மக்களில் மனமாற்றம் என்பது ஒரு முக்கிய தேவையாகக் காணப்படுகிறது. மனமாற்றம் செயற்பாடுகளில் வெளிப்படவேண்டும். 'மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்' (லூக். 3:8).


இப்பொழுதெல்லாம் மக்கள் கோவில்களை நாடி ஓடிச் செல்வது குறைந்து கொண்டு போகின்றது. அநேகமாக ஆண்களின் ஈடுபாடுகள் குறைவாகவே காணபபடுகின்றன. அவர்கள் கோவில் வழிபாடுகளிலும், சேவைகளிலும் அக்கறை அற்றவர்களாக உலகளாவிய கவர்ச்சிகளுக்குள் அடிமைப்பட்டுவிடுகின்றனர். இந்நிலை மாறவேண்டும். யூபிலி ஆண்டை திருச்சபையானது வெற்றியின் புகழ்ச்சியின் அல்லது தற்பெருமையின் ஆண்டாகக் கொள்ளாது, இதனை மனமாற்றத்தின் ஆண்டாக, காலமாகக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. மலருகின்ற யூபிலி ஆண்டிலே சடங்குகள், சம்பிரதாயங்கள், வழிபாடுகள் அர்த்தம் நிறைந்தவையாக மிளிரவேண்டும்.

2000ஆம் ஆண்டு அழிவின் காலமாக, அல்லது மகிழ்வின் காலமாக அமைவது அவரவரைப் பொறுத்ததே. இறைவன் மனமாற்றத்தின் ஊடாக நிறைமகிழ்விற்கு எம்மை அழைக்கின்றார். வாழ்வின் மனமாற்ற நிலைகளைத் தேடுவோம். இறையருளுக்குப் பணிந்திடுவோம். 2000ஆம் ஆண்டு எம் அனைவருக்கும் யூபிலியாக, அருள்தரும் ஆண்டாக மலர்ந்திடட்டும்.

– செ. இராசநாயகம்.



# பூனை இல்லா வீட்டில் எலிகளுக்கு . . .



மார்கழி மாதம் பலருக்கும் மகிழ்வின் மாதமாகவுள்ளது. பல நூற்றாண்டுகளாகக் கொண்டாடப்பட்டுவரும் கிறிஸ்மஸ் விழா எமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. இறைமகனாம் இயேசுவின் மனுவுரு ஏற்பை நினைந்து கொண்டாடும் இறைமக்கள் கூட்டம் ஒரு புறம். மறுபுறம் இயேசுவின் மனுவுரு ஏற்பையோ இயேசுவின் கடவுட் தன்மையையோ நடைமுறையில் விசுவசிக்காத கூட்டமும் கிறிஸ்மஸ் விழாவை மகிழ்ந்து கொண்டாடுகின்றது.

எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியான மீட்பராம் மெசியா தாவீதின் ஊரில் பிறந்திருப்பதை வானதூதர் வாயிலாகக் கேட்ட இடையர் கூட்டம் தேடி, ஓடி அவரைக் கண்டு வணங்கி மகிழ்ந்தனர். விண்மீன் எழுதலைக் கண்டு கிழக்கிலிருந்து பெத்லகேமுக்கு வந்து இயேசுவை வணங்கி மகிழ்ந்தனர் ஞானியர். இவர்களைப் போல் இன்றும் பலர் கொண்டாடுகின்றனர். *அதேவேளையில் பல்வேறு வடிவங்களில் வர்த்தகமயமாக்கப்பட்ட கிறிஸ்மஸ் விழா வர்த்தகப் பேர்வழிகளுக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கின்றது. அவர்கள் இயேசுவைக் காணவில்லை. ஆனால் பணத்தைக் கண்டு மகிழ்ந்து நிற்கின்றனர்.*

▣ அன்று இத்தாலியில் வாழ்ந்த ஆயர் நீக்கிலார்தான் கிறிஸ்மஸ் தாத்தா. இவர் பனி, குளிர் என்று பார்க்காது கிறிஸ்மஸ் காலங்களில் நன்கொடைகளைச் சேர்த்துக்கொண்டு ஏழை எளிய மக்களிடம் சென்று அவர்களோடு பகிர்ந்து மகிழ்ந்து கொண்டாடினார். ஆனால் இன்றைய தாத்தாக்கள் பலரும் மழை, குளிர், இருள், ஊரடங்குச் சட்டம் எனப் பார்க்காது வீட்டின் கதவுகளைத் தட்டித் திறந்து, ஆடிப்பாடி, பணத்தை வசூல் பண்ணி, தமது கேளிக்கையான கொண்டாட்டங்களுக்குப் பாவிக்கின்றனர்.

▣ 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அசிசி நகர் தூய பிரான்சிஸ்கு, பாலன் குடிலை வடிவமைத்து கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடி மக்கள் பலரை இறைவன்பால் ஈர்த்துக் கொண்டார். இன்று அக்குடிலை வடிவமைத்து அதற்குரிய அலங்காரப் பொருட்களுடன் விற்பனை செய்து பணம் பெருக்குவதில் பல வியாபார நிறுவனங்கள் முன்னின்று உழைக்கின்றன. இலாபப் பெருக்கமே இவர்கள் நோக்கமாயுள்ளது.

இவ்வாறு பல்வேறு விதங்களில் இன்று கிறிஸ்மஸ் வியாபார மயமாக்கப்பட்டுக் கொண்டாடப்படுகின்றது. இலாபம் ஈட்டும் கிறிஸ்மஸ் பலராலும் கொண்டாடப்பட்டு வருகிறதேயன்றி, அருள்தரும் விடுதலையளிக்கும் கிறிஸ்மஸ் கொண்டாடப்படுவது அருகி வருகின்றது. லேவியராகமம் (அதி.25) காட்டும் யூபிலி (அருள் தரும் ஆண்டு) சொத்துக்கள் மீட்கப்படவும், ஏழைகளுக்குக் கடன் மன்னிக்கப்படவும், அடிமைகள் மீட்கப்படவும் வழிகோலியது. லூக்காவின் பார்வையில் (4:18–19) இயேசு அறிவிக்கும் யூபிலி ஆண்டில், ஏழைகளுக்கு நற்செய்தி சொல்லவும், பாவச் சிறையில் உள்ளவர்க்கு விடுதலை அளிக்கவும் பார்வையற்றோருக்குப் பார்வை கொடுக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமைவாழ்வு வழங்கவும் வழிபிறந்தது. ஏழ்மையில் பிறந்து, எளிமையை நேசித்து, ஏழை எளியவருடன் நெருங்கி, அவர்களுக்கு இறைவார்த்தையினை அறிவித்த இயேசு எம்மையும் தமது வழியில் பயணிக்க அழைக்கின்றார். பிறக்கவிருக்கும் யூபிலியில் எமது வாழ்வின் அர்த்தத்தை இயேசுவில் கண்டுகொள்வோம். கிறிஸ்து பிறப்பின் 2000ஆம் ஆண்டில், இந்த யூபிலியில் பலதரப்பட்ட வர்த்தகங்கள் எம்மைத் திசைதிருப்பாது, இயேசுவின் மனநிலையும், அவரது மனித உணர்வுகளும் எங்களது மனங்களிலும் உள்ளங்களிலும் நிறைந்து யூபிலி அருள்தரும் ஆண்டாக மலர்ந்து எல்லோரையும் மகிழ்விக்க வேண்டும். பூனை இல்லா வீட்டில் எலிகளுக்குக் கொண்டாட்டம். இயேசு இல்லா இல்லங்களிலும் உள்ளங்களிலும் . . .!

சி. லியோ ஆம்ஸ்ரோங்

## எப்படி அறிவிப்பேன்?

அன்றாட வாழ்வுக்கே
அல்லல்படும் அவலத்தில்,
அடுத்தவேளை உணவுக்கு
அங்கலாய்க்கும் நேரத்தில்,
நத்தாருக்கு உடுக்க
நல்லஉடை அற்றவேளை,
உள்ளதெல்லாம் இழந்து
உள்ளமுடைந்த நிலையில்,
உயிருக்கே மதிப்பில்லாத
உத்தரவாதமற்ற காலத்தில்,
சண்டை அரக்கனால்
சகதியாக்கப்பட்ட நிலையில்,
எப்படி நான் அறிவிப்பேன்
ஆண்டவரின் அருளாண்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமன்னன் மரியின் மஞ்சமதில்

புதுயுகப் பயணத்திலே
புதுப்பரணி பாடிடும் வேளையிலே
பூர்வீக மனிதனாக
கோள் அசைவுக் கோரங்களினாலும்
கொடிய வஞ்சினத்தாலும்
வான் அரக்க அழிவுகளாலும்
அகதிவாழ்வு அணிவகுக்க
அடக்குமுறை ஆட்டிப்படைக்க
ஆதிக்க வேட்கையினாலே
ஆசைமொழிகள் கூறி
ஆண்டாண்டு செய்த பழிதொடர,
இலக்கு இழந்தவனாக
இரவுகளே வாழ்வாகிட
இயம்பிடவோ யாருமின்றி
ஈனக் குரலெடுத்து
வாழும் மனிதம் வாடிடும்வேளை
வார்த்தையாம் மானிடமகன்
வண்ணமலர் சொரிய
வாடிய கொடி தழைக்க
வாழ்வாங்கு மனிதன் வாழ்ந்திட
வண்ணக் குழந்தையாக
அன்னைமரியின் மஞ்சமதில் தவழ்கின்றாய்
தாலேலோ பாலா தாலேலோ

ஆ. வின்சன் அ.ம.தி.

## 2000ஆம் ஆண்டு புதிய உதயமாகிட . . .

'நாட்டு அரசியல் சமூகத்தில் தங்களிற்கு இருக்கும் தனிப்பட்ட அழைத்தலைக் கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரும் உணர்ந்திருக்க வேண்டும். அவர்கள் பொறுப்புணர்வைத் தங்களிடத்தில் வளர்த்துக்கொண்டு, பொது நலனுக்குத் தங்களை அர்ப்பணிப்பதன் மூலம் எடுத்துக்காட்டாக விளங்க கடமைப்பட்டிருக்கிறார்கள் . . .' (இ. உ. தி.)

யூபிலி ஆண்டு மன்னிப்பினதும் விடுதலையினதும் ஆண்டாக அமைந்துள்ளது. ஆனால் இன்றைய நிலை முற்றிலும் எதிர்மறையான விளைவுகளைப் பிரசவித்துக் கொண்டுள்ளது. நாம் எவ்வாறு யூபிலி ஆண்டிற்குள் நுழையமுடியும்? 2000ஆம் ஆண்டு எவ்வாறு புதிய உதயமாகிட முடியும்?

அன்னையின் பதியில் நிகழ்ந்த கொடூரத்தில் மனம் நிசப்தமாயிருந்தது. சிந்தப்பட்ட உதிரத்தில் ஒருகணம் உறைந்து போயிருந்தேன். கருவறையில் இருந்து வெளிவரும் சிசுவின் அழுகுரலைவிட, கல்லறைக்குள் போகும் உயிரின் இறுதி மூச்சு மனதைப் பிளந்துநின்றது. காலத்தினால் அழியாத கோலம் என்பதை இரத்தக்கறை படிந்த அந்தச் சுவர் சுட்டி நின்றது. மனிதனும் மனிதமும் படைத்தவன் முன் பரிவாய்த் துடித்தன. ஒரு பானைக்கு ஒரு சோறு பதம். இத்தனைக்கும் இது ஓர் உதாரணம். வார்த்தையால் வர்ணிக்க முடியாத எத்தனையோ வன்செயல்களிற்கு வக்கீலாக மாறியுள்ளது.

கேள்விகள் கணையாய் மனதில் பாய்ந்தன. இன்றைய நிலை வெள்ளிடை மலையாய் தெரிந்தது. இது எமக்கு விடுக்கும் செய்தி என்ன? இத்தகைய அவலங்களில் அமிழ்ந்து அழிந்துவிடாது இதற்கு மேலாக இது விடுக்கும் செய்தியைக் கண்டு – வாழ்வுண்டென்று விசுவசிக்க வேண்டும். எவ்வாறு பதிலிறுக்க வேண்டும்? விடைகாண வேதாகமத்தை மனம் இரைமீட்டது. பலி செலுத்திக்கொண்டிருந்த கலிலேயரைப் பிலாத்து கொன்றான். அவர்கள் அனைவரும் மற்றவர்களைவிட பாவிகள் என்பதா? இல்லை. மாறாக மனம் மாறாவிடில் நீங்களும் அவ்வாறே அழிவீர்கள் என்பது மனதில் ஆணித்தரமாய்ப் பதிந்தது (லூக். 13).

மனமாற்றம் வாழ்வில் அவசியம். எழுதுவது இலகுவானது, வாழ்வது கடினமானது என்பது உண்மை, ஆனால் முடியாது என்பது பொய்மை. வாழ்வை இறைவார்த்தை என்னும் மண்ணில் விதைப்போம். கிறிஸ்தவ விழுமியங்களாகிய அன்பு, நீதி, சமாதானம் என்னும் பசளைகளை அதற்கிடுவோம். அவை எமது வாழ்வை நற்கனி தரும் மரங்கள் போலாக்கும்.

யூபிலி ஆண்டிற்கும் இதற்கும் உள்ள தொடர்பு? இத்தகைய மனமாற்றத்துடன் புதிய நூற்றாண்டில் நுழைவோம். உள்ளத்தில் உறைந்திருப்பவைக்கு உருக்கொடுப்போம். மேய்ப்புப் பணி மாநாட்டின் முடிவுகள் புத்தகத்தில் உறங்குகின்றன. அவற்றைத் தட்டியெழுப்புவோம். மேற்கூறியவாறு பொதுநலனிற்கு எம்மை அர்ப்பணிப்போம். சுயநலம் என்னும் அடிமைத்தளையிலிருந்து எம்மை விடுவித்து, சிதைந்துபோன மனிதத்தை, மிதிக்கப்படும் உரிமைகளை மீட்டெடுப்போம். நீதிக்கும் நியாயத்திற்கும் குரல் கொடுப்போம். அநீதிகளிற்கு வாழ்வால் சாவு மணியடிப்போம்.

இத்தகைய மனமாற்ற வாழ்வினூடாக யூபிலி ஆண்டு மன்னிப்பினதும் விடுதலையினதும் புதிய ஆண்டாக எம்மத்தியில் உதயமாகட்டும்.



தி. வசந்தசீலன்

## அவனிக்கு அமைதி கொணர்ந்த வேந்தன்

~கு. யகத் பிறேமநாத் அ.ம.தி.

'உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!
உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!'

கடவுள் உலகிற்கு கொடுத்த அருட்செல்வம் இந்த அமைதி. யேசு தனது பிறந்தநாள் பரிசாக உலகிற்கு அளித்த மாபெரும் கொடைதான் இந்தச் சமாதானம்.

'நான் என் சமாதானத்தை உங்களுக்கு விட்டுச்செல்கின்றேன். நான் தரும் சமாதானம் உலகம் தரும் சமாதானம் போல் அல்ல' என்ற யேசுவின் வார்த்தைகள் எவ்வளவு ஆழமானவை. கிறிஸ்து பிறப்பு என்பதன் பொருளும் இதுவேதான். இந்த அமைதி, புற அமைதியாகவோ அன்றேல் அகஅமைதியாகவோ இருக்கலாம். புறஅமைதியை அடக்குமுறையால் துப்பாக்கி முனையால் கொண்டுவரலாம். அது குமுறும் நெஞ்சங்களை மேலும் கொந்தளிக்கவே செய்யும். காலப்போக்கில் அது மயான அமைதியாகவும் மாறலாம். ஆனால் உலகம் தரமுடியாத இந்த உள்ள அமைதி ஆவிக்குரியது. இத்தகைய அமைதியை ஆண்டவனிடமிருந்து மட்டுமே பெறலாம்.

யேசு பிறக்கும்போது ஜெருசலேம் நகர் அமைதியற்றிருந்தது. இந்த அமைதியற்ற சூழ்நிலையில் யேசுவின் பிறப்பு அவர்களுக்கு கொண்டுவந்த இனிப்பான செய்தி சமாதானமே. தனது 33 வருட மனித வாழ்வில் சென்ற இடமெல்லாம் நன்மையே செய்துவாழ்ந்த யேசு, தான் சமாதமானத்தின் பிரபு, அமைதியின் மன்னர் என்பதை எண்பிக்கிறார். சமாதானத்தின் சின்னமாகிய இந்தத் திருக்குழந்தையை அப்பாவி மக்கள், இடையர்கள் வரவேற்றார்கள். இறைவனை நம்பும் அடியார்கள், ஞானிகள் வரவேற்றார்கள். ஆனால் அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தினர் அவரை வரவேற்கவில்லை. யேசு பிறந்ததைக் கேள்விப்பட்டதும் ஏரோதன் கலங்கினான். ஜெருசலேம் முழுவதும் கலங்கியது. ஏன்? அமைதியின் மன்னன் . . . சமாதானத்தின் பிரபு . . . பிறந்திருக்க அங்கலாய்க்கும் நிலை ஏன்? ஏன் இந்த அவல நிலை? சுயநலம் . . . ஆணவம் . . . அகந்தை . . . முதலான அழுக்குகள் அந்த ஏரோதையும் ஜெருசலேமையும் ஆட்டிப்படைத்தன. ஆம் அதே மனித அழுக்குகளை இன்றும் எமது மனித வரலாற்றிலே காணக்கூடியதாக இருக்கிறது.

உலகம் தரும் செல்வங்கள் ஏராளம். இருந்தும் உள்ளங்களில் அமைதி இல்லை. இது ஒரு கசப்பான உண்மை. இன்றைய மனித வரலாற்றில் உண்மைச் சமாதானத்தை உள்ள அமைதியைத் தேடும் படலம் தொடர்கின்றது. அன்றுபோல் இன்றும் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது. சிறப்பாக நாம் புகும் இந்தப் புதிய நூற்றாண்டில் உலகம் முழுவதும், இந்த உண்மை அமைதியைத் தேடி நிற்பாரின் தொகை எண்ணிலடங்காது. அவர்களின் அவலக் குரல், உள்ளக்குமுறல் உலகளாவியதொன்றாக ஒலிக்கிறது. போர் வேண்டாம், சமாதானம் வேண்டும். அழிவுகள் வேண்டாம், அமைதியை உருவாக்குங்கள். என்ற நோக்கிலே மக்கள் இன்று வாழ்கின்றனர்.

மொத்தத்தில் மனித குலத்துக்கு அத்தியாவசியத் தேவையானது சமாதான வாழ்வு. ஆனால் எமது வரலாற்றின் இக்காலகட்டத்தில் அது எம் கைகளுக்கு எட்டாக் கனியாகத்தான் இருக்கிறது. என்றாலும் நாம் நம்பிக்கையின் மக்கள். தடம்புரண்டு தலைபோகும் தறுவாயிலும் பொறுமையோடு காத்திருக்கும் ஒரு இனமாக இன்றைய எமது சூழ்நிலை எம்மை மாற்றியமைத்துவிட்டது. இந்தக் குழம்பிய மனநிலையில்தான் ஏக்கத்தோடு, கலக்கத்தோடு, அங்கலாய்ப்போடு ஒரு புதிய விடிவுக்காகக் காத்திருக்கும் இந்நிலையில்தான் அமைதியின் பிரபு யேசு கொண்டுவந்த சமாதானம் கருவாகி உருவாகி எம்மிடையே பிறக்கவேண்டும். எம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பிறக்கவேண்டும். எம் இல்லங்களில், எம் சமுதாயத்தில், எம்மை ஆள்பவர்கள் மத்தியிலும் அது பிறக்கவேண்டும்.

அமைதியில் உலகம் மூழ்கட்டும், தலைவா அமைதியில் மூழ்கி உம் ஆற்றலை உணரட்டும்.
மனித இதயங்களிலும் போர்க்களங்களிலும் இனி போர் முழக்கம் ஓயட்டும்.
இயந்திரத்துப்பாக்கிகளின் ஓசை வேண்டாம். இனிய வேந்தனின் வார்த்தைகள் ஒலிக்கட்டும்.
எங்கள் இதயங்களிலும் அமைதியின் மன்னன் அரசாளட்டும்.
அவ்வாறே [illegible] எங்கும், எப்போதும், எல்லோரும் அமைதியில் இன்புறுக.

## எங்களின் கிறிஸ்து பிறப்புவிழா

சகோ. எவ். றஞ்சித் நீல்வோல்ட்

கிறிஸ்து பிறப்பு விழா ஏறத்தாழ 330ஆம் ஆண்டு நிறுவப்பட்டது என நாம் அறிகின்றோம். உலக வரலாற்றை நாம் புரட்டுகின்றபோது எந்த ஒரு மனிதனின் பிறப்பைப் பற்றியோ அவனது வாழ்வைப் பற்றியோ யாரும் முன்னுரைத்தது பற்றி வரலாறு கூறவில்லை. ஆனால் நம் குழந்தை யேசுவைப் பற்றி அவர் எங்கே, எப்போது, எந்தக் கோத்திரத்தில் யாரிடம் பிறப்பார் என அவரின் பிறப்புக்கு முன்பே முன்னறிவிக்கப்பட்டது. தாவீதின் மரபிலிருந்தும் தாவீது குடியிருந்த பெத்லெகேம் ஊரிலிருந்தும் மீட்பர் இயேசு வருவாரென்ற வேதாகம கூற்று அவ்வாறே நிறைவேறியது வரலாறு கண்ட உண்மை. இயேசுவின் பிறப்பில் அறிவிக்கப்பட்டது போல அவர் உண்மையாகவே ஒரு மீட்பர். அவர் ஆன்மீகத்தை தன்னுள்ளடக்கிய வரலாற்று மீட்பர். அவரின் மீட்பு வரலாற்றை கடந்து வரலாற்றையும் தன்னுள் உள்ளடக்கியது.

புதிய மிலேனியத்தில் புது வேகத்துடன் புகுவதற்காக புதுப்புது பதுப்பித்தல்களை மேற்கொண்டு வருகின்ற எம் சமூகத்திற்கு இம்முறை கிறிஸ்மஸ் விழா ஒரு அழுகுரலாகவே புலர்கின்றது. தொடர்கின்ற நம்பூமியின் போரினாலும் தொடர் புலப்பெயர்வினாலும் நம் மக்களின் மனங்களில் ஒலமிடும் அழுகுரல்கள் ஒயாமல் எந்நாளும் இரட்டிப்பாகின்றன. வீழ்ந்த மக்கள் தள்ளாடி எழும்புமுன் மீண்டும் அவர்கள் வீழ்த்தப்படுகின்றனர். நடக்கின்ற பாதைகளில் எல்லாம் நம்மக்கள் நடைப்பிணங்களாகவே மாறுகின்றனர். அநியாய அழிப்புகளும் அடக்குமுறைகளும் அதிகாரத் திமிரும் இவைகளால் ஏற்பட்ட அழுகுரல்களும் மலிந்த இந்தச் சமூகத்தில் நாளை என்ன நடக்குமோ என்ற அச்சத்துடனும் இரவின் பயங்கரங்கள் மத்தியிலும் வறுமையடைந்து, வாழ்விழந்து, வலிமையிழந்து, வாழ்க்கையில் நம்பிக்கையற்று வாழ்கின்ற நம் 'மக்களின் ஒடுக்குமுறை வாழ்வனுபவங்களுக்குள் கிறிஸ்து பிறப்பு நம்பிக்கைதரும் பிரசன்னமாகப் பிறக்கட்டும். கிறிஸ்துவின் பிறப்பினூடாக உதயமாகின்ற ஒளியின் ஆட்சி நம் சமூகத்தில் பிரகாசிக்கட்டும். வானமே கூரையாக தரையே பஞ்சணையாகப் படுத்துறங்கும் நம் மக்களின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் இயேசு பிறப்பின் ஒளி ஒரு புதிய வெளிச்சத்தைக் கொடுத்து அவர்கள் வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்டி வழிகாட்டி விடுதலையளித்து வெற்றியீட்டும் ஒரு விழாவாக அமையட்டும். நாம் ஒவ்வொருவரும் முழுமனித விடுதலைக்காகவும் சுதந்திரமான சமுதாய வாழ்வுக்காகவும் உழைக்கும் கருவிகளாக மாறுவோம். வாருங்கள் பாலகன் இயேசுவுக்கு, மீட்பளிக்கும் அந்த ஒளிக்கு அக்களிப்புடன் புகழ்பாடுவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்னுமொரு கறைபடிந்த அத்தியாயம் திறக்கப்பட்டுள்ளது

மக்கள் அனைவரும் மாபெரும் சேனையாய்
மகிழ்ந்து கூடும் பதி அது.
அடைக்கலம் என்று அண்டி வந்தோர்க்கு
அபயம் தரும் பொற்பதி அது.
அவ்வாறு இருந்த புனித பூமிக்கா
அன்று நேர்ந்தது இக்கதி.
துக்கம் மறந்த தூக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்தவர்கள்
தங்கள் துர் அதிஸ்ட காலத்தை நினைத்திருப்பார்களோ
அன்னையின் பாதமே அவனியில் எம்துணை என்று
அண்டி வந்த முதியோர், அன்னையர், தந்தையர்,
அவர் பெற்றெடுத்த புதல்வர்கள்,
அன்னையர் மடியில் தூங்கிய பாலகர்கள்
இவர்கள் அனைவரும் அப்பாவிகள் என்றறிந்தும்
அவர்கள் நடுவே எவினர் குண்டை.
அடுத்த நாளைய கனவுடன் அங்கே துயின்றோர் பலர்
அடுத்த நிமிடத்தையே உணரமுடியாத பரிதாபம்.
அன்னையர் மடியிலே பசிதீர்த்த பாலகர்
அரைகுறை வயிற்றுடன் தாய்மடியில் அமரரான அவலநிலை.
முதியோரும் இளையோரும் முகவரி இல்லாமல்
முடிந்துபோன துயரநிலை.
இரக்கத்தின் அன்னையின் புனிததலம்
இரத்தக்களரி ஆக்கப்பட்ட கொடுமை.
இதனால் அங்கே
தன் பெற்றோர் உடன்பிறந்தோர் அனைவரையும் இழந்து
தவித்துக் கதறுகின்றான் ஓர் தனயன்.
தன் பிள்ளைகள் நால்வரையும் பறிகொடுத்து
தாங்கொணா கவலையில் கதறியழுகின்றாள் ஓர் தாய்.
தனக்கு உணவு தராமல் இருக்கின்றாள் என நினைத்து
தன் மரணித்த தாயினை தட்டியெழுப்புகின்றது ஓர் குழந்தை.
தன் தாயின் பிரிவினை ஜீரணிக்கமுடியாது
தலையினை உடைக்கின்றான் அவள் பாச மைந்தன்.
தந்தையே உன்னை இந்நிலையில் காணவா
தாயின் பதிக்கு ஓடிவந்தோம் என
தவிப்புடன் தந்தையை நோக்கியழுகின்றனர்
தரணியில் அவன்பெற்ற பிள்ளைகள்.
தனக்கென இருந்தோர் அனைவரும் இறந்து
அனாதையாய் கூக்குரலிடுகின்றது ஓர் மழலை.
தணியாத தாகத்துடன் அக்குவியலிடையே
தன் பெற்றோரைத் தேடியலைகின்றது ஓர் பிஞ்சு.
தமது உடல் அவயவங்கள் சிதறி
தண்ணீரைப் போல செந்நீர் வழிந்தோட
வேதனை தாளாது அப்பாவி ஜீவன்கள்
அன்னையின் பதியில் தஞ்சம் புகுந்தோர்
அன்னை மடியில் இளைப்பாற்றி அடைந்தனர்.

ச. சஞ்சீவ்குமார்,
அருள் ஆச்சிரமம்

# மனுவுடலேற்கை – ஒரு விளக்கம்



சகோ. சில்வெஸ்ரர் அ.ம.தி.

## 'வார்த்தை மனுவுருவானார்'

தினமும் மூவேளை சொல்லப்படும் செபத்தின் உண்மை அர்த்தம் என்ன? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்துமுடிந்துவிட்ட செயலா மனுவுரு? இறைவன் ஒரு காலத்திற்கு உட்பட்டவர் அல்லர். அன்றும், இன்றும், என்றென்றும் வாழ்பவர் என்றால் இன்று மனுவுரு உண்டா? 'மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார்'.

விண்ணை ஆளும் வேந்தன் இம்மண்ணுக்கு மனிதனாக வந்த நாள், பாவத்தில் சிக்குண்ட மனிதனை மீட்டு அவனுக்குப் புதுவாழ்வு வழங்க குழந்தை இயேசு இவ்வுலகில் பிறந்த நாள், கடவுள் மனிதனைத் தேடிவந்த திருநாள் தான் கிறிஸ்மஸ் பெருவிழா. எனவே பாலகன் இயேசுவின் வருகையால் இப்பூவுலகம் களிகூருகின்றது. நாம் ஒவ்வொருவரும் ஆனந்தப் புகழ்பாடி, பண்பாடி அகமகிழ்கின்றோம். ஏனென்றால் நமக்காக மீட்பர் பிறந்துள்ளார்.

'மனுவுருவெடுப்பு' என்பதில் உரு என்கின்ற சொல் இங்கு ஆராயப்படக்கூடியது. மனுவுரு என்பதற்கு மனிதரூபம்(human form) எனப் பொருள் கூறப்படுகின்றது. உருவெடுத்தல் என்பது தோற்றத்தில் மனித உருவுக்கு (வடிவத்திற்கு) ஒத்திருத்தல் என்கிற பொருளோடு நின்றுவிடக்கூடும். எனவே 'உரு' என்பதைவிட 'உடலெடுத்தல்', 'உடம்பெடுத்தல்' என்பவை சிறப்பான பொருட்செறிவு கொண்டவை எனலாம். 'உடம்பெடுத்தல்' என்றால் 'பிறத்தல்' என்பது பொருள். எனவே Incarnation என்னும் சொல்லின் உண்மையைப் பொருத்தமாகக் குறித்துணர்த்தும் சொல்லாக மனுவுடலேற்கை என்னும் சொல்லை ஆளலாம் எனத் தோன்றுகின்றது.

இறைமகன் யேசுவின் மனுவுடலேற்கையிலே விண்ணவர் 'உன்னதத்திலே மகிமை இம் மண்ணகத்தில் அமைதி' என்று மங்கள கீதம் இசைத்து முதன் முதலில் இடையர்களுக்கு அவரது பிறப்பை அறிவித்தனர். இறைவனது மீட்புச் செயலின் பயன் அமைதியாகும். எமக்கும் கடவுளுக்கும் ஏற்பட்ட பிளவை சரிப்படுத்தி நம்மை இறைவனுடன் இணைக்கவும் நமக்குள் சமாதானத்துடன் வாழவும் வழி வகுக்கவே தெய்வம் மீட்பின் கடவுளானார்.

மீட்பு என்றால் என்ன? பொதுவாக மீட்பு என்ற சொல்லை எதற்காகப் பயன்படுத்துகின்றோம். என்று தெரிந்துகொள்வோமென்றால் மீட்பு என்ற சொல்லின் பொருளை அறிந்து கொள்ளலாம். நடுக்கடலில் புயலில் சிக்கிய கப்பலும் அதிலிருந்த மாலுமிகளும் மீட்கப்பட்டார்கள். தீயின் நடுவே சிக்கி உயிருக்குப் போராடிய குடும்பம் மீட்கப்பட்டது. கடலில் வீழ்ந்து தத்தளித்துக் கொண்டிருந்த மனிதன் மீட்கப்பட்டான் என்று செய்தித் தாள்களில் படிக்கின்றோம். நம்மால் எதுவும் செய்ய முடியாமல் வாழ்வே போய்விட்டது என்று வருந்தியவேளையில் வெளியில் இருந்து ஒருவர் வந்து நமக்கு உதவிசெய்து நமக்கு புதுவாழ்வு தரும் செயலைத்தான் மீட்பு என்று சொல்கின்றோம்.

இதேபோல் நாம் பாவம் என்ற படுகுழியில் விழுந்து வாழ்வை இழந்து, வாடிநின்ற வேளையில் மீட்பர் இயேசு மனித உடல் ஏற்று நம்மைத் தேடிவந்து தன் நேசக்கரத்தால் நம்மை மீட்டு நமக்குப் புதுவாழ்வு, விடுதலை வாழ்வு வழங்கிய புனிதமான நாள்தான் கிறிஸ்மஸ் திருவிழா.



# உண்மையான கிறிஸ்மஸ் எது?

கிறிஸ்மஸ் என்பது பட்டாடை உடுத்தி பலகாரம் செய்து பல வர்ண ஆபரணங்களை அணிந்து பகட்டாக எம்மை மாற்றுவதில் அடங்கியிருக்கவில்லை. இவை சாதாரண வெளி அடையாளங்களே. மாறாக, மக்களின் மனதில் இறைவனின் செய்தியை எளிமையான முறையில் அறிவிப்பதே உண்மையான கிறிஸ்மஸ்.

கிறிஸ்து பிறக்கும்போது எமக்கு காண்பித்த வெளிப்பாடு தாழ்மை, எளிமை, பொறுமை என்பவைகளாகும். அவர் எளிமையில் பிறந்தபோதும் தாழ்மையில் வளர்ந்தபோதும் பொறுமையைக் கடைப்பிடித்த போதும் அதனை நாமும் பின்பற்றவேண்டுமென விரும்பினார். எளிமை, பொறுமை, தாழ்மை என்பனவற்றை நாம் கொண்டிருக்கும் போதுதான் நாம் மற்றவர்களுக்கு கொடுக்கமுடியும்.

உணவின்றி, உடையின்றி, உட்கார இடமின்றி வீதியிலே பவனிவரும் நடைப்பிணமான மனிதனுக்கு உதவவேண்டும். அவனின் உணர்வை மதிக்க வேண்டும். உறவை வளர்க்க வேண்டும். உலகில் நாம் தேடுவதும் தேர்ந்தெடுப்பதும் அன்பாகட்டும். ஏனெனில் நல்லோர்க்கு நாளெல்லாம் கிறிஸ்மஸ் என்ற பொன்மொழியை நாமெல்லாம் ஓத வேண்டும்.

எனவே நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் நிறை அர்த்தமுள்ளதாக இருக்க மனிதநேயத்தை நாம் மதிக்கவேண்டும். ஏழைகளின் சிரிப்பில் நாம் இறைவனைக் காணவேண்டும். சமத்துவம் எம்மில் பேணப்படவேண்டும். சாதி, சமய, இனவெறி தகர்க்கப்படவேண்டும். வன்மம், வைராக்கியம், அகந்தை, அநீதியை அடியோடு அகற்றவேண்டும். சமூகம் சுமூகமாக வளர முழுப் பங்களிப்பை கொடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் கொண்டாடுவது 'பண்டிகை கிறிஸ்மஸ்' ஆக இல்லாமல் உண்மையான கிறிஸ்மஸ் ஆக இருக்கும்.

அருட்சகோ. நிர்மல்ராஜ் செ. சூ. (அருள் ஆச்சிரமம்)

# கிறிஸ்மஸ் விழா ஓர் ஆன்மீக விழா

எமது மண்ணில் முடிவற்றுத் தொடரும் அரசியற் குழப்பங்கள் மத்தியில் 2000 ஆம் ஆண்டில் காலடிபதிக்கின்றோம். இந்நிலையில் தொடரும் கிறிஸ்மஸ் விழா எமக்கெல்லாம் மாபெரும் மகிழ்வின் விழாவாகின்றது. இது சரித்திரத்தின் நினைவு நிகழ்வாக இருப்பினும் இது உலக விழாவாக இன்று கொண்டாடப்படுகிறது. இது பாலன் இயேசுவின் பிறப்புநாள் மட்டுமல்ல மீட்பு விழாவாகவும், புது மனித குலத்தின் பிறந்த நாளாகவும் உள்ளது.

கிறிஸ்மஸ் விழாவானது இறைவனின் அருகாமைத் தன்மையை எமக்குணர்த்துவதாக அமைந்துள்ளது. இந்நிகழ்வு இறைவன் எத்தகையவர் என எமக்கு உணர்த்தும் அதே வேளை மனிதன் எத்தகையவன் என்பதையும் எமக்கு உணர்த்தி நிற்கின்றது. இறைவன் போல் மனிதனை மதித்தவர் எமருமில்லை. இதனால்தான் வார்த்தை மனுவருவானவர் நம்மிடையே குடிகொண்டார் என கூறுகின்றோம்.

அன்று இயேசு பிறந்த போது எவரும் அவரை அறிந்திருக்கவில்லை. ஆனால் இன்று அந்நிகழ்வு மாபெரும் நிகழ்வாக உலக மக்களால் கொண்டாடப்படுகின்றது. பிறந்து இறந்த இறைவனின் நிகழ்வென்று நாம் எமது சிந்தனைகளுக்குள் இந்நிகழ்வைச் சுருக்கிவிடமுடியாது. பிறந்து மரித்து உயிர்த்து எம்முடன் எமது வாழ்வியல் அனுபவங்களினூடே வாழ்ந்துவரும் இறைவனின் விழா இதுவொரு ஆன்மீக விழா. எமதுள்ளத்தின் ஆழத்தில் உணரப்படவேண்டிய உன்னத விழாவாகக் காணப்படுகின்றது. அன்று இயேசு இடமின்றி மாட்டுத்தொழுவத்தில் பிறந்தாரென எண்ணும்போது எமதுள்ளம் உருகுகின்றது. நான் அப்போது அங்கிருந்திருந்தால் உதவியிருப்பேன் என எமது மனம் ஆதங்கப்படுகின்றது. ஆனால் இன்று ஏழையின் குடிசையிலும் நோயுற்றோர், புறக்கணிக்கப்பட்டோர், அங்கவீனமுற்றோர், அநாதைகளில் இயேசு இருக்கின்றார் என உணர்ந்த பின்பும் அவரைப் பார்க்க மறுக்கின்றோம். நாம் அயலவனைப் பார்க்காது ஆலயத்தில் கட்டப்பட்ட குடிசைகளில் இயேசுவைத் தேடுகின்றோம். இந்நிலையில் உண்மையான கிறிஸ்மஸ எமக்கு அர்த்தமற்றதாகின்றது. நாம் அமைக்கும் பிரமாண்டமான குடிசைகளும், வழிபாடுகளும் இயேசு பிறந்துள்ள ஏழைக்குடிசையை மறைத்துவிடுகின்றது.

நல்ல மனத்தோரின் உள்ளங்களில் இயேசு பிறப்பு உண்மையான ஆன்மீக விழாவாகிறது. எனவே எம்மனங்களை பண்படுத்தி இயேசு பிறக்க எம்மை ஆயத்தம் செய்வோம். உள்ளத்தின் ஆழத்தில் பிறக்கின்றபோதுதான் கிறிஸ்மஸின் உன்னதத்தை உணரமுடியும்.

பேரா. மாலினி
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீக வாழ்வில் பிறப்பதே பிறப்பு

வருடந்தோறும் நாம் கிறிஸ்து பிறப்பு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றோம். வீட்டை அலங்கரிக்கின்றோம். பாலன் குடில் அமைக்கின்றோம். நள்ளிரவுத் திருப்பலியில் நேரகாலத்துடன் சென்று இடம்பிடித்து பங்குகொள்கிறோம். திருப்பலி முடிந்தவுடன் ஆலயத்திலுள்ள திருப்பாலன் குடிலில் வைக்கப்பட்டுள்ள பாலனைத் தரிசித்து முத்தம் செய்கின்றோம். காணிக்கை செலுத்தி எமது வழிபாட்டை நிறைவுசெய்கின்றோம். எமக்கு அறிமுகமானவர்களுக்கு கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்தை பகிர்ந்து கொள்கின்றோம். அன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றோம். இதில் ஓரளவு மனநிறைவு அடைகின்றோம். வெளி ஆடம்பரங்களும் சடங்குகளும் தேவைதான். ஆனால் இவை மட்டும் எமது ஆன்மீக வாழ்வுக்கு நிறைவைக் கொடுக்காது. எமது ஆன்மீக வாழ்வு நிறைவுபெறவேண்டுமானால் கிறிஸ்துவின் மனநிலையை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

இயேசு தனது விருப்பத்தை நிறைவேற்றுவதிலும் பார்க்க தமது தந்தையின் விருப்பத்தையே இறுதிவரை நிறைவேற்றினார். இறுதியில் தந்தையால் மகிமைப்படுத்தப்பட்டார்.

இவ்வுலகில் தமது பணியைத் தொடர எம் ஒவ்வொருவரையும் திருமுழுக்கின் வழியாக இறைவன் அழைத்துள்ளார். அவரது அழைப்பை ஏற்றுக்கொண்ட நாம் எவ்வாறு வாழ்கின்றோமென எம்மையே கேட்டுக்கொள்வோம். கிறிஸ்து கொண்டுள்ள மனநிலை எம்மிடம் பிரதிபலிக்கின்றதா? "வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்து வாழ்கின்றார்" என்னும் புனித சின்னப்பரின் கூற்றுக்கமைய எமது வாழ்வை முன்னெடுத்துச் செல்கின்றோமா? என, நாம் அனைவரும் சற்றுச் சிந்தித்துப் பார்த்து அதற்கேற்ப எமது வாழ்வைச் சீர்ப்படுத்துவோம். சமுதாயத்தில் எமது சக சகோதரர்களுடன் புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம், பகிர்ந்து வாழல், மன்னித்தல், பணி செய்தல், பரிவு காட்டுதல், பொறுமை, ஏழ்மை ஆகிய நற்பண்புகளை எம்மில் உருவாக்கி வாழ முன்வருவோம்.


இந்த நூற்றாண்டில் நாம் கொண்டாடும் கிறிஸ்து பிறப்பு விழா எமக்கு அர்த்தமுள்ள ஒரு விழாவாக இருக்கவேண்டும். இவ்விழா எமக்குத் தரும் நற்செய்தியை வாசித்து, சிந்தனை செய்து, எமது நாளாந்த வாழ்வில் அதைப் பிரதிபலிக்கச் செய்யவேண்டும்.

போதனையை விட சாதனையை மக்கள் எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என்ற மனநிலைக்கேற்றவாறு அனைத்து மக்களுடனும் கிறிஸ்துவின் அன்பைப் பகிர்ந்து வாழ எமது வாழ்வை மாற்றியமைப்போம்.

*அருட்சகோ. ச. அருளப்பா*
(புனித வளனார் துறவற சபை)

## மனித மது மலர . . . !

எம்மிடை பிறப்பெடுத்தும்
எத்தனையோ நூற்றாண்டுகளாயின.
ஆயினும் மன்னவன் தேடிய
அமைதியிங்கே நிறைந்ததா?
அடக்கப்பட்டோர் குரலது
ஆனந்தக் குரலானதா?
ஆமென்றுரைக்க
ஆருமிங்கில்லையன்றோ!
ஏனெனில் ஏழைக் குரலினை
ஏறெடுத்துப் பார்ப்பதற்கு
எவருக்கும் மனதில்லையே!
ஒடுக்கப்புடோர்க்கிரங்கிட
ஒருவருக்கும் விருப்புமில்லையே!
அயலாரில் அன்புமின்றி
அழுக்காறு மிகக் கொண்டு
அடுத்தாரை நசுக்கவே
ஆவலாயுள்ளோம்
இப்படி நாமெனில்
எப்படித்தான் மாதவனின்
மனிதமது மண்ணில் மலரும்



பாசகன்
கோப்பாய் மத்தி

### சோகமெல்லாம் . . .

P. மரிய பெனிற்றா
(இளவாலை வாசகர் வட்டம்)

**கனிவு மழையும் புனியும் சொரியும்**
**கடிய மார்கழி - மனித உலகைப்**
**புனிதம் செய்ய மரியின் வயிற்றிலே**
**இனிய யேசு பாலன் வந்துதித்தான்.**

**வாடிய முகமெல்லாம் வரவேற்றது**
**வாழ்த்துச் சொல்லி - யுத்த**
**கரங்களிலிருந்து யுகத்தைக் காத்து நீர் தருக**
**சோகமெல்லாம் சுகங்களாகட்டும்.**

# உலக நாடுகளில் கிறிஸ்மஸ் எப்படிக் கொண்டாடப்படுகிறது தெரியுமா?

### அமெரிக்கா

நத்தார் தினத்தன்று சிறுவர்க்ள தம் நீண்ட காலுறைகளை நத்தார் மரத்தில் தொங்கவிடுவார். அவற்றினுள்ளே பெற்றோரும் பெரியோர்களும் பரிசுப்பொருட்களை இடுவர். பரிசுகளைக் கண்டு சிறுவர் மகிழ்வர். நத்தாரன்று வீடுகளில் வான்கோழி சமைக்கப்படும். தீவுகளில் கிறிஸ்மஸ் காலம் மிகவும் உஷ்ணமாக இருக்கும். நத்தார் பலிப் பூசையை அடுத்து ஹவாய் தீவு மக்கள் தங்கள் மகிழ்ச்சியை விளையாட்டுக்களிலும் சுற்றுலாக்களிலும் செலவழிப்பர்.

### தென் அமெரிக்கா

தென் அமெரிக்கா நாடுகளில் நத்தார் காலத்தில் மிகுந்த வெப்பம் இருக்கும். நத்தாருக்காக கடைகளுக்கு வரும் மக்களுக்கு அவர்கள் குளிர் பானங்கள் வழங்குவர். ஸ்பானிய ஆட்சி நிலவிய நாடுகளில் நத்தார் ஜனவரி 6ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் "திருக்காட்சி" விழாவாகும். அன்று சிறுவர் ஒட்டகங்களுக்கு உணவு கொடுப்பர். மூன்று அரசர் பாலனை தரிசித்ததை இந்நிகழ்ச்சி பிரதிபலிக்கின்றது.

### மெக்சிக்கோ

இங்கு நத்தார் கொண்டாட்டம் டிசம்பர் 16 தொடக்கம் ஜனவரி 6 வரை நடைபெறும். நத்தாருக்கு இரு வாரங்களுக்கு முன்னர் மக்கள் கூடைகள் பின்னுவர். நத்தாருக்கு வேண்டிய பொருட்களை இவற்றினுள்ளே இடுவர். "பினற்றா" எனப்படும் வர்ண கடுதாசிகளால் அலங்கரிக்கப்பட்ட கப்பல், சப்பாத்து, பறவை, மீன் போன்ற வடிவங்களில் அமைந்து உள்ளே சிறுவருக்கான பரிசுப் பொருட்கள் கொண்ட பெட்டிகளை உடைக்கும் நிகழ்ச்சியும் இடம்பெறும். கண்கள் கட்டப்பட்ட சிறுவர்கள் "பினற்றா"(PINATA) பெட்டிகளையுடைத்து பரிசுப் பொருட்களைப் பெற்று மகிழ்வர்.

### இங்கிலாந்து

ஆங்கிலேயருக்கு நத்தாரைக் கொண்டாடுவதுடன் டிசெம்பர் 26இல் "பரிசுத்தினம்" (BOXING DAY) என்ற ஒன்று முக்கியமானதாகும். அன்றைய தினம் பரிசுப் பொருட்கள் அடங்கிய பெட்டிகளை வீடுகளில் மக்கள் வைத்திருப்பர். வருடம் முழுவதும் தமக்கு உதவிபுரிந்த பாற்காரன், தபாற்காரன் ஆகியோருக்கு இப் பரிசில்களை வழங்கி மகிழ்வர். நித்திரையில் இருக்கும் சிறுவரின் காலுறைக் குள் பரிசுகளைப் பெற்றோர் இடுவர். காலை யில் துயிலெழுந்த சிறுவர்கள் பரிசுகளைக் கண்டு உண்மையில் நத்தார் தாத்தாவே தமக்கு அவற்றை அளித்ததாக எண்ணுவர்.

### சுவீடன்


இங்கு நத்தார் டிசெம்பர் 14ம் திகதியே ஆரம்பமாகிவிடும். டிசெம்பர் 14 புனித லூசியா தினம். அன்று காலை ஒவ்வொரு வீட்டிலும் உள்ள வயது குறைந்த சிறுமி வெள்ளை உடையினால் புனித லூசியா போன்று அலங்கரிக்கப்படுவாள். கைகளில் மெழுகுதிரி மலர்ச் செண்டு தாங்கியவளாக வீட்டிலுள்ள அனை வருக்கும் காலை உணவு பரிமாறுவாள். அத்துடன் நத்தாரன்று LuT Fisk என்னும் சுவீடனில் பிடிக்கப்படும் சிறந்த ரக மீன் கறி சமைத்துண்பர்.

### பெத்லகேம்

இங்கு டிசெம்பர் 16ம் திகதி நத்தார் கொண்டாட்டம் ஆரம்பமாகிவிடும். அன்றிலிருந்து தொடர்ந்து ஒன்பது இரவுகள் ஒன்பது குடும்பங்கள் ஊர்வலமாக ஒவ்வொரு வீட்டிற்கும் செல்வர். ஊர்வலத்தின் முன்னே சிறுவனும், சிறுமியும், சூசை, மரியாள் போன்று உடை அணிந்து செல்வர். முதல் எட்டு இரவுகளிலும் அவர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவர். அங்கு அவர்க்ள இறைவனைப் புகழ்ந்து பாடுவர். இந்த ஊர்வலம் நசரேத்தில் இருந்து பெத்லேகம் வரை இடம் பெறும்.

### ஸ்கொட்லாந்து

நத்தார் "பனொக்ஸ்" (BANNOCKS) என்னும் கேக் தயாரிக்கப்படும். இது தயாரிக்கும்போது இக்கேக் உடைந்து விட்டால் அதை அபசகுனம் என ஸ்கொட்டிஷ் மக்கள் கருதுவர்.



### அயர்லாந்து

ஐரிஸ் மக்கள் பாலன் இயேசுவை வரவேற்க வீடுகளிலுள்ள எல்லா ஜன்னல்களிலும் எரியும் மெழுகுதிரிகளை வைப்பர். அயர்லாந்தில் நத்தாருக்காக நீண்ட விடுமுறை விடப்படும்.

### பின்லாந்து

பினலாந்து மக்கள் நத்தார் தினத்தன்று ஒற் (OAT) தானியத்தில் செய்த கஞ்சியை அருந்துவர்

### இத்தாலி

இத்தாலியில் நத்தாருக்கு முன்தினம் விரதம் அனுஷ்டிப்பர். நத்தார் நள்ளிரவில் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள தாயானவள் நத்தார் குடிலில் (BAMBINO) எனப்படும் துணிகளால் பொதியப்பட்ட பாலன் இயேசுவை வைப்பாள். அந்நேரம் வீட்டிலுள்ள எல்லோரும் செபம் செய்வர் திருக்காட்சி விழாவுக்கு முன்பான இரவில் நத்தார் தாத்தா LA BE FANA என்னும் வெண்ணுருவில் வருவார். அவரது ஒரு கையில் மணி ஒன்றிருக்கும். மணியோசை கேட்டதும் சிறுவருக்கு நத்தாரின் வருகை தெரிந்துவிடும். மறுகையில் தடி காணப்படும். சிறுவர் தீச்செயலில் ஈடுபடாதிருப்பதை தடி அவர்களுக்கு நினைவூட்டும். பின்னர் அவர் பொதியொன்றில் அவர்களுக்கு பரிசாக என்ன கொண்டு வருவார்?

வெறும் சாம்பல் தான்

### அலஸ்காவில்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வட பகுதிதான் அலஸ்கா. பல பகுதிகளிலிருந்தும் அங்கு குடியேறிய அந்நாட்டு மக்கள் தத் தமது நாட்டு வழக்கப்படி கிறிஸ்மஸ் கொண்டாடுவர். கண்ணைக் கவரும் வண்ணக் காகிதத்தாலான ஒரு நட்சத்திரத்தை உயர்த்திக் கொண்டு விளக்குகளை ஏந்திய வண்ணம் சிறுவர் வீடு வீடாகச் செல்வர். இனிமையான பஜனை பாடுவர். அவர்களுக்கு நல் வரவேற்பு கிடைக்கும். இஃது ஒரு வாரம் வளர நீடிக்கும்.

இரண்டாவது இரவில் இருந்து வீரர்கள் போல் உடையணிந்து இளைஞர்கள் பின் தொடர்வர். ஏரோதன் குழந்தை இயேசுவை கொல்லத் தேடுவது போல் இளைஞர்களும் சிறுவர்கள் கொண்டுசெல்லும் நட்சத்திரத்தை கவர விழைவர்.

*தொகுப்பு - அ. அஜந்குமார்*
*அரியாலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிந்திடம்மா நல் விடிவு

படைத்தாளும் பரமனையீன்ற மருதமடுத்தாயே
அடைக்கலமே உன்பாதம் அபயம் நீ தாருமென — போர்
தடைகளைத் தாண்டி யருள் வேண்டி நின்றவேளை
படைக்கலத்தின் வன்முறையால் பாலகரின் பல்வேறு வயதோரின்
மடைதிறந்த குருதியது வன்னி மாதா உன் பாதத்திலே — பெரும்
வீடத்தலையை வீரலாலே வீரணமீட்ட விண்ணவளே
நடைப்பிணமாய் நாதியற்று நீதிகேட்டு நிற்கின்றோம் — நின்
கடைக்கண் கருணைபோதும் கனிந்திடம்மா நல்விடிவு

- எஸ். யேசுதாஸ்

# ஆண்டவர் வாக்கை நிறுவிய இயேசு

ஆண்டவன் இயேசு வந்தார்
அனைவரையும் தேடி வந்தார்
இதயத்தை திறந்தே அவரை
இன்பமாய் ஏற்றுக் கொள்வோம்

ஆண்டாண்டுகளாய் உரைத்த
ஆண்டவர் வாக்கை நிறுவ
உலகமதில் இயேசு வந்தார்
உயிர்களை மீட்க வந்தார்

விண்ணவர் பாடி நிற்க
வல்லவர் பாரில் பிறந்தாரே
வந்தவர் பாதம் சேர்வீர்
வரங்களைப் பெற்று மகிழ்வீர்

வி. பி. தனேந்திரா
அரியாலை

# சோகலயம் மடுப்பதியில்

யுத்தக் கருமேகம்
நித்தம் மழை பொழிய
சத்தமின்றியே வன்னிமக்கள்
சித்தங் கலங்கிச் சிதறி
சத்திரம் தேடி ஓடினர்

எவ்விடம் போவரோ செல் ... கதியாய் !
ஆலயம் அண்டினர் அ ! ... கதியாய் !
நித்திரை மறந்தனர் நிர்க் ... கதியாய் !
நிம்மதி இழந்தனர் சா ... கதியாய் !

ஆ...லயம் அதிர்ந்தது பேரொலியால்
அன்னைமரி பாதங்கள் சிவந்தன
சோக....லயம் நிறைத்தது மடுப்பதியை
சொல் லெண்ணா யாகம் நடந்தது

மழலைகள் பிறந்திட மாடடை குடில்?
மானிடம் மடிந்திட மாதாவின் குடில் ?
உடலங்கள் எரிந்தன உறவுகளின்றி
உறவுகள் தொடருமோ விடைபெறலால் ?

- அபிர்ராஜன் -






# மெசியாவுக்கு ஓர் கவிதை

மன்னாதி மன்னராம் மாபெரும் இயேசு
மாந்தரின் பவம் போக்க பாரிலே வந்துதித்த
மார்கழி மாதமிது மகிழ்ந்திட வாரீரே!

எட்டுத் திக்கிலும் போர் மேகங்கள்
கட்டுக்கடங்கா காளையர் கூட்டமும்
திட்டமில்லாத சீர்கெட்ட வாழ்வினை
சீராக்க வந்தாரே யேசு பெருமானே

அடக்கு முறைகளை அகற்றிட வந்தவர்
இடுக்கண் யாவையும் எளிதாய்த் தீர்ப்பவர்
கைவிட்ட பாவியை கரம் நீட்டி அழைப்பவர்
வாரீர் அவர் புகழ் பாடுவோம் நாமே

ஏழை எளியவர் வாழ்வு பெற்றிடவும்
பாவியர் என்றவர் புனிதராய் மாறிடவும்
கோழையர் நாமெல்லாம் விழித்திடவும்
அமைதியின் அண்ணலே விரைவாக வாருமே

ஆட்சியாளரின் சூழ்ச்சியைத் தகர்த்திட
வீழ்ச்சியுற்றோர் விழித்தே எழுந்திட
ஆவல் கொண்டே அவதரித்த இறைமகனை
போற்றிப் புகழ வாரீர் மாந்தரே

பட்ட கஷ்டங்கள் போதும் எம் பிரானே
விட்டே எழுவோம் வெந்தணல் தீயினின்று
தொட்டு விடப்பா எங்கள் உலகையே
இஷ்டமாகவே வாழ எல்லோரும்

மலர உள்ளதே யூபிலி ஆண்டுமல்லோ
மைந்தர் நமக்கெல்லாம் மகிழ்வான காலமெல்லோ
சிந்தையில் நாம் செய்த பாவங்கள் அனைத்தையும்
தந்தையிடம் செல்ல விரைந்து செல்வோமே

தவம் குருசுமுத்து
நவாலி

# பாலகனாய் பிறந்து வா

சமாதானம் தொலைந்துவிட்ட
எம்மீழ மண்ணதனில்
அமைதியினை அருளுகின்ற
பாலகனாய் பிறந்து வா

செங்குருதி ஓடுகின்ற
எம்மினிய பூமிதனில்
தண்ணொளியை வீசுகின்ற
பாலகனாய் பிறந்து வா

காலிழந்து கையிழந்து
நாதியற்று அலைகின்ற
எம்மக்கள் துயர்தனையே
தீர்த்திட நீ பிறந்து வா

மூடமாகி மக்களெல்லாம்
முடிவாகி போகுமுன்னே
தொடருகின்ற போர்தனையே
நிறுத்துதற்கு பிறந்து வா

நாடுதனை ஆளுகின்ற
ஆட்சியாளர் உள்ளமதில்
சமாதான வேட்கைதனை
தோற்றுவிக்கப் பிறந்து வா

மனிதனது மாண்புதனை
பக்குவமாய் மதிக்கின்ற
சமுதாயம் மலர்ந்திடவே
பாலகனாய் பிறந்து வா

திருமறையில் தொண்டாற்றும்
பணியாளர் எல்லோரும்
அன்பியமாய் உழைக்கின்ற
வளம் கொடுக்க பிறந்து வா

ஜூபிலி ஆண்டதனில்
முழக்கமிட்டு செய்திதனை
அறிவிக்கும் அருள்பொழிய
பாலகனாய் பிறந்து வா

இ. அ. அமலரட்ணம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி

# நாளெல்லாம் முழங்கட்டும் யூபிலியே !

காரேந்தும் மழைநீர் மண் நோக்க இடிமுழக்கம்
பாராளும் பதவி பெற ஏராளம் தேர்தல் முழக்கம் - பெரும்
போர்சூழும் எம் மண்ணில் தாராள சுடுகுழல் முழக்கம்
பேர்வாழும் பேராசையிலே தனி மனித புகழ் முழக்கம் - புவி
சீரோங்க சுதன் யேசு மரிமடிமீது வந்துதித்த
ஈராயிரம் யூபிலியின் பொருள்நிறை அருள் முழக்கம் - இன்று
நேராக உன்னுள்ளத்துள் சென்றுமேன் தயக்கம்

கொட்டுமுரசறைந்து கொடிகட்டுவதா யூபிலியின் அறிவிப்பு
கொட்டுமழை கொடும்பசியில் குடிலற்றலைவோர் - விழி
சொட்டும் கண்ணீரொடு உறவிழந்து அழுவோர்
பூட்டிய சிறைதனில் நீதியை உரிமையை தேடுவோர் - நல்
மேட்டிமை கொண்டெழு உன் குரலொலிக்கட்டும்
வேட்டொலி அகற்றிடு போற்றிடு மனிதத்தை - வழி
காட்டிய பாலகன் பகர்ந்த நல்விறையரசை
நாட்டிடு நாநிலத்தில் நாளெலாம் முழங்கிடும் யூபிலியே!

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி யூபிலி

# இப்போது மீண்டும் புதிதாய் . . .

அவன் வருகிறான் . . .
ஒவ்வொரு முறையும் புதிதாய்
புதிதிலும் பலதாய்
குருடனுக்குப் பார்வையாய்
அடிமைக்கு விடுதலையாய்
குழந்தைக்கு ஆதரவாய்
இன்னும் பலவாய்
அவன் வருகிறான்.

கொட்டிலுக்குள் வந்த அந்த
குட்டிச் சூரியனுக்கு முன்னால்
"உலகம்" எரிந்துபோனது
கட்டிக்காத்துவந்த பழமைகளை அவன்
வெட்டிச் சரித்தான்
குட்டிக்குனிந்த தலைகளை
தட்டி நிமிர்த்தினான்
கோவிலுக்குள் உரிமைகேட்டு
யாகம் நடத்தினான்
கபால மலையில்
இலட்சியத்திற்கு இலக்கணம் தந்தான்

இப்போது மீண்டும் புதிதாய்
அவன் வருகிறான்
இல்லை என்போர் இல்லாமல் போக
அடிமைத்தனம் அழிந்தொழிய
ஆயுதங்களின் அட்டகாசம் மண்டியிட
புதைந்துபோன மனிதங்களில் மூச்சூத
அவன் வருகிறான்

மக்கிப்போன சட்டங்களை
மகுடமாக்கும் மானிடமே
விண்ணின் மைந்தன்
மண்மீது வருகிறான்
வரவேற்க தயாராவோம்
இல்லையேல் . . .
தவிடுபொடியாவோம்

யே. ம. இளம்பரிதி
பாஷையூர்

# மீட்பின் ஆண்டை வரவேற்போம்

அன்புடன் அனைவரும் கூடி – நாம்
அன்பியம் என்னும் சிறுகுழுமத்தை – எம்
மத்தியில் உருவாக்கி வளப்படுத்தி – வாழுவோம்
ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வை – எம்
வாழ்வாகக் கொண்டு – அவனியிலே
தியானமும் செபப்பற்றும் விசுவாச – வாழ்வும்
நிலைபெற இறைவனிடம் – வேண்டுவோம்

மரியநாயகம் ஜெனிட்டா
சென் யூட் இளவாலை

புத்தாயிரமாம் ஆண்டை – எதிர்நோக்கி
பயணிக்கும் நாம் – அனைவரும்
திருவருட்சாதனங்கள் மூலம் – நாம்
ஊட்டம்பெற்று எமது நல்ல – ஆயன்
இயேசுவை பின்பற்றி – நான் என்ற
நிலையிலிருந்து நாமனைவரும் – நாமாக
மாறி புதுப்பிறப்புடன் மனமாற்றம் – பெற்று
மீட்பின் ஆண்டை – வரவேற்போம்

# இரண்டாயிரம் ஆண்டினிலே

இறைமகனார் அவதரித்த
இரண்டாயிரம் ஆண்டினிலே
இன்னும் ஓர் தடவை
எம்மிறைவன் பிறந்துள்ளார்

அருள்தரும் ஆண்டினை
அடியவர்க்கு அறிவிக்க
மீட்பராம் எம்தலைவர்
மீண்டும் பிறந்துவிட்டார்

அன்பைப் பரப்பிவைத்து
அகிலத்தை உயர்த்திவைக்க
குவலயத்தில் எம்மிறைவன்
குழந்தையாய் வந்துவிட்டார்

விடுதலை வேண்டிநிற்கும்
எம்மவர்க்கு விடுதலையை
விரைவாகத் தந்திடவே
விரைந்தோடி வந்துவிட்டார்

எனவே அவர் பாதம்
எந்நாளும் தொழுதிடுவோம்
பாரில் அவர் புகழை
பாங்காகப் பரப்பிடுவோம்

எஸ். எஸ். காந்தன்
கஸ்தூரியார் வீதி



# அருளாகி அவதரித்த ஆண்டவனே போற்றி போற்றி

நிறைவான ஒளியுள்ள நிம்மதியை எங்களுக்கு
குறைவின்றித் தரவாரும் குழந்தையேசு ! பாலகனே !

புதிதாகப் பூவுலகைப் புதுப்பிக்கும் பூங்கதிரே !
எதிர்கால ஏக்கத்தில் எமைமீட்க எழுந்தருளும்

உரிமைக் குரலோடு உதவிக்கரம் கொடுத்து
உயர்வுப் பணிபுரிய நல்லிதயம் நீர்தருவீர்

தப்பான போதனையும் தவறான செயற்பாடும்
ஒப்பற்ற நின்பிறப்பில் ஒழிந்தழிய வரமருளும்

"ஒருவர் ஒருவரது சுமைகளைத்தான் தாங்க"
திருப்பலம் தந்திடுவீர் திவ்வியனே! எங்களுக்கு

வானகத் தந்தையிடம் நாமெழுந்து செல்வதற்கு
ஞானவரம் தரவாரும் நம்யேசு ! நாயகனே !

உருள்கின்ற உலகினிலே உயிர்களை இயக்குதற்காய்
அருளாகி அவதரித்த ஆண்டவனே ! போற்றி போற்றி!

ஞா. அரியமலர்
பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000ம் யூபிலி ஆண்டில் நற்கருணை மையமான வாழ்வுக்கு அழைப்பு



எம்மண்ணில் கொடூர போரும் அதன் விளைவாக மனித படுகொலைகளும், அழிவுகளும், அனர்த்தங்களும் தொடர, திறந்த சிறைச்சாலைக்குள் மக்களின் வாழ்வு முடக்கப்பட்டு பகல்கள் இரவுகளாக்கப்பட்டு, தமது மானிட அடையாளங்களை புனித குழிக்குள் தேடுகின்ற வேளையில் இறைவனின் கொடையாக எமக்கு தரப்படும் அருள் தரும் ஆண்டு தான் இவ் யூபிலி 2000ம் ஆண்டு ஆகும். இவ் 2000ம் யூபிலி ஆண்டு எம்மை மூன்றாவது ஆயிரத்து ஆண்டிற்குள் அழைத்துச் செல்கின்ற வேளையில், இவ் அருள் தரும் ஆண்டை நற்கருணையின் ஆண்டாக திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் பிரகடணம் செய்துள்ளார். ஒவ்வொரு இறை மகனும் கிறிஸ்து இயேசுவின் வாழ்வின், மீட்பின் பிரசன்னத்தை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் "சர்வதேச நற்கருணை மாநாடு" ஒன்றையும் திருத்தந்தை அவர்கள் எதிர்வரும் யூன் மாதம் றோமை நகரிலே ஒழுங்கு செய்து உள்ளார்.

இந் நிலையில் "இயேசு கிறிஸ்துவே உலகின் ஒரே மீட்பர், புதிய வாழ்வின் உணவு" என முழக்கமிட அழைப்புப் பெறும் நாம் ஒவ்வொருவரும் நற்கருணை பற்றிய சில விழிப்புணர்வுகளை பெற்றுக்கெள்வது பயன்மிக்கது.

## நற்கருணை நன்றியின் உணவு

கிரேக்கமொழியிலே "யூக்கரிஸ்டியா" (Eucharistia) என்பது "நன்றியறிதலைக்" குறிக்கும். இச்சொல்லை ஆங்கில மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கும் போது, அது அதன் மூலப் பொருளை இழந்து நற்கருணை என்ற பொருளில் இன்று வழங்கப்படுகின்றது. நற்கருணை என்று நாம் கூறும்போது நல்ல (அதாவது மிகச் சிறந்த) கொடை என்பதே பொருள். இறைவன் தம் ஒரே மகனை எமக்கு உகந்தளித்தார். அவர் எமது மீட்பிற்காக தனது உடலையும் இரத்தத்தையும் நற்கருணையாக எமக்களிக்கின்றார். இறைவனுடைய இந்த மேலான நன்மையை பெறும் போது நம் உள்ளத்திலே நன்றி பெருக்கெடுக்கின்றது. எனவே இங்கு நற்கருணை எமது நன்றியறிதலாகவும், நன்றியின் உணவாகவும் மாறுகின்றது.

## நற்கருணை விடுதலையின்உணவு

யூதர்கள் எகிப்த்திலிருந்து விடுதலை அடைந்த பெரும் நாள் ஓர் திருநாள். அவ் விடுதலை நாளையே பாஸ்கா விழாவாக கொண்டாடினார்கள். அடிமைகளாக இருந்தவர்கள் தங்களுக்கென ஓர் நாட்டையும் ஆட்சியையும் அமைத்துக்கொள்ள சுகந்திரப் பறவைகளாக புறப்பட்ட நாள் இது. ஒரே குலமாய் ஒரே தெய்வத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டதும் இந் நாளிலேயே.

எனவே பாஸ்காவிழா ஓர் யூதனுக்கு சுகந்திர தினமாகும். மகன் தந்தையை நோக்கி "இது என்ன சடங்கு?" என வினவும் போதெல்லாம், "ஆண்டவர் தம் வலிய கையினால் எங்களை எகிப்து நாட்டினின்றும் அதன் அடிமைத் தனத்தினின்றும் விடுதலையாக்கினார்" என ஒவ்வொரு தந்தையும் மகனுக்கு விடுதலை பற்றி பாடம் கற்பிக்கும் நாள். பெற்ற சுகந்திரத்தை விளக்கி முழுச் சுகந்திரத்தை எடுத்துக் கூறும் ஓர் நினைவு விழாவுமாகும் (வி.ப.13:16). இத்தகைய விடுதலைப் பின்னணியில்தான் இயேசு நற்கருணையை ஏற்படுத்தினார். இதிலிருந்து நற்கருகணை விருந்தும் ஓர் விடுதலைக் கொண்டாட்டம் (பாஸ்கா) என்பது தெளிவாகின்றது.

## நற்கருணைஅன்பின் உணவு

தமிழர் பண்பாட்டில் உணவு உறவின் அடையாளம் ஆகையால் தான் வாழ்விற்கும், மரணத்திற்கும் உணவு பரிமாறப்படுகின்றது. உணவு உள்ளத்து உறவை உரப்படுத்துகின்றது. எனவேதான், உறவு சரியில்லாதவர்கள் வீட்டில் உண்ண மறுக்கின்றோம். மனம் சரியில்லை என்றால் உண்பதும் ஒட்டவதில்லை. ஒன்றாக இருந்து உணவு பகிர்ந்து கொள்வது நெருங்கிய அன்பையும் ஒன்றித்த சகோதர உறவையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

நற்கருணை ஒற்றுமையின் ஊற்று என்று அழகாக தூய பவுல் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். "அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கின்றோம்" (1கொரி.10:17). இந்த நற்கருணை திருவருட்சாதனம் நம்மை அன்பிய வாழ்விற்கு அழைக்கிறது. எனவே நாம் ஒருவர் மற்றவரின் குற்றங்களையும், வேற்றுமைகளையும் மன்னித்து மறந்து, நமது சகோதரங்களுடன் ஒன்றுபட்டு அன்பிய சமூகமாக வாழ வேண்டும் என்பதை உணர்த்துகின்றது தூய நற்கருணை.

நற்கருணையில் கிறிஸ்துவின் மீட்பின் பிரசன்னம் நிறைவாக உள்ளது என்ற ஆழமான விசுவாசத்தை தூய பவுலின் போதனை விசுவாசத்துடனும் நாம் அந்த திருவருட்சாதனத்தை பெற்றால், அது நமக்குப் சாபக்கேடாகவும் தீர்ப்பின் கருவியாகவும் மாறும் (1கொரி.11: 27-29). எனவே நற்கருணைப் பந்தியில் அமர்வதற்கு முன், ஒருவன் தன்னை தகுந்த முறையில் ஆயத்தம் செய்யவேண்டும் என்ற அழைப்பையும் விடுத்து நிற்கின்றது.

## நம் வாழ்வில் நற்கருணை

அன்று இயேசு ஒவ்வொருவரின் பாவத்திற்காகவும் தனது உடலையும் இரத்தத்தையும் பலியிட்டு நற்கருணை என்னும் அருட்சாதன வாழ்விற்கு எம்மை அவர் அழைத்தார். எம் வாழ்வின் மையமாக நற்கருணை அமைய ஆசித்தார் இயேசுபிரான். ஆனால் இன்று எமது வாழ்வு எப்படி உள்ளது என்பதை உணரவேண்டியவர்களாகவுள்ளோம். யதார்த்த உலகம் போரின் தீமைகளுக்குள்ளும், சமூக சீர்கேடுகளுக்குள்ளும் மூழ்கியிருப்பதை உணர்கின்றோம் இறைமகன் இயேசு தனது நற்கருணை உணவின் ஊடாக புதுவாழ்வு பெற தற்கால மனிதனுக்கு அவசர அழைப்பை விடுக்கின்றார். அண்மையிலே கொரியா தீபகற்பத்தில் நாஜூ கிராமத்தில் யூலியாகீம் என்ற பெண்மணிக்கு அருளப்பட்ட நற்கருணை உண்மையான மானிட சதையாக மாறிய புதுமை கூட இதே செய்தியையே எமக்கு விடுத்து நிற்கின்றது.

மூன்றாவது ஆயிரத்தாண்டிற்குள் நுழைய முன்னதாக, யூபிலி ஆண்டு விழாவை அர்த்தமுள்ள முறையில் கொண்டாட மனிதன் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் முதலியவற்றிற்கு போராடவேண்டியவனாகவுள்ளான். இப் போராட்டத்திற்கு பலம் கொடுப்பது நற்கருணை என்பதை ஆழமாக விசுவசிக்க வேண்டும். எனவே மனிதனை அடிமைப்படுத்தும் சக்திகளில் இருந்து விடுதலை செய்வது நற்கருணை தான் என்பதை விசுவசிப்போம். நற்கருணையில் எமது விசுவாச வாழ்வை கட்டி எழுப்பியவர்களாக நற்கருணை அருட்சாதனம் ஊடாக நாம் பெறும் நன்றியுணர்வை, விடுதலையை, அன்பிய வாழ்வை பல உள்ளங்களில் விதைத்திடுவோம் புதிய யூபிலி ஆண்டிலே.

அருட்.சகோ. எஸ். ஏ. றொஷான்
புனித சவேரியார் குருமடம்
கொழும்புத்துறை

# நமக்கு ஏன் நத்தார்?

"இதோ மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்" (லூக்.2:10) என்னும் மகிழ்சிகரமான வார்த்தை இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பாருலக மீட்பர் பாமர வடிவம் பூண்டு பாரில் உதித்தபோது எளிய உள்ளம் கொண்ட இடையர் குலத்திற்கு அறிவிக்கப்பட்டது. எனினும் இவ்வார்த்தை அன்றிலிருந்து இன்றுவரை வாழும் மனுக்குலத்திற்கு காலதிகாலமாக அறிவிக்கப்பட்டே வருகின்றது. அன்று அவ் வார்த்தையைக் கேட்ட இடையர் குலம் பாருலக மீட்பரை முகம் முகமாகத் தரிசித்து வணங்கி மகிழ்ந்தது. **ஆனால் இன்று இவ்வார்த்தை எம் செவியோரங்களில் ஒலிக்கும்போது எமக்காகப் பிறந்துள்ள மீட்பரைச் சென்று தரிசித்து அவரோடு மகிழ்வுற முடிகின்றதா?**

நாழிக்கொருமுறை மாறிவரும் நாகரீகத்தின் விந்தை ஒருபுறம், பொருளாதார சந்தையில் முழக்கமிடும் கணனிகள் மறுபுறம். நினைவிலே நின்றாடும் நீலப்படங்கள், கண்ணெதிரே நிகழ்ந்துவரும் காரணமற்ற கைதுகள், புரியாத புதிர்களுக்குள்ளாகும் புண்ணியவான்களின் புகலிடமான புதைகுழிகள், புத்தாயிரமாண்டை நோக்கிய புதிய கண்டுபிடிப்புகள், பச்சத் தண்ணீர் கூட பசிக்குக் கிட்டாத பட்டினி நிலை. பால் வடியும் முகத்தில் பாசத்திற்கான பரிதாப ஏக்கம், அநீத போக்கில் அதிகாரம் செலுத்தும் அரசியலாளர், அகதி வாழ்வே கதியாகிவிட்ட அநாதைகள், உக்கிரப் போரால் ஊனமாகிவிட்ட உடல், உளங்கள், உரிமையின் உண்மைச் சாசனங்கள் சாக்கடையில் சங்கமமாகிய நிலைகள், தொலைவில் உள்ளோருடன் உல்லாசமாய் சல்லாபமிடும் தொலைபேசிகள், முகவரியே தொலைந்துவிட்ட வாழும் உயிர்கள். இத்தகைய ஆதங்கங்கள் மத்தியிலும் மகிழ்ச்சிதரும் நத்தார் செய்தியும் உண்டோ? என எண்ணும் உள்ளங்கள் எத்தனை? எத்தனை?

ஆம், இவை போன்ற உலகியல் நடப்புக்கள் ஊடாகப் பயணமாகும் எமக்கு இன்றைய நத்தார் செய்திதரும் அர்த்தம் தான் என்ன? சோதனை மிகுந்த வாழ்வே வேதனையாகி, சாதனைகளுக்காய் எதிர்நீச்சல் போடும் வேளையில் நமக்கும் ஓர் நத்தார் விழாவா? என்று விரக்தி கொள்ளத் தோன்றுகிறதா? அல்லது கொடூர இருளின் ஆதிக்கத்திற்கு முகம் கொடுத்து தம் மந்தைகளைக் காத்த இடையர்கள் போல், பிறக்கும் நத்தாரினை விழிப்புணர்வோடு எதிர்கொள்ளத் தோன்றுகிறதா? இன்னும் ஆழமாகச் சிந்திப்போம். அப்போது நமக்கு ஏன் நத்தார் என்பதன் அர்த்தம் புரியும்.

ஆதியிலே எழிலும் ஒருங்கமைப்பும் கொண்டிருந்தது உலகம். இறைவனோடு உறவாடிக் களித்தது மனிதகுலம். ஆதிமனிதன் இழைத்த தவறால், இறைவன் - மனிதன் - உலகம் என்ற முக்கூடு உடைந்தது. அதனால் இறையுயிரை மனிதன் இழந்து விட்டான். ஆயினும் இரக்கம் கொண்ட இறைவன் இப் பிரபஞ்சத்தின் ஏக்கம் தீர வார்த்தையாகிய தம் ஏக மகனை மரியின் வயிற்றிலே மனித அவதாரமாகிப் பிறக்கச் சித்தம் கொண்டார். இம்மீட்பின் வேந்தனின் மகிழ்ச்சிகரமான பிறப்பே எமது நத்தார் விழா.

இறைவார்த்தை கூறுவது போன்று "இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண நிழல்படும் நாட்டில் ஒளி உதித்துச் சுடர் வீசிற்று. (மத். 4:16) ஏனெனில் நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளது. ஆட்சியின் பொறுப்பு அவருடைய தோள்மேல் இருக்கும். அவரே அமைதியின் மன்னன்" புதுப்பித்தல் நிறைந்த யூபிலியாண்டுக்குள் பயணமாகும் எமக்கு மேற்குறிப்பிடப்பட்ட இறைவார்த்தைகள் விசுவாசத்தின் விழுதுகளாய் எம் உள்ளங்களில் வேரூன்றப்பட வேண்டும். இன்று எம் நாடானது மரண ஓலங்களினாலும், எலும்புக்கூடுகள் நிறைந்த புதைகுழிகளினாலும், மனித உரிமை மீறல்களினாலும், விசாரணை இன்றிய கைதுகளினாலும், அடிமைப்படுத்தப்பட்ட பொருளாதார, போக்குவரத்துச் சீரழிவுகளாலும், அநாகரீக வாழ்க்கை முறைகளாலும் இருள் மண்டிக் கிடக்கின்றது. இத்தகைய விர்க்தி நிலைகளுக்கு அடிமையாகும் மனங்கள் ஆறுதல் அற்று அலைகின்றன. இதனால், அமைதியின் மன்னன் உலகிற்கு வந்ததன் நோக்கத்தையே மறந்து விட்டான் மனிதன்.

எனவே இத்தகைய உலகியல் போக்குகளிலிருந்து நாம் சற்று விடுபட்டு, ஆயினும் இந்நிலைகள் உணர்த்தும் உணர்வுகளுக்கு ஊடாக, கிறிஸ்து வந்ததன் நோக்கத்தை சற்று சிந்திப்போமாகில் மாந்தர் அனைவருக்கும் முழுமையான வாழ்வு அளிக்கவே வந்தார் வள்ளல் இயேசு என்பது தெளிவு. எவ்வாறெனில் உலகிலே உரிமைக்குரல் எழுப்ப, புறக்கணிக்கப்பட்டோருக்குப் புணர்வாழ்வு கொடுக்க அநீதியையும், அட்டூழியத்தையும் அழித்தொழித்து ஆறுதல் அற்ற இதயங்களுக்கு அமைதியையும், சமாதானத்தையும் அருளவே ஆண்டவன் கிறிஸ்து அவனியில் அவதரித்தார் என்ற உண்மையை எம் வாழ்வில் ஏற்று வாழும்போது நமக்கு ஏன் நத்தார் என்ற அர்த்தம் புரியும். அந்த அர்த்தத்தில் நாம் பயணிக்கும் போது தான் தேவசுதன் பாவிகளை நாடிவந்த நத்தார் திருநாளிற் நாம் நாடும் புதுவாழ்வும் எமக்குப் பிறக்கும். அப்போதே இருள் மண்டிய எமது வாழ்வும் ஒளியில் உதயமாகும்.

செல்வி. வுளோறன்ஸ் சூசைதாஸ்
சென். ஜேம்ஸ் வீதி
இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைமாற அருள்தரவேண்டும்

எல். மெறிற்றா (கரம்பொன்)

மலர்கள் கூட காலையின்
அதிகாரத்திற்கு உட்பட்ட நிலையில்
கண்ணில் பசுமை கண்டும்
கருத்துக்கள் வரண்டதாகவே கவிபாடுகின்றன.
முகவரி அற்றுப்போனது மனிதாபிமானங்கள்
மரித்துப்போன மானிட வாழ்வுகள்
உலகின் தேடலுக்காய் உடன்பிறப்புக்களை
அடகுவைக்கும் நாகரிக வாழ்வுகள்
ஆண்டவன் என்னும் வார்த்தை அகராதியிலும்
ஆன்மீகத் தேடல்கள் அநாதரவாயும் போனது
இருளகற்றி ஒளியேற்றும் இறைமைந்தனிடம்
இந்நிலை மாறி அருள்நிலை அருளி
அடியவர் எமை ஆட்கொள்ள
ஆண்டொன்றை வேண்டுவோமே யாம்.

### அஞ்சலிக்கின்றோம்

அகுஸ்தின்
இறப்பு:- 22.12.1971

அகுஸ்தின் ஹெலன்
இறப்பு :- 21.04.1965

**"உயிர்ப்பும் உயிரும் நானே**
**என்னில் விசுவாசம் கொள்பவன்**
**இறப்பினும் வாழ்வான்"**

குருநகர்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

### ஆண்டு 15 நினைவு

பிறப்பு
1928
10
16



இறப்பு
1984
12
28

**ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை**
குருநகர்.

*மண்ணுலகில் என்னை நேசித்தவர்களே*
*மரணத்திலும் மறவாதீர்.*

குருநகர்.

மனைவி, மைத்துனி,
பிள்ளைகள்.

### நிலை வாழ்வில் 45 நாட்கள்

23
03
1932



02
11
1999

**சாமிநாதர் ஜேசுதாசன்**

எல்லாம் வல்ல நிலையான இறைவா!

உமது திட்டத்தின்படி வாழ்ந்து இறந்த உம் அடியார் ஜேசுதாசனுக்கு ஆறுதலும் ஒளியும் அமைதியும் அளித்தருளும். அனைவரும் தத்தம் மீட்புப்பெற உயிர்த்தெழும் அப்பெரிய நாள் வரும்போது, இவரையும் தேர்ந்துகொள்ளப் பெற்று புனிதரோடு உயிர்த்தெழச் செய்தருளும். இவரது குற்றங்கள் மன்னிக்கப்பட்டு, நித்திய அரசையும் பெற்று மகிழ்வாராக.

41, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரி.

## பாட்டி சொன்ன கதை



அன்று குடிக்கணக்கெடுப்பதற்கு அரசன் அந்நாட்டு மக்களை அழைத்திருந்தான். சூசையும் தன் மனைவி மரியாளுடன் தன் சொந்த ஊருக்குச் சென்றார். அங்கு தங்குவதற்கு இடம் தேடினார். ஏராளமான சனங்கள் அங்கு வந்திருந்ததால் வீடுகள், சத்திரங்கள் எல்லாம் நிரம்பி வழிந்தன. ஒரு சின்ன இடம் கூடக் கிடைக்கவில்லை. சூசை அங்கு இங்கு என்று அலைந்தார்.

இதைக்கண்ட வெரோணிக்கா என்னும் சிறுமி பரிதாபப்பட்டு தன் தந்தையிடம் வாதாடி அவர்களுக்கு மாட்டுத் தொழுவத்தில் ஒரு இடத்தை கொடுக்கச் செய்தாள். அந்தத் தொழுவம் அழுக்காக துர்நாற்றத்துடன் காணப்பட்டது. சூசை ஒரு பக்கத்தை துப்பரவாக்கினார். மரியாள் அங்கு குழந்தையைப் பெற்றெடுத்து ஆடுகளின் தீவனத் தொட்டியில் வைக்கோலின் மீது கிடத்தினாள்.

இந்நேரம் வானத்தில் சந்தோஷமான பாட்டொலிகள் கேட்டன. அழகான சம்மனசுகள் மேலே காட்சியளித்தன.

குழந்தையோ குளிரில் நடுங்கி வீரிட்டு அழுதது. உறங்காது துடிதுடித்தது. கொசுக்களும் தொல்லை கொடுத்தன. இதைக் கண்ட வெரோணிக்கா வீட்டிற்கு ஓடிச்சென்று தனக்குப் பிறந்தநாள் பரிசாகக் கிடைத்த வெண்மையான முக்காட்டுத் துண்டை எடுத்து வந்து குழந்தையை மூடிவிட்டாள். அணைத்து தாலாட்டி உறங்க வைத்தாள். குழந்தை அமைதியாக உறங்குவதைக் கண்டு வீடு சென்றாள்.

சில நாட்களின் பின் வெரோணிக்கா அங்கு வந்து பார்த்தபோது அங்கு அந்தக் குடும்பமும் இல்லை. குழந்தையும் இல்லை. ஆனால் அவள் கொடுத்த துணி மட்டும் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதைப் பரிவோடு எடுத்து வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தாள். குழந்தையைக் காணாதது அவளுக்குத் துக்கமாக இருந்தது. அதைத் திரும்பவும் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவள் மனதில் குடி கொண்டது.

ஆண்டுகள் உருண்டோடின. இப்போது வெரோணிக்கா ஜெருசலேமில் ஒரு செல்வச் சீமாட்டி. ஒருநாள் வீதியிலே ஏதோ ஆரவாரம் கேட்டது. வெரோணிகா ஓடிச்சென்று பார்த்தாள். அங்கு அரச சேவகர்கள் ஒருவரை அடித்து, உதைத்து முள்முடி சூட்டி இழுத்து வருவதையும் கண்டாள். இது யாராக இருக்கும் என அவள் அவரை நோக்கினாள். அவரும் வெரோணிகாவை நோக்கினார். என்ன அதிசயம். அந்தக் குழந்தை முகம் அவரில் தெரிந்தது. ஆனால் முகத்தில் தூசு, மண், இரத்தக்கறை, படிந்து அழுக்காகக் காட்சியளித்தது. வெரோணிகா ஓடிச் சென்று அன்று மடித்து வைத்த துணியை எடுத்து வந்து கொடிய சேவகரை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்து அவர் முன் வந்தாள். அவரும் குனிந்து வெரோணிகா தன் முகத்தைத் துடைக்கவிட்டார். அவர் முகத்தைத் அழுத்தித் துடைத்தபின் வெரோணிகா வெளியே வந்து துணியைப் பார்த்தபோது என்ன ஆச்சரியம்! அதில் இயேசுவின் முகம் பதிந்திருப்பதைக் கண்டாள்.

இந்தத் துணி பின்னர் திருச்சபை மூப்பர்களிடம் கொடுக்கப்பட்டு இன்னமும் தேவாலயத்தில் பரிசுத்தமாகப் பாதுகாக்கப் படுவதாக சரித்திரம் கூறுகிறது.

**இது ஒரு பாட்டி கதை இதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை**

**திரு. R. சலேசியஸ்**
**கரவெட்டி**

## குடும்பம் என்னும் கோவிலிலே . . . !

**"அகவொளி" குடும்ப வளத்துணை நிலையத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற ஆக்கம் (பிரிவு 4)**

குடும்பம் என்பது உண்மையான அன்பும், உறவும் சங்கமமாகும் ஒரு நிறுவனம். அதுமட்டுமல்ல, குடும்பம் சமுதாயத்தை உருவாக்குவதால் அது ஒரு சமுதாயத்தின் அங்கமாகும். எமது விசுவாசம் குடும்பத்திலே உறுதிப்படுத்தப்படுவதால் குடும்பம் ஓர் குட்டித் திருச்சபை 'என்றும் கூறலாம். குடும்பம் ஒரு முன்மாதிரிகையான உலகம். இந்தக் குடும்பத்தைப் பல்வேறுபட்ட வழிகளிலும் வடிவங்களிலும் உருவாக்குபவர்கள் பெற்றோர். எனவே குடும்பங்களில் பெற்றோரின் பணி சிறப்படைகிறது. குடும்பம் சிறந்த பல்கலைக்கழகமாகவும் திகழ வேண்டும். அருங்கொடைகளாக இறைவன் கொடுத்த அன்புக் குழந்தைகளைப் பயன் கொடுக்கக் கூடியவர்களாக ஆக்குவது தான் பெற்றோரின் பணி. இந்தக் குடும்பம் என்ற கல்லூரியிலே முழு மனித விசுவாச வாழ்விற்குரிய அனைத்துச் செயற்பாடுகளும் நடைபெறுகிறது. குடும்பத்திலே பெற்றோர்களும் பிள்ளைகளும் அங்கம் வகிக்கிறார்கள். எனவே பிள்ளைகள் பெற்றோரை மதித்து நடக்க வேண்டும். பெற்றோர், பிள்ளைகளது வாழ்விலும் வளர்ச்சியிலும் கொண்டிருக்கும் அக்கறையை பிள்ளைகள் புரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர் பிள்ளைகளைக் க்ண்டித்துத் திருத்தி கனிவோடு வளர்க்க முன்வர வேண்டும். பெற்றோரின் உரிமைகளைப் பிள்ளைகள் மதிக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்வில் குடும்பம் முதலிடம் பெறுகின்றது. இதனால்தான் நசரேத்தூர் திருக்குடும்பம் எமக்கு முன்மாதிரிகையாக அமைகிறது. திருக்குடும்பத்தைப் பின்பற்றி வாழ்ந்தால் எமது வாழ்க்கையில் அன்றாடம் அன்பிலும், இறைபற்றிலும் வாழலாம். துன்ப துயரங்களுக்கு முகம் கொடுக்கலாம். உண்மையான கிறிஸ்தவ குடும்பம் இறைவாக்கை ஏற்று அறிக்கையிட்டு இறைவாக்கு உரைக்கும் பணியை நிறைவேற்ற வேண்டும். நற்செய்தி அறிவிக்கும் சமூகமாக மாற வேண்டும். சமூகத்தை மனிதப் பண்புடையதாக மாற்றும் சக்தியுடையுது குடும்பமாகும்.

சமூகப் பணியின் பல்வேறு துறைகளில் குடும்பம் தன்னையே ஈடுபடுத்த வேண்டும். குடும்பம் சிறந்தால் சமுதாயம் சிறக்கும் என்பூர்கள். குடும்பமானது திருச்சபையின் வாழ்விலும் பணிப் பொறுப்பிலும் பங்கேற்கவேண்டும். குடும்பம் சான்றோரை, குணக்குன்றுகளை, ஒழுக்க சீலர்களை உருவாக்கும் ஆலயமாகத் திகழ வேண்டும். மனிதரைப் புனிதராக்கும், தீயோரைத் தூயோராக்கும், குவலயத்தையே இறைவனின் ஆலயமாக்கும் புனித ஆற்றல் கொண்டு குடும்ப அங்கத்தவர்கள் செயற்படும் பொழுதுதான் குடும்பம் என்னும் கோவிலிலே தெய்வீக ஒளி சுடர்விட்டு எட்டுத் சிக்கும் பிரகாசிக்கும்.

## ஒளி பிறந்தது



பாருலகில் பாலக யேசுவுக்கு
பாங்குடனே பாடலிசைப்போம்
பாவிகள் பாவம் போக்கிட
பாரினிலே பாதம் பதித்தார்

அநீதிகளை அடியோடழித்திடும்
அன்பு கொண்ட அண்ணல் அவர்
இருளினிலே இடறியோர்க்கு
இளைப்பாற்றிய இறைவனவர்

அவனியிலே அன்புக்கு
அடித்தளமாய் அமைந்திட்டார்
ஒதுக்கப்பட்டோர் ஒன்றிக்க
ஒலியெழுப்பி ஒளிர வைத்தார்

தாழ்மையின் தாற்பரியம்
மன்னிப்பின் மன்னரவர்
மாமரியிடம் மாட்சிமையில்
அவதரித்தாரெமக் கருள்வாய்

பாமாலை பாடிடுவோம்
பாலன் பாதம் பணிந்திடுவோம்
இன்னிசை இசைத்திடுவோம்
இறைவனில் இன்புறுவோம்

*திரு. எம். எம். நிக்ஸன்*
*பலாலி 'ஆசிரியர் கலாசாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இஸ்ராயேலுக்கு விண்ணப்பம்

இரண்டாயிரமாம் ஆண்டு நெருங்கி வரும் இவ்வேளையில் திருப்பயணிகள் கிறிஸ்தவத் தலங்களைத் தரிசிப்பதற்கான தடைகளை இஸ்ராயேல் தளர்த்த வேண்டுமென புனித பூமியின் தலத்திருச்சபை இஸ்ராயேலை விண்ணப்பித்துள்ளது. புனித தலங்களை தரிசிக்கத் தடையாக இருப்பவை அனைத்தும் அகற்றப்பட வேண்டுமென இலத்தின் ரீதிப் பிதாப்பிதா மிஸே சாபா தன் அறிக்கையில் விண்ணப்பித்துள்ளார். இயேசுவின் வாழ்வோடு தொடர்புடைய இடங்களை தரிசிக்க வரும் திருப்பயணிகள் பல்வேறு பாதுகாப்பு சூழ்நிலைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவமானப் படுத்தப்படுகின்றார்கள். என பலர் குற்றச்சாட்டுகளை முன் வைத்ததைத் தொடர்ந்து பேராயர் சபா இவ் விண்ணப்பத்தை இஸ்ராயேல் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

## ஐரோப்பாவுக்கான புதிய நற்செய்தி

ஒக்டோபர் முதல் திகதி முதல் வத்திக்கானில் இடம்பெறும் சிறப்பு ஆயர் மாநாட்டில் முதற் கட்ட உரைத்தொகுப்பை 14வது பொது அவைக் கூட்டத்தில் வெளியிட்டார் கர்தினால் அந்தோனியோ மரியோ றுவாக்கோ அடிகளார். இன்று ஐரோப்பாவுக்கு அவசியமாகத் தேவைப்படும் நம்பிக்கையும் ஆதாரமுமான கிறிஸ்துவின் உயிர்த்துடிப்பான பிரசன்னத்துக்கு சாட்சியாக இருந்து அதனை அறிவிப்பது ஐரோப்பாவுக்கான புதிய நற்செய்தியை அறிவித்தல், மனமாற்றத்துக்கு வழிவகுத்தல், திட்டமிடுதல் என்பன குறித்து இதுவரை நடந்த அமர்வுகளில் விவாதிக்கப்பட்டதாகக் கூறினார்.

## அழிவுக்குள்ளாகும் ஒழுக்க நெறிகள்

கருக்கலைத்தல், மணமுறிவு மற்றும் ஒரே பாலினத் திருமணங்களை அனுமதிப்பதற்கான பரிந்துரைகள் பிலிப்பைன்ஸ் காங்கிரஸ் அவையில் முன் வைக்கப்பட்டுள்ளது. அந்நாட்டு ஒழுக்க நெறிகளுக்கெதிரான மதிப்பீடுகள் மற்றும் சட்டங்களுக்கிடையிலான உறவு போன்றவை இன்றைய பிரச்சனைகள் என்றார் கர்தினால் மார்ட்டின்.

## நிலநடுக்க பாதிப்பாளர்களுக்கு திருத்தந்தை அனுதாபம்

தைவானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 1500 மக்கள் இறந்தும் 4000 மக்கள் காயமடைந்தும் 2000க்கு மேற்பட்ட மக்கள் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு மீட்கப்படாமலும் இருப்பதையிட்டு திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் தமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தெரிவிக்குமாறு தைவான் கௌசிங் கருதினால் போல் சான் குஓசிக்கு தந்திச் செய்தி மூலம் அறிவித்துள்ளார்.

ஆச்செய்தியில் இப்பாதிப்பிற்கு உள்ளான மக்கள் எல்லோருக்குமாக பிரார்த்திப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிபவர்களை இறைவன் ஆசீர்வதிப்பாரென்றும் குறிப்பிட்டுள்ளாதாக வத்திக்கான் இராஜங்கச் செயலாளர் கருதினால் அஞ்சலோ சோடானே கூறியுள்ளார்.

## சமாதானம் வேண்டி திருத்தந்தை செபித்தார்

கிழக்கு திமோரில் வாழும் சகல மக்களும் மற்றும் இப்பிரதேசத்தின் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அனைவரும் ஒருவரை ஒருவர் மதித்தும் அன்பு செய்தும் சரித்திர பூர்வமான வடுக்களை அகற்றி சமாதானம் நிலவ உதவி புரிய வேண்டும் எனத் திருத்தந்தை தமது ஆகஸ்ட் 25ம் திகதி பொதுப் பார்வையாளருக்கான உரையின்பின் செபித்தார்.

கிழக்கு திமோரில் கடந்த இருபத்தி நாலு வருடங்களாக 250,000 க்கு மேற்பட்ட உயிர்களை பலி கொண்ட கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு திமோர் நகர் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக சர்வ ஜன வாக்கெடுப்பு கடந்த ஆகஸ்ட் 30ம் திகதி இடம் பெற்றது. இவ்வாக்கெடுப்பு மக்கள் இந்தோனேசியாவுடன் இணைந்து வாழ்வதா. அன்றேல் சுதந்திர நாடாக வாழ்வதா என்பதை தீர்மானிப்பதற்தாக நடாத்தப்பட்டது. இவ்வாக்கெடுப்பு சேவையில் ஈடுபட்டிருந்த ஐக்கிய நாட்டுக்காக வேலை செய்த கிழக்கு திமோர் நபர் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டுள்ளார். வாக்கெடுப்புக்கான ஐக்கிய நாட்டு சேவையில் கொல்லப்பட்ட முதலாவது நபர் இவராவர். 95 வீத 460,000 மக்கள் கலந்து கொண்ட வாக்கெடுப்பில் சுதந்திர நாட்டுகாகவே மக்கள் வாக்களித்துள்ளனர்.

## புனித திரேசாவின் புனிதப் பொருட்கள் யாத்திரை

சிறிய புஸ்பம் என அழைக்கப்படும் புனித திரேசாவின் புனிதப் பொருட்கள் அக்டோபர் 29ம் 30ம் திகதிகளில் கனடாவரும் பொழுது நயாக்காரா நீர்வீழ்ச்சிக்கு அண்மையிலுள்ள மவுண்ட் கார்மேல் ஆன்மீக நிலையம் யாத்திரிகர்கள்ால் நிரம்பும். 19ம் நூற்றாண்டு பிரான்ஸ் புனிதையான திரேசா திருச்சபையின் கலாநிதியாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, புனிதையின் புனிதப் பொருட்கள் உலக யாத்திரைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ் யாத்திரை கனடாவில் மவுண்ட் கார்மேல் ஆன்மீக நிலையத்திலும், அலெக்ஸ்ஸாண்டிரியா புனித கத்தறின்ஸ் பேராலயத்திலும் ஆராதனைக்காக வைக்கப்படும்.

பிரான்ஸ், பிறேசில், ஹொலன்ட், பெலஜியம், ருஸ்யா, ஆர்ஜென்டீனா, ஐக்கிய நாடுகளில் பல நகரங்களுக்கும் சென்று வந்துள்ளன. கனடாவில் இருந்து ஐக்கிய அமெரிக்கா சென்று அங்கிருந்து பிலிப்பைன்ஸ் செல்லவிருக்கின்றது.


## ஹெலிபெக்ஸ் பேராலயம் பூர்வீக மக்களின் சரித்திர ஸ்தலம்

நோவாஸ் ஹோசியா திருச்சபையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இடம்பெறும் பல விழாக்களில் ஹெலிபெக்ஸ் புனித மரியாள் பேராலயம் அக்டோபர் 6ம் திகதி தேசிய பூர்வீக மக்களின் சரித்திர ஸ்தலமாக்கப்பட்டதும் ஒரு நிகழ்வாகும். இவ்வாலயம் 1820ம் ஆண்டு கட்டப்பட்டது. 1860ம் ஆண்டு பெருப்பித்துத் திருத்திப் புதுப்பிக்கப்பட்டது 1950ம் ஆண்டில் திருத்தந்தை 12ம் பத்திநாதரால் சிறிய பேராலயமாக்கப்பட்டது.

## மூன்றாம் உலக நாடுகளின் கடன்கள் நீக்கம்

2000 யூபிலி ஆண்டில் 50 வறிய நாடுகள் ஐக்கிய அமெரிக்காவுக்குச் செலுத்தப்படவேண்டிய கடன் தொகையான 23 கோடி டொலர்கள் நீக்கப்படவிருக்கின்றன. 1981ம் 1998ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தின் வறியநாடுகள் 3000 கோடி டொலர்களை வட்டியாக ஐக்கிய அமெரிக்காவுக்குச் செலுத்தியுள்ளன. 3ம் உலக 21 வறிய நாடுகளால் கனடாவுக்கு 120கோடி டொலர்கள் வருமதியாக உள்ளன. மூன்றாம் உலக நாடுகளுக்கிடையே கடனாக இருக்கும் பணத்தில் மூன்றில் ஒரு பகுதி சர்வதேச நாணய நிதியத்துக்கோ அல்லது உலக வங்கிக்கோ உரியது. மிகுதியானவற்றில் கூடுதலாக பிரத்தியேகக் கடன் வழங்குனர்களுக்கே உரியது எனக் கூறப்படுகின்றது. கனேடிய வர்த்தக வங்கிகளுக்கு வறிய நாடுகளிடமிருந்து 13600 கோடி டொலர்கள் வருமதியாகவுள்ளது. சென்ற யூனில் அமுல்படுத்தப்பட்ட பொலோன் ஜி 7 உடன்படிக்கை 9000 கோடி டொலர்களை 36 வறிய நாடுகளுக்கு கடன் நீக்க வழிவகுத்துள்ளது.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வி. மடுத்தீனுப்பிள்ளை**

**மேரி யசிந்தா**

மண்மகிழ 13.02.1974 — மனம்நெகிழ 13.11.1999

'நான் இருக்கும் இடத்தில் அவர்களும் என்னோடு இருக்கும்படி விரும்புகின்றோம்'.

இறைவா! இன்னல் நிறைந்த இவ்வுலகில் வாழ்ந்து பேரின்ப மகிமைக்கு அழைத்துக்கொள்ளப்பட்ட உமது அடியாள் மடுத்தீனுப்பிள்ளை மேரி யசிந்தா இவ்வுலகில் அறிந்தும் அறியாமல் செய்த குற்றங்களை மன்னித்து நித்திய வான்வீட்டில் இடமளித்தருளும். இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 13.12.99 திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவரது ஆன்மா சாந்திபெற இறைவனிடம் எந்நாளும் வேண்டுவோம்.

இவரது பிரிவால் துயருறும்,
பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள், சிறிய மக்கள்,
உற்றார், உறவினர்.

4ஆம் வட்டாரம்,
எழுவைதீவு.

### ஆறாம் மாத நினைவஞ்சலி



தோற்றம் 08 05 1930 — மறைவு 08 06 1999

**அமரர் பெஞ்சமின் குமாரகுலசிங்கம்**

எம் குடும்பத்தின் குலவிளக்கே
மாதங்கள்தான் ஆறு - ஓடிமறைந்திடினும்
மாறாது நீர் எம்மீது கொண்ட அன்பு
மரணத்தை ஜெயித்த மாவீரன் இயேசுவின்
மலரடிதனிலே நீர் அமைதி அடைந்திட மன்றாடுகின்றோம்.

அன்பு மனைவி, சகோதரர்கள்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

### நெஞ்சகலா நினைவஞ்சலி

| 10ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு |
|---|---|
|  |  |
| **பஸ்ரியாம்பிள்ளை பலிப்புப்பிள்ளை** (பொன்னுத்துரை) | **எலிசபேத் பிலிப்புப்பிள்ளை** (இராசேஸ்வரி) |
| தோற்றம் 21.02.1928 — மறைவு 27.12.1989 | தோற்றம் 01.06.1932 — மறைவு 09.11.1997 |

ஆண்டவருடைய இரக்கத்தில்
உங்கள் ஆன்மா மகிழ்ச்சியடையக்கடவது.
அவருடைய புகழ்ச்சியில் கலக்கம் அடையமாட்டீர்கள்.
சீராக் ஆகமம் 51:37

**உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

"கனகராஜா வில்லா"
தபாற் கந்தோரடி,
நெல்லியடி, கரவெட்டி.

பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறை இரக்கத்தினாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ் மறைமாவட்ட ஆயரான இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொதுநிலையினரான இறை மக்களுக்கு விடுக்கும் சுற்றுமடல்.**

## முகவுரை

அன்பார்ந்த இறைமக்களே,

போர்க்கால மேகங்களும், மரண ஓலங்களும் நம்மைச் சூழ்ந்திருக்கும் தருணத்தில் மலர இருக்கும் புத்தாயிரமாம் ஆண்டை எதிர்பார்க்கின்றோம். கத்தோலிக்க திருச்சபையானது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து பிறப்பின் 2000ஆம் ஆண்டை யூபிலி வருடமாகப் பிரகடனம் செய்திருக்கின்றது. இந்த யூபிலி ஆண்டு சிறப்பு மிக்கதாய் இருக்க கடந்த மூன்று ஆண்டுகளிலும் பல ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மீட்பர் இயேசுவுக்கு உங்கள் உள்ளக் கதவுகளைத் திறந்து விடுங்கள் என்ற அறைகூவலுடன் மூவொரு கடவுளை மையப்படுத்தி இயேசுக்கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் ஆண்டவர். எம்மைப் புதுப்பித்து புனிதப்படுத்தும் தூய ஆவியானவர். எழுந்து தந்தையிடம் போவேன் இவ்வாறு தியானித்து செபித்தோம். நாம் ஆவலோடு எதிர்பார்த்த யூபிலி ஆண்டு இதோ அண்மித்து விட்டது. கிறிஸ்து பிறப்புவிழா அன்று பரிசுத்த தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் றோமாபுரியில் புனித பேதுரு பேராலயத்தின் முன் கதவுகளைத் திறந்து திரு ஆட்சி முறைப்படி யூபிலி ஆண்டை ஆரம்பித்து வைப்பார்.

## I. இந்த யூபிலி ஆண்டு நமக்குத் தரும் செய்தி என்ன ?

அனைத்தும் யாரில் தொடங்குகின்றதோ, யாரிடம் திரும்பிச் செல்கின்றதோ அதே மூவொரு இறைவனுக்கு மகிமையளிப்பதே நமது குறிக்கோள். இறை மகிமைக்காக தந்தை, மகன், தூயஆவி ஆகிய மூவொரு இறைவனின் அன்பு வாழ்வை, இன்னும் நாம் ஆழப்படுத்தி வாழ அழைக்கப்படுகின்றோம். தம் ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவிற்கு நம்மேல் அன்பு கூர்ந்த இறைவனின் மாபெரும் பிறப்பு நிகழ்வை கிறிஸ்து பிறப்பு விழாவாக 2000ஆம் யூபிலி ஆண்டில் கொண்டாடுகின்றோம். இப்பெருவிழாவின் நீடிப்பாக நற்கருணை அருட்சாதனத்தில் இருபது நூற்றாண்டுகளுக்கு முன் மரியின் வயிற்றில் மனுவுருவான மீட்பர் தொடர்ந்து மனுக்குலத்திற்கு இறைவாழ்வின் ஊற்றாகவும், சக்தியாகவும் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றார். எனவே இவ் யூபிலி ஆண்டு பலியும் விருந்துமாகிய நற்கருணையை மையப்படுத்தி சிந்திக்கவும், விசுவாசத்தை ஆழப்படுத்தவும், செபிக்கவும் நம்மைத் தூண்டுகின்றது.

## ஆன்மீகப் புதுப்பித்தல்

எமது ஆன்மீகப் புதுப்பித்தலை அடிப்படையாகக் கொண்ட இவ் யூபிலி ஆண்டில் எமது விசுவாசத்தைப் புதுப்பித்து ஆழப்படுத்தி உள்ளரங்க மனமாற்றத்தினால் புதுப்பிக்கப்பட வேண்டுமென விரும்புகின்றோம். இதற்கு உதவும் முகமாக கடந்த ஆண்டு சில பங்குகளில் மகா ஞானஒடுக்கத்தை நடத்தினோம். தொடர்ந்து இவ் ஆண்டிலும் இம் முயற்சி நடைபெற விரும்புகின்றோம். இன்னும் புதுப்பித்தலுக்கு அடையாளமாகிய மனமாற்றத்திற்கு உதவ யூபிலி ஆண்டில் சிறப்பாக புனித யாத்திரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ் யாத்திரைகள் வெறும் பயணங்களாக அமையாமல் செப, தப உணர்வுகளோடு இடம்பெறுதல் வேண்டும். இறைவார்த்தையை வாசித்து தியானிப்பதும் ஒப்புரவு வழிபாடுகளில் பங்குபற்றுவதும் யூபிலி ஆண்டை அர்த்தமுள்ளதாக்கி பலன் அளிக்கச் செய்யும்.

## யூபிலி ஆண்டிற்கான செயற்பாடுகள்

1. ஆன்மீகப் புதுப்பித்தலை முன்னெடுத்துச்செல்ல மகா ஞானஒடுக்க முயற்சிகளை ஏனைய பங்குகளிலும் நடத்த் உழைத்தல்.

2. மனமாற்றத்தின் அடையாளமாக திரு யாத்திரைகளை மேற்கொள்ளல். யாத்திரை ஸ்தலங்களில் திருப்பலி, நற்கருணை வழிபாடு, ஒப்புரவு வழிபாடு, குணமாக்கல் வழிபாடு போன்ற ஞான முயற்சிகளில் பங்குபற்றி பயன்பெறுதல். திரு யாத்திரைத் தலங்களுக்கு நாம் யாத்திரை மேற்கொள்ளும்பொழுது ஏற்படக்கூடிய வசதியீனங்களை தப உணர்வோடு ஏற்றுக் கொள்ளல்.

3. பின்வரும் ஆலயங்கள் யூபிலி ஆண்டின் பலன்களைப் பெறுவதற்குரிய தலங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

### யாழ் குடாநாடு

(i) சின்னமடு செபமாலை மாதா கோவில்
(ii) சாட்டி சிந்தாத்திரை மாதா கோவில்
(iii) பண்டத்தரிப்பு பற்றிமா மாதா கோவில்
(iv) யாழ்ப்பாணம் புதுமை மாதா கோவில்
(v) முகமாலை ஆரோக்கிய மாதா கோவில்
(vi) செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் கோவில்
(vii) தும்பளை லூர்து மாதா கோவில்
(viii) நெடுந்தீவு புனித லவுறேஞ்சியார் கோவில்

### கிளி - முல்லை மறைக்கோட்டம்

(i) புனித அந்தோனியார் ஆலயம் - மல்லிகைத்தீவு
(ii) புனித அந்தோனியார் ஆலயம் - அளம்பில்
(iii) புனித மரியன்னை ஆலயம் - முழங்காவில்
(iv) குழந்தை இயேசு ஆலயம் - புதுக்குடியிருப்பு
(v) புனித அந்தோனியார் ஆலயம் - ஸ்கந்தபுரம்
(vi) புனித் செபமாலைமாதா ஆலயம் - வலையன்மடம்

## யூபிலி ஆண்டின் மையமான நற்கருணை

*இயேசுக்கிறிஸ்து உலகின் ஒரே இரட்சகர்*
*புதிய வாழ்வின் அப்பம்*

(i) ஞாயிறு திருப்பலியில் பங்குமக்கள் அனைவரும் சமூக உணர்வோடு நிறைவாகப் பங்குபற்றி முழுத் திருப்பலியிலும் ஈடுபட்டு குடும்ப உணர்வோடு வழிபடவேண்டும். இதற்கு உதவியாக தத்தம் இல்லங்களில் ஞாயிறு வாசகங்களை வாசித்து கலந்துரையாடி ஆயத்தம் செய்தல்.

(ii) மாதம் ஒரு ஞாயிறு நற்கருணையைப் பற்றி சிறப்பு மறையுரை எல்லாப் பங்குகளிலும் நிகழ்த்துதல்.

(iii) , மறைக்கல்வி நிலையமும் வழிபாட்டு நிலையமும் நற்கருணை பற்றிய வகுப்புக்கள், கருத்தரங்குகள், போட்டிகள், கண்காட்சிகள் நடத்தி நற்கருணை பற்றிய மறைஅறிவை வளர்த்தல்.

(iv) இவ்வருடத்தில் புதுநன்மை ஆயத்தங்கள் மிகவும் சிறப்பாக கூடிய கவனத்துடன் நடத்துதல்.

(v) நற்கருணைப் பிரசன்னத்தில் விசுவாசத்தை ஆழப்படுத்த மாதம் ஒருமுறை பிரதான ஆலயத்தில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு சிறப்பு வழிபாடுகளை நடத்துதல்.

(vi) வசதிக்கேற்ப ஞாயிறு மாலையிலும், திருநாட்களிலும், நற்கருணை ஆசீர் வழிபாடுகள் நடத்துதல். இவ்வேளையில் திருப்புகழ்மாலை செபிப்பது சிறந்தது.

(vii) அயல் பங்குகள் இணைந்து இறைமக்களின் ஒற்றுமையின் அடையாளமாகவும், விசுவாச அறிக்கையிடுதலின் வெளிப்பாடாகவும் நற்கருணைப் பவனியை சிறப்பாக நடத்துதல்.

(viii) நற்கருணை தரும் அன்பு, சகோதரத்துவம் போன்ற பண்புகளை குடும்பத்திலும், பங்கிலும், சமூகத்திலும், மறைமாவட்டத்திலும் கட்டியெழுப்புதல்.

குடும்பத்தில் நற்கருணைப் பிரசன்னத்தை வளர்க்க மாதம் ஒருமுறையென்கிலும் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இல்ல விழிப்பு வழிபாடு நடத்துதல்.

வழிபாட்டை அர்த்தமுள்ளதாக வாழ நாமும் பலிப் பொருளாக மாறி இறை திருவுளத்தை நமது நாளாந்த வாழ்வில் ஏற்று வாழுதல்.

(ix) நற்கருணை காட்டும் அன்பு வழியைப் பின்பற்றி மற்றவர்கள் மட்டில் கரிசனை, துயருறுவோர் மட்டில் பரிவு ஆகிய பண்புகளை வளர்த்து பகிர்ந்துவாழுதல். பங்குகள் தோறும் துன்புறுவோர் துயர்துடைக்க ஒரு அறக்கொடை நிதியத்தை ஆரம்பித்தல்.

வரப்போகும் 3ஆம் மிலேனியத்தில் 600 மில்லியன் மக்களுடன் சேர்ந்து எம் பரம தந்தையின் வீட்டை நோக்க, யாத்திரை செய்ய இயேசு நம்மை அழைத்துச் செல்கிறார்.

உலக மயமாக்கல் எழுப்பப் போகும் பொருளாதாரச் சிக்கல்கள், அதன் தொடர்பு சாதனங்களால் ஏற்படப்போகும் மன உழைச்சல்கள், நெருக்கடிகள் மத்தியில் மேற்கூறிய செயற்பாடுகளில் மிக ஆர்வத்தோடு நம்மை ஈடுபடுத்தி மாபெரும் யூபிலி ஆண்டை பயனுள்ள விதமாகக் கொண்டாட உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஆண்டவரில் உங்கள்மேல் பற்றுள்ள,
† இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்.

## அஞ்சல் வழி விவிலியக் கல்வி

அநேகருடைய வேண்டுகோளுக்கிணங்க விண்ணப்ப இறுதி நாள் 15.01.2000க்கு மாற்றப்பட்டுள்ளது.

இரண்டு வருடத்தில் முழு விவிலியத்தையும் தபால் மூலம் கற்றுக்கொள்ள விண்ணப்பியுங்கள்.

### விதிமுறைகள்

1. மாதம் ஒரு தடவை தபால் மூலம் ஒரு புத்தகம் அனுப்பப்படும்.
2. புத்தகத்தைப் படித்தபின் அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு விடையளித்து எமது நிலையத்திற்கு அனுப்பவேண்டும்.
3. இரண்டு வருடத்திற்குரிய கட்டணம் தபால் செலவுடன் 200/= மட்டுமே.
4. காலம் தாழ்த்தாது கீழ் உள்ள விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து 15.01.2000க்கு முன் அனுப்பவேண்டிய முகவரி:

விவிலியம்,
"கிளாரட் அகம்"
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

### விண்ணப்பம்

பெயர் : . . . . . . . . . . . . . . . . . . . .
முகவரி : . . . . . . . . . . . . . . . . . . . .
பங்கு : . . . . . . . . . . . . . . . . . . . .
வயது : . . . . . . . . . . . . . . . . . . . .
கல்வித்தகைமை : . . . . . . . . . . . . . . .
ஒப்பம் : . . . . . . . . . . . . . . . . . . . .

## பொதுநிலையினர் எவ்வழி திருச்சபையும் அவ்வழி பதாகைகளுடன் பொதுநிலையினர் தினம் கரவெட்டிப் பங்கில்

"பொதுநிலையினர் எவ் வழி திருச்சபையும் அவ்வழி" "பொதுநிலையினர் திருச்சபையின் எடுபிடிகள் அல்லர்" இவை போன்ற எழுச்சியூட்டும் சுலோக அட்டைகள் பலவற்றைத் தாங்கிப் பொதுநிலையினர் அணி திரண்டு செல்ல, துறவு நிலையினரைத் தொடர்ந்து பலி நிறைவேற்றும் பங்குத்தந்தை பலிப்பீடம் நோக்கிப் பவனியாக மாலை சூட்டி ஆரத்தி எடுத்து அழைத்து வரப்பட்டார்.

இவ்வாறு 21.11.99அன்று கிறிஸ்து அரசர் பெருவிழாவும், பொதுநிலையினர் தினமும் நினைவுகூரும் திருப்பலி கரவைப் பங்கில் கொண்டாடப் பட்டது.

"குருத்துவ நிலையினர், துறவு நிலையினர், பொதுநிலையினர் என்னும் முத்திறத்தாரும் முழுமையாகச் சேர்ந்து கட்டி எழுப்புவதே திருச்சபை. இப்படி அனைவரும் சேர்ந்து ஆழத்தோண்டி அத்திவாரமிட்டுக் கட்டிய திருச்சபை முப்பணி புரிந்து நிலையான வாழ்வுக்கு இட்டுச் செல்ல நல்ல துணையாக அமைவதாகுக" மறையுரையில் அருட்தந்தை யேசுரட்ணம் அடிகளார் இவ்வாறு குறிப்பிட்டார்.

கரவெட்டி மேய்ப்புப்பணிச் சபையின் பன்னிரு வலயங்கள் சார்பிலும் அர்த்தமுள்ள பன்னிரு காணிக்கைகள் அர்ப்பணமாக்கப்பட்டன. திருச்சபையை எடுத்துக்காட்டத் திருச்சிலுவை, உலக அமைப்பு, வேதாகம மாதிரி ஆகிய மூன்றும் தனித்தனியே எடுத்துவந்து இணைத்துவைத்து அர்த்தமாக்கியதும், முன்மதியுள்ள மணமகன் தோழியர் ஐவர் எரி விளக்கும், எண்ணெயும் எடுத்துவந்த அர்த்தமுள்ள காணிக்கையும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நின்றன.

## காரிருள் கலைத்துவரும் கதிரவன் —மலர்ந்த பனிப்பூக்கள்—

அருட்கலாநிதி ஜஸ்ரின ஞானப்பிரகாசம் அவர்களின் குருத்துவ வெள்ளிவிழா நினைவாக இளவாலை புனித கென்றீசியன் வெளியீடான "பனிப்பூக்கள்" என்னும் கிறிஸ்தவ பாடல்கள் கொண்ட ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா 13.11.99 அன்று இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

"இக்கல்லூரி ஆசிரியரான திரு. விஜயகுமார் அவர்களின் ஆக்கத்தில் உருவான இவ் இசைநாடா அவரதும் கென்றியரசர் கல்லூரியினதும் கன்னிப் படைப்பும் கல்லூரியின் சரித்திரத்தில் அதன் கலைத் துறைக்குப் பதித்த முத்திரையுமாக அமைகிறது. மேலும் கத்தோலிக்க திருமறையின் கலைத்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் விளங்குகின்றது" என, இசை நாடாவினை வெளியிட்டுவைத்த குருத்துவ வெள்ளிவிழா நாயகரும், கல்லூரியின் அதிபருமான அருள்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் குறிப்பிட்டார்.

இவ்இசைநாடா வெளியீட்டிற்கு ஆய்வுரை நடத்திய அழகியல் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. எல். திலகநாயகம் போல் அவர்கள் தமது உரையில் "ஒரு கலைஞனின் உருவாக்கம் முற்றுமுழுதாக பாடசாலைச் சமூகத்திலேயே தங்கியுள்ளது. ஒரு கிராமச் சூழலில் இசைத்துறையை வளர்த்தெடுப்பது பல இன்னலுக்குரியதாயினும் அங்குதான் பல கலைஞர்கள் இலை மறைகாயாக உள்ளனர். இத்தகைய கலைஞர்களை இனம்கண்டு உருவாக்கி உலகிற்கு அளிப்பது அச்சமூக மக்களின் பொறுப்பும், கலைப் படைப்பிற்கு அவர்கள் கொடுக்கும் மதிப்புமாகும். அத்துடன் பனிப்பூக்கள் இசைநாடா இறைவன்பால் எம்மை இட்டுச்செல்வதற்கு சிறந்த ஊடகமாகவும் சமகால சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கும் அர்த்தம் பொதிந்த பாடல்களையும் உள்ளடக்கியுள்ளது" என்று குறிப்பிட்டார்.

பதிலுரை வழங்கிய ஆசிரியர் விஜயகுமார் அவர்கள் "எனது கலைத்துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் எனது குருவும் யூபிலி நாயகருமான அருள் தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், கென்றியரசர் சமூகத்திற்கும் நான் சமர்ப்பிக்கும் அர்ச்சனைப் பூக்களாக இவ்இசைநாடா அமைவதுடன் 'இளவாலைக் கிராமத்தின் இசைத்துறை வளாச்சியை மேம்படுத்த வேண்டும் என்ற ஆவலினையும் நிறைவேற்றுகின்றது" எனக் குறிப்பிட்டார்.

கல்லூரியின் உப அதிபரும் இசைநாடாவின் ஆலோசகருமான அருள்திரு ஜேம்ஸ் சிங்கராயர் தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவிற்கு பருத்தித்துறை மறைக் கோட்ட முதல்வர் அருள்திரு பி. எம். இம்மானுவல், அருள்திரு ஜே. ஏ.யேசுதாஸ், முன்னாள் அழகியல் உதவிக்கல்விப் பணிப்பாளர் சங்கீதபூஷணம் திரு.கணபதிப்பிள்ளை, சண்டிலிப்பாய் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. கே. தனபாலசிங்கம் ஆகியோரும் மற்றும் பல பிரமுகரும் கலந்துகொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர்.

எஸ். எம். வுளோரன்ஸ்
(இளவாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நீதியின் கதவுகளைத் திறந்துவிடும்'

# யூபிலி ஆண்டை பாப்பரசர் ஆரம்பிக்கும் நிகழ்வு

**புனித பேதுருவானவர் சதுக்கத்தில் வெள்ளிச் சுத்தியலால் மூன்று முறை அடித்து பேராலயக் கதவைத் திறப்பார்**

வத்திக்கான் புனித பேதுருவானவர் பேராலயத்தின் யூபிலிக் கதவை வெள்ளிச் சுத்தியல் கொண்டு திருத்தந்தை தட்டித்திறந்து யூபிலி ஆண்டை ஆரம்பித்துவைப்பார். அதன் பின் அக்கதவின் வழியாக திருத்தந்தையும் பின் ஏனையோரும் ஆலயத்திற்குள் நுழைவர். ஏன் இந்தச் சடங்கு?

இஸ்பானிய யாத்திரிகர் பெரோரபூர் என்பவர் 1437ஆம் ஆண்டு தனது குறிப்பில் யூபிலிப் பலனை அடைக்கலம் தேடுதல் என்று குறிப்பிடுகிறார். கிறிஸ்துவுக்கு முன் உரோமைச் சாம்ராச்சியத்தில் லாத்தரனுக்கு அருகிலுள்ள ஒரு கோவில் அடைக்கலம் கொடுக்கும் இடமாகக் குறிக்கப்பட்டுள்ளது. எந்தக் குற்றவாளியும் அந்தக் கோவிலின் எல்லைக்குள் சென்றால் தண்டனை இல்லை. மன்னிப்பு அளிக்கப்படும்.

கிறிஸ்தவ சமயம் வளரும் காலத்தில் கொன்ஸ்ரன்ரைன் சக்கரவர்த்தியின் ஆட்சியில் திருத்தந்தை சில்வெஸ்ரர் கிறிஸ்தவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நிலை உண்டு எனக் கூறுகின்றார். பாவம் செய்தவர்கள் குறிப்பிட்ட ஆலயத்திற்குள் சென்றால் தண்டனையில்லை. ஆனால் காலப் போக்கில் எந்தக் கொடுஞ் செயல் செய்தவனும் இங்கு அடைக்கலம் தேடியபடியால் அச்சலுகை துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. எனவே அடைக்கலம் தேடும் அந்த ஆலயத்தின் குறிப்பிட்ட கதவைப் பூட்டி சுவர் கட்டி எழுப்பினார்கள்.

ஆனால் சில அருள் கிடைக்கும் காலங்களில் அக்கதவு திறக்கப்பட்டது. 50 அல்லது 100 வருடத்திற்கு ஒருமுறை இது நிகழ்ந்தது(பெரோரபூரின் கூற்றுப்படி). ஆண்டை நிர்ணயிப்பது திருத்தந்தை அவர்களே. 1450 ஆம் ஆண்டு யூபிலியில் கலந்துகொண்டவர்கள் ரபூரின் கூற்றுக்கு சாட்சியம் கூறுகின்றார்கள்.

புளோரன்ஸ் நகர வியாபாரி யுவானி பிரச்செல்லாய் என்பவர் இவ்வாறு கூறுகின்றார். "லாத்தரன் ஆலயத்தில் 5 க்தவுகள் இருந்தது. அதில் ஒரு கதவு சுவர்கட்டி முத்திரையிடப்பட்டிருக்கும். யூபிலி ஆண்டில் சுவர் இடிக்கப்பட்டு மக்கள் அக்கதவால் போய்வருவார்கள். யூபிலி முடிந்தபின் அக்கதவு மூடப்பட்டு சுவர் கட்டப்படும். யூபிலிக்கு வரும் யாத்திரிகர்கள் சுவர் இடிக்கப்படும்போது விழும் கற்கள், சீமெந்து ஆகியவற்றை பரிசுத்த பொருட்களாக எடுத்துச் செல்வார்கள். இச்சடங்கு முன்புபோலவே இப்பொழுதும் நடைபெறுகின்றது. யூபிலியில் வெளியிடப்படும் பதக்கங்களில் கதவு திறக்கப்படும் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது இதற்கு ஆதாரமாகும்".

இப்படியான சடங்கு நடைபெறும் கதவுகளைக்கொண்ட நான்கு பசிலிக்காக்கள் உரோமையில் உண்டு. புனித பேதுருவானவர் ஆலயத்தின் கதவை திருத்தந்தை வெள்ளிச்சுத்தியலால் மூன்று முறை அடித்து திறப்பார். அப்பொழுது நீதியின் கதவுகளை எனக்குத் திறந்துவிடும் என்று பாடுவார். ஏனைய பசிலிக்காக்களில் இதற்கென ஏற்படுத்திய கர்தினால்மார் இச்சடங்கை நடாத்துவார்கள்.

ஏன் இச்சடங்கு? இதற்குப் பொருளென்ன? ஆதாம் ஏவாள் இன்பவனத்தில் அருள்நிலையில் வாழ்ந்தபோது அலகையினால் தூண்டப்பட்டு இறைவனை மறந்து பாவம் செய்தார்கள். இதனால் அவர்கள் இன்பவனத்திலிருந்து துரத்தப்பட்டு கதவு மூடப்பட்டது. ஆனால் யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினால் அருள் கிடைக்கப்பெற்று கதவும் திறக்கப்பட்டது. தந்தையோடு எமக்கு உறவு ஏற்படுத்தப்பட்டது. இதையே இச்சடங்கு குறித்து நிற்கிறது. எனவே யூபிலியில் பாவப்பொறுத்தல் சடங்கே முக்கியம் பெறுகிறது.

யூபிலி ஆண்டின் பலனை நாம் பெற ஒப்புரவு அருட்சாதனம் பெற்று மனமாற்றம் காண்போம்.

இ. ம. ஜெயசீலன்.

## ஆர்ப்பரிப்பு

இறைமகனார் சமாதானப் பிரபு எங்கள்
இரட்சிப்பின் அப்பமாய் அவதரித்தார்
கறைபடிந்த வழிகளெலாம் நிறைவு காணும்
கண்ணீரின் பள்ளமெல்லாம் நிரவ வாகும்
நிறைதவறி நிமிர்ந்த மலை அகந்தைக் குன்று
நிர்மூல மாயழிந்து தாழ்ந்தே சாகும்
மறைநெறியில் மனதுயர்வோம் மகிழ்ச்சி நீடும்
மங்குலப்பெற புத்தாண்டில் மலர்ச்சி காண்போம்

துன்பமெனுங் கந்தையிலே பொதிந்த வாறாய்த்
தொல்லுலகின் பரிசாகப் பிறந்த பாலன்
அன்பினிலும் கருணையிலும் துயர்கள் மாளும்
அரவணைப்பின் கரங்களிலே அகிலம் வாழும்
இன்னிசையின் எக்காளத் தொனியில் கீதம்
எண்டிசையும் எதிரொலிக்கும் விண்ணின் வேந்தன்
மின்னலிடை மழையாகப் பொழியும் சாந்தி
மீதூரப் புத்தாண்டின் எழுச்சி காண்போம்


உன்னதத்தில் வீற்றிருந்தே உலகம் யாவும்
ஊடுருவிப் பார்ப்பவனைப் பாசான் நாட்டு
மன்னவனை வதைத்தவரைச் சிதறிப் போன
மந்தைகளாம் இஸ்ராயேல் மக்கள் தம்மைத்
தன்னகத்தே ஒன்றிணைக்கும் தயவின் ஊற்றைத்
தாழ்ந்தோரைக் கையேந்தித் தஞ்சம் நல்கும்
பொன்னொளியின் முச்சுடரைப் புகழ்வோம் இந்தப்
புத்தாண்டிற் சத்தியத்தின் புதையல் காண்போம்

புதியதொரு பாடலினை இசைத்தே என்றும்
புகழ்பாட வரமீந்த சீயோன் வேந்தன்
எதிரிகளின் சிறையுடைத்தே நல்லோர் தம்மை
இரட்சித்தே மீட்பளித்த இரக்கத் தேவன்
அதிசுடிவப் பாறைதனை நீரூற்றாக
ஆக்கவல்ல அதிகாரன் ஆரோன் மைந்தர்
துதிபுரிந்த நம்பிக்கைத் துணையை வாழ்த்தித்
தோத்தரிப்போம் புத்தாண்டில் அமைதி காண்போம்

யாழ் ஜெயம்

## ஈழமோ இரண்டாம் பெத்லகேம்?

ஈழமோ இரண்டாம் பெத்லகேம் ? – வருகைக்
காலமோ இரண்டாயிரமாண்டு ?
ஞாலமோ இன்னும் போர்ப்புயலில் ! – இனியும்
ஜாலமேன் ? நெருங்கி வா அருகில் !



முத்தான சமாதானம் முழு உலகும் காண
புத்தாயிரம் ஆண்டில் நீ வருவாய் !
யுத்தமும் ரத்தமும் சத்தமும் இல்லையென்ற
சத்தான செய்தியை நீ தருவாய் !

மன்னிக்கும் மனத்தோடு மனித மாண்புதனை
மதிக்கின்ற மனமும் நீ தந்திடுவாய் !
வன்னிக்கும் வழிதிறந்து வாழ்வளிக்கும் அரசொன்றை
கண்ணுக்கு முன்னாலே காட்டிடுவாய்

வாக்குகள் கேட்டு நிற்கும் வாய்ச்சொல் வீரர்களின்
போக்கினை மாற்றிட நீ வருவாய்
தடிதாக்குதல் தொடராமல் தமிழரை எதிரிகளாய்
பார்க்காத அரசொன்றை அமைத்திடுவாய் !

செம்மணிப் புதைகுழிகள் கைதுகள் வதைகள் காமம்
எம் மண்ணில் இனியும் இடம்பெறாமல்
செம்மையாய் வழிநடத்த செங்கோலைக் கையிலேந்தி
இம்மையில்(எம்மை ஆளும்)வேந்தனாய் நீ பிறந்து வாராய் !

– நவ[illegible]

## பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களே!

இறைவன் மனிதனான மாபெரும் நிகழ்வின் 2000 ஆண்டு நிறைவில் உங்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கடந்த ஆண்டு முழுவதிலும் தாங்கள் செய்த பலதரப்பட்ட பங்களிப்புக்களை நன்றியோடு நினைவு கூருகின்றோம். யூபிலி ஆண்டில் பாதுகாவலனின் 125 வது அகவை நிறைவில் விழா எடுக்க நாம் பாக்கியம் பெற்றவர்களே. தமிழ் மக்களுடைய நீண்ட கால ஏக்கங்களும், ஆசைகளும் யூபிலி ஆண்டில் நிறைவு பெறவும், முழு மனித சுதந்திரத்தோடு வாழக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகவும் இறைவனை வேண்டுகின்றோம். உங்கள் அனைவருக்கும் 1999 நத்தார் 2000 யூபிலி புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆசியுடன்

ரூபன் மரியாம்பிள்ளை

பாதுகாவலன் ஆசிரியர்

# யூபிலி ஆண்டை வீடுகளில் ஒளியேற்றி ஆரம்பியுங்கள்

## யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் யாழ் மறைமாவட்ட மக்களுக்கு அழைப்பு

யூபிலி ஆண்டு டிசெம்பர் 24ஆம் நாள் நள்ளிரவில் ஆரம்பமாகின்றது. எம் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் வத்திக்கானில் உள்ள புனித பேதுருவானவர் பேராலயக் கதவினை வெள்ளிச் சுத்தியல் கொண்டு மூன்று தடவை தட்டி திறந்து தாமும் உள்ளே சென்று இறை மக்களையும் உள்ளே அழைத்து யூபிலி ஆண்டை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

யாழ் மறை மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க மக்கள் அனைவரும் டிசெம்பர் 24ஆம் நாள் நள்ளிரவில் வீடுகளில் ஒளியேற்றி யூபிலி ஆண்டினை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்க வேண்டுகின்றோம். அவ்வேளையில் திவ்விய பாலனுக்குரிய மன்றாட்டுமாலையைச் சொல்லி எமது மண்ணிற்கு அமைதியும் சமாதானமும் கிடைக்கச் செபிக்கும்படி அழைப்பு விடுக்கின்றோம். (இம் மன்றாட்டுமாலை மோட்சபாதை புத்தகம் 205ஆம் பக்கத்தில் உள்ளது.) நள்ளிரவில் செபிக்க வசதியற்றவர்கள் 24ஆம் திகதி மாலையிலும் செபிக்கலாம்.

**இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். (லூக்.2:11)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. ? 197